ஆண்டு - 10

தமிழ்மொழி

செயல் நூல்

[விடைக்குறிப்புக்கள் சேர்ந்தது]

(திருத்திய மூன்றாம் பதிப்பு)

1987 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்பட்ட 10, 11 ஆம் ஆண்டுக்குரிய புதிய பாடத்திட்டத்தைப் பின்பற்றியும் "தமிழ் ஆண்டு 10" "தமிழ் இலக்கியம்" என்னும் பாடநூல்களைத் தழுவியும் மாதிரிகை வினாப் பத்திரத்தைக் கருத்திற் கொண்டும் ஆக்கப்பெற்றது.

- பகுதி I — 40 பல்தேர்வு வினாக்கள்.
- பகுதி II — கட்டுரை, பந்தியமைப்பு, கடிதம், அறிக்கை, சுருக்கம்.
- பகுதி III — தமிழ் ஆண்டு - 10, தமிழ் இலக்கியம் ஆகிய பாடநூல் வினாக்கள்.
- மூன்று பகுதிகளுக்குமுரிய விடைக்குறிப்புக்கள்.

ஆக்கம்:

பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே.)

வெளியீடு:

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,

235, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 55/-

தமிழ்மொழி

செயல் நூல்

*

ஆண்டு - 10

*

ஆக்கம்:
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே.)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

திருத்திய மூன்றாம் பதிப்பு: 1992

பதிப்புரிமை ஆசிரியருக்கே.

அச்சுப்பதிப்பு:
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, B. A. தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235. காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மதிப்புக்குரிய ஆசிரியர்க்கு. . . .

✲ 1988 ஆம் ஆண்டு முதன்முதல் நடைபெறும் புதிய கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சைக்குரிய கல்விநெறி, ஆண்டு 10, 11 என்னும் புதிய பெயர்ப் பிரிவுகளையுடையதாய் அமைவதோடு அனைத்துப் பாடப் பொருட் பரப்பும் முன்னரைவிட ஆழமும் அகலமுங் கொண்டதாய் அமைந்துள்ளது. தமிழ் மொழிப் பாடத்தைப் பொறுத்தவரை, பாடநூலும், 'தமிழ் இலக்கியம்' என்னும் பெயர் பூண்ட இலக்கிய நூலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆயின், புதிய பாடத்திட்டத்தின்படி அடிப்படை இலக்கணமும் மொழித்திறனும் 7, 8, 9 ஆம் ஆண்டுகளிற் கற்றனவற்றையும் உள்ளடக்கியனவாக அமைந்துள்ளன. இதனால் 10 ஆம் 11 ஆம் ஆண்டுக்குரிய அடிப்படையிலக்கணப் பொருட்பரப்பு, பெரிதும் விரிவடைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. ஆக்வே இவ்வகுப்பு மாணவர்கள் மீட்டல் முறையில் அதனை மீண்டுங் கற்றல் அவசியமாகிறது.

✲ இந்நிலையில், ஆண்டு 10 க்குரிய இச்செயல்நூலின் பாடத்திட்டம், ஆற்றல் சான்ற ஆசிரியர்களின் ஆலோசனையை உள்ளடக்கொண்டு பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

1ஆம் பருவம்: 1. பாடநூல்கள்: தமிழ் ஆண்டு - 10 இல் முதல் மூன்று பாடங்கள்; தமிழ் இலக்கியத்தில் கம்பராமாயணக் காட்சி - 5 கட்டுரை.

2. அடிப்படையிலக்கணம்: எழுத்து, சொல் என்னும் இரு அலகுகளும் தமிழ் ஆண்டு 10 இல் உள்ள வாக்கிய வகைகளும்.

3. மொழித்திறன்: ஒத்தகருத்து எதிர்க்கருத்துச் சொற்கள், பழமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர் முதலியன.

4. ஆக்கமுயற்சி: பந்தியமைப்பு, கட்டுரை.

2ஆம் பருவம்: 1. பாடநூல்கள்: தமிழ் ஆண்டு - 10 இல் 4 - 7 பாடங்கள், தமிழ் இலக்கியத்தில் நளவெண்பா, இஸ்லாமியக்கலையும் பண்பும், நாலடியார்.

2. அடிப்படை யிலக்கணம்: பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும்; தமிழ் - ஆண்டு 10 இல் உள்ள வாக்கியக் கூறுகள்.

3. மொழித்திறன்: ஒத்தகருத்துச் சொல் முதலியனவாகிய முதலாம் பருவத்தில் இடம்பெறாதன.

4. ஆக்கமுயற்சி: பந்தியமைப்பு; கட்டுரை; கடிதம்; அறிக்கை.

3ஆம் பருவம்: 1. பாடநூல்கள்: தமிழ் ஆண்டு - 10 இல் 8 9 பாடங்கள்; தமிழ் இலக்கியத்தில் மாதரும் மலர்ப் பொய்கையும், ஆசாரக்கோவை சிரிக்கத்தெரிந்த பாரசீகர். (மீதியுள்ள பத்துப் பாடங்களும் ஆண்டு 11 க்கு உரியன)

2. அடிப்படை இலக்கணம்: இடைச்சொல்லும் உரிச்சொல்லும்; தமிழ் ஆண்டு - 10 இல் உள்ள வழுவும் வழாநிலையும்; அணிகள்.

3. மொழித்திறன்: ஒத்தகருத்துச்சொல் முதலியனவாக 1 ஆம் 2 ஆம் பருவத்தில் இடம்பெறாதன.

4. ஆக்கமுயற்சி: பத்தியமைப்பு; கட்டுரை; கடிதம்; அறிக்கை; சுருக்கம்.

✲ இச்செயல் நூலில் 400 பல்தேர்வு வினாக்களும், பகுதி 11 க்குரிய 30 வினாக்களும் பகுதி 11 குரிய 45 வினாக்களும் இடம்பெறுகின்றன.

✲ இச்செயல் நூலில் முதலாம் பருவத்துக்கு மூன்றும், இரண்டாம் பருவத்துக்கு மூன்றும், மூன்றாம் பருவத்துக்கு நான்குமாகப் பத்து வினாப்பத்திரங்கள் உண்டு

✲ தமிழ் ஆண்டு - 10 என்னும் நூல் அவ்வகுப்புக்குரிய சிறப்பு நூலாக அமைவதால் அந்நூற் பாடங்கள் சம்பந்தமான பல்தேர்வு வினாக்களும் பகுதி 11 க்குரிய சில வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

✲ வேகமான வாசிப்பும் வாசிப்பனவற்றை நுணுக்கமாக விளங்குமாற்றலும் பெற்றுவிட்டால் மாணவர் கல்வியென்னும் நீள்வழியில் அரைப் பங்கைக் கடந்தவராவர். இவ்வாற்றலை மாணவர் வளர்க்கும் வகையிற் பலதரப்பட்ட உரைப்பகுதியும், வினாக்களும் இடம்பெறுகின்றன. செய்யுளைப் படித்துச் சந்திபிரித்துப் பொருளறிவும் ஆற்றலைப் பெறுவதோடு, செய்யுளை நயக்கும் தன்மையிலும் தேர்ச்சி பெறும்வகையிற் செய்யுள் பற்றிய வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

✲ ஏனைய செயல்நூல்களை உளந்தேற்றுப் பயன்செய்த ஆசிரியர்களும், மாணவர்களும் இந்நூலையும் விருப்புடனேற்றுப் பயன்படுத்துவர் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

ஆக்கியோன்

- 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டிற் படித்த இலக்கணப் பகுதிகளையும், 10 ஆம், 11 ஆம் ஆண்டிற் கற்கவேண்டிய பகுதிகளையும் முழுமையாகத் தரும் நூல்.
- அடிப்படை இலக்கணத்தை ஆசிரியர்கள் கற்பிப்பதற்கு வழிகாட்டியான நூல்.
- அடிப்படை இலக்கணத்தை மாணவர் தாமே கற்றறியும் வகையில் அமைந்த நூல்
- ஒவ்வோர் அகின் பின்னும் தேர்வுக்குரிய பல்தேர்வு வினாக்கள் கொண்ட நூல் ''அடிப்படை இலக்கணம்'' (ஆண்டு 10, 11.)

✲ வாசிப்புத்திறனை வளர்க்க ✲ கிரகிக்குமாற்றலை விருத்திசெய்ய
✲ பத்தியமைப்பை அறிய ✲ கட்டுரைக் கருத்துக்களைச் சேகரிக்க
✲ கட்டுரை எழுதும் ஆற்றலடைய உதவும் தனித்தன்மைவாய்ந்தநூல்

செயல்: 1

பகுதி: I

1. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.

1. சன்னோட்டம் இல்லாது நீதிநிலை அறிதல் நீதிபதியின் கடமை - கண்ணோட்டம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) கடைக்கண் பார்வை (2) அருள் செய்தல்
(3) தாட்சணியம் (4) அங்கிங்குபார்த்தல்

2. பரிதானம் பெறும் ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படும் - பரிதானம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) சிறந்த தானம் (2) கைக்கூலி (3) வேதனம் (4) அன்பளிப்பு

3. அசதிகள் யாசகம் செய்து சீவனம் நடத்தினர்-யாசகம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) ஈகை (2) தொழுகை (3) பிச்சை (4) உணவளித்தல்

4. யௌவனப் பருவத்திற் காணுங் கவலைகள் அநந்தம் - யௌவனம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) இளமை (2) அழகு (3) அகலட்சணம் (4) விருத்தாப்பியம்

2. புள்ளிக் கோடிட்ட பகுதியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

5. மாறனின் வீடு குண்டு வீச்சால் ..... ஆகத் தகர்ந்தது.
(1) சின்னாபின்னம் (2) சின்னபின்னம்
(3) சின்னப்பின்னம் (4) சின்னோப்பின்னம்

6. நாலாம் மாடியிலிருந்து அவன் .. .. விழுந்தான்.
(1) எக்கச்சக்கமாக (2) இதம்பதமாக
(3) அறம்புறமாக (4) நெளிவுசுளிவாக

7. ஊழற் குற்றத்தில் அகப்பட்ட ஊழியர்மீது ..... எடுக்கப்படும்.
(1) இராணுவ நடவடிக்கை (2) மாற்று நடவடிக்கை
(3) நீதி நடவடிக்கை (4) ஒழுங்கு நடவடிக்கை

8. பாலைவனம் கண்ணுக்கெட்டிய தூரம் .....ஆகக் காட்சியளித்தது.
(1) அகன்றவெளி (2) நீண்டவெளி
(3) வெட்டைவெளி (4) திறந்தவெளி

3. பின்வரும் தொடர்மொழிகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிக.

9. வெளிப்படைப் பொருளிற் பழித்தும் மறைபொருளிற் புகழ்ந்தும் பாடப்படும் பாடல்,

(1) அங்கதம் (2) சிலேடை
(3) நித்தாஸ்துதி (வஞ்சப்புகழ்ச்சி) (4) அறம்பாடல்

10. மலைச்சாரலில் குறவர் வாழுமிடம்,

(1) குறிஞ்சி (2) குறிச்சி 3 குன்றம் 4) குன்னக்குடி.

11. வயலும் வயல் சார்ந்த இடமும்,
(1) குறிஞ்சி (2) முல்லை (3) மருதம் 4) நெய்தல்

12. தத்தை, தாய், முன்னோர் வழியாகத் தேடப்பட்ட பொருள்.
(1) தாயம் (2) முதுசொம் (3) உடைமை 4) சீதனம்

4. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

13. வெள்ளைச் சொல் கொண்டு கவிபாடத் துணிந்த என் அறிவுமையை என்னென்பது - வெள்ளைச்சொல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,

(1) தூய தமிழ்ச் சொல் (2) இயற்சொல்
(3) பொருணயம் இல்லாச் சொல் (4) எதுகைச்சொல்

14. இன்று எதனையும் ஆராயாமல் நம்பும் வழக்கம் மலையேறி விட்டது - மலையேறி விட்ட து என்னும் மரபுத்தொடரின் பொருள்,

(1) உயரப் போய்விட்டது (2) பெரு வழக்காய் விட்டது
(3) வழக்கொழிந்து விட்டது (4) மலைமேல் ஏறி விட்டது

15. "பருமரத்தைப் பற்றிய பல்லியும் பாழ் போகாது" - இப்பழ மொழியின் கருத்து,

(1) பெரிய மரத்தில் இருக்கும் பல்லி சுகமாக வாழும்.
(2) தக்க பாதுகாப்போடு வாழ்ந்தால் துன்பம் அணுகாது
(3) பெரிய மரமே பல்லி வாழ்வதற்குப் பொருத்தமான இடம்.
(4) பெரியோரை அலட்சியம் செய்தல் நன்றன்று.

16. இழிந்தோர் என மதிக்கப்படுவோர் மத்தியில் அறிஞர் தோன்று வது அதிசயமன்று - இக்கருத்தை விளக்கும் பழமொழி.

(1) வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு.
(2) நத்தை வயிற்றில் முத்து பிறக்கும்.
(3) விரலுக்குத் தக்கதுதான் வீக்கம்.
(4) வீட்டுக்கு வீடு வாயிற்படி.

17. அறிஞர் மத்தியிலே எனது தரக்குறைவான நூலை அறிமுகப் படுத்த முயன்றது ..... இருந்தது - இடை வெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான உவமைத் தொடர்,

(1) மயிலைப் பார்த்து வான்கோழி ஆடியதுபோல
(2) புலியைப் பார்த்துப் பூனை குறிசுட்டுக் கொண்டதுபோல
(3) கொல்ல் தெருவில் ஊசி விற்பதுபோல
(4) கண்ட பாவனையிற் கொண்டை முடிப்பதுபோல.

5. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

18. பின்வருவனவற்றிற் பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்த வாக்கியம்,

(1) இன்று போய் நாளை வா
( ) இது அவையை அடக்கும் முகம்
(3) என் அறியாமை இழிந்தபடி என்னை!
(4) நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற்றேன்.

19. ''எதனால் வெட்டினாய்?'' என்ற வினாவுக்குக் ''கத்தியால்'' என்று விடையளிக்கிறான் ஒருவன். ''கத்தியால்'' என்பது பொருள் முடிவு பெற்ற வாக்கியம் எனக் கொண்டால் அதில்,

(1) எழுவாய் தொக்கு வந்தது
(2) பயனிலை மறைந்து வந்தது
(3) செயப்படுபொருள் தொக்கு வந்தது
(4) மூன்றும் தொக்கு வந்தன

20. எழுவாயும் செயப்படுபொருளும் தொக்கு வந்த வாக்கியம் எது?

(1) இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை
(2) வானமென்னும் நீனிறப் பந்தர்
(3) எப்படியும் நாளைக்கு உழுது முடிப்பேன்
(4) தன்னை நேசியாதவன் உலகை நேசியான்

21. ''அறிஞர்க் கழகு அகத்துணர்ந் தறிதல்'' - இதன் பயனிலை,

(1) அறிதல் (2) ஆகும் (3) உணர்ந்தறிதல் (4) அழகு

22. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன அடைமொழி யோடு சேர்ந்து வந்த வாக்கியம்,

(1) பென்னம் பெரிய கொக்கு சின்னஞ்சிறிய மீனைத் தின்றது.
(2) கொக்கு குளக்கரையில் சின்னஞ்சிறிய மீனைத் தின்றது.
(3) பென்னம்பெரிய கொக்கு குளக்கரையில் சின்னஞ்சிறிய மீனைத் தின்றது.
(4) பென்னம் பெரிய கொக்கு குளக்கரையில் மீனைத் தின்றது

23. பின்வருவனவற்றுள் விருப்பு வாக்கியம் எது?

(1) வான்முகில் வழாது பெய்க (2) நீயினாற் சுட்டபுண் ஆறும்
(3) அன்பா ஆயுதமா சிறந்தது
(4) நேற்று கலைநிகழ்ச்சி நடைபெறவில்லை

24. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம் எது?

(1) இச்செய்யுளிற் குற்றம் இருக்கிறது என்று நக்கீரர் தருமிக்குக்கூறினார்.
(2) சங்க மண்டபத்தில் இருந்த புலவர்கள் திகைத்தனர்.
(3) வண்டு முரல, தாமரை மலர, சங்கம் முழங்க, சூரியன் உதித்தான்.
(4) வானிற் கருமுகில்கள் கூடின; ஆனால் மழை பெய்யவில்லை.

25. தமிழ் நெடுங் கணக்கு ஓழுங்கில் அமைந்த எழுத்துக்கள்,

(1) க். ஞ். ண். ட். (2) ச் த். ம். ல் (3) ர். ல். வ். ய்
(4) ய். ந். ழ். ள்

26. மொழியிடையில் மூன்று மெய்கள் மயங்கிவந்த சொல்,

(1) வாழ்க்கை (2) தாழ்வு (3) சீர்மை (4) நற்றவம்

27. குற்றியலுகரம் அல்லாதது,

(1) காப்பு (2) தேடு 3) கணக்கு (4) எழு

28. பின்வருவனவற்றில் பொது மொழியாய் அமைந்த சொல்,

(1) தருவாய் (2) போவாய் (3) செவ்வாய் (4) செல்வாய்

29. ''நள்ளிரவில் அவலக்குரலொன்று கேட்டது'' இவ்வாக்கியத்தில் வந்த சொற்கள்,

(1) பெயர், வினை (2) பெயர், வினை, இடை, உரி
(3) பெயர், இடை, உரி (4) பெயர், வினை, இடை

30. பெயராயும் வினையாயும் உரியாயும் வரத்தக்க சொல்,

(1 கேள் 2) துணி (3) செல் 4) கதி

3. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுங்கள்.

31. தமிழகமும் நிலமும் என்னும் பாடத்தின் கருப்பொருள்,

(1) தமிழக ஊர்ப்பெயர்க் காரணம் 2) நால்வகைப்பட்ட பிரிவு
(3) மலைசார்ந்து எழுந்த ஊர்ப்பெயர் (4) பூமியும் தமிநாடும்

32. சிறப்புமிக்க முருகப் பதியாகவிளங்காத ஓரிடம்,

(1) தணிகைமலை (2) பசுமலை (3) பழனிமலை
(4) சுவாமிமலை

33. பொருள் சம்பாதிக்கும் நெறியல்லாதது.
(1) வித்தை கற்பித்தல் (2) வணிகம்
(3) இராசசேவை (4) யாசகம்

34. நாட்டுவேடர் எனப்படுவோர்,
(1) நாட்டிற் குடிபேறிய வேடர்
(2) செல்வமுடையவராய்ப் பிச்சை எடுப்போர்
(3) நாகரிகமடைந்த வேடர் (4) நாகரிகமடையாத வேடர்

35. இலக்கியம் என்பதற்குப் பண்டைத்தமிழர் கொண்ட பொருள்
(1) செய்யுள் (2) நோக்கம்
(3) புருடார்த்தம் (4 கற்பனை

36. உண்மை இலக்கியம் பற்றிப் பண்டைத் தமிழர் கொண்ட கொள்கைக்குப் பொருந்தாதது
(1) விழுமிய கருத்துடையது
(2) பிற்காலத்தார்க்கும் பயன்படுவது
(3) தழுவிச் செய்யப்படாதது
(4) புருடார்த்தங்களையே கூறுவது

7. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்யுங்கள்.

அழியாப் பொருளாகிய கல்வியையும் கல்வித் தேர்ச்சிக்கு உரிய புத்தகங்களையும் கொள்ளுதற்கும், பசி முதலியவைகளில் வருந்தாது கவலையற்றிருந்து கல்வி கற்றற்கும் கற்ற கல்வியை அழகு செய்து தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்தற்கு கருவி செல்வமே. கல்வியுடையவரும் வறியவராயின், பசி நோயினாலும் தீராக் கவலைகளினாலும் வருந்தி, தாம் முன்கற்ற கல்வியையும் மறந்து விடுவார். வறியவர் மெய்ந்நூற் பொருளைத் தெளிய அறிந்து போதித்தாராயினும், 'நாம் இவர் சொல்லை விரும்பிக் கேட்போமாயின் கண்ணோட்டத்தினால் இவர் குறையை முடித்தல் வேண்டுமே? என்று பயந்து யாவரும் கோ தொழிவர். ஆதலின் அவர் வாய்ச்சொல் பயனில் சொல்வாய் முடியும்.

37. இப்பந்தியின் மையப்பொருள்.
(1) செல்வத்தின் சிறப்பு (2) கல்விக்கும் செல்வம் ஆதாரம்
(3) செல்வமுடையோரே கற்றோர்
(4) கல்வி தமக்கும் பிறருக்கும் பயன்படும்

8. உரையாசிரியர் மையப்பொருளை விளக்கக் கைக்கொண்ட முறை.
(1) உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் கருத்தைக் காட்டி விளக்குகிறார் (2) உதாரணங்காட்டி விளக்குகிறார்

(3) மிகையான, பொருந்தாத செய்திகளைக் கூறி விளக்குகிறார்
(4) வேற்றுமை காட்டி உறழ் பொருவு முறை மூலம் விளக்குகிறார்

39. ''அழியாப் பொருளாகிய ..... கருவி செல்வமே'' என்ற முதல் வாக்கியத்தின் இயல்பு.
(1) வேண்டாதன கூறல் (2) வேறு வேறு கருத்துக்கள் விரவுதல்
(3) காரண காரியத் தொடர்பு உடைமை
(4) வருணனை கலந்திருத்திருத்தல்

40. பின்வருவனவற்றில் உரையாசிரியரின் கருத்துக்கு ஒவ்வாத கூற்று
(1) கல்வித் தேர்ச்சிக்குச் செல்வம் இன்றியமையாதது
(2) வறியவர் மெய்ந்நூற் பொருளைத் தெளிய அறியமுடியார்
(3) கல்வி தமக்கும் பிறர்க்கும் பயன்படும்
(4) செல்வமில்லார் வாய்ச்சொல் பயனில் சொல்லாய் முடியும்

பகுதி II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக் குறையாமல் ஒரு பந்தி எழுதுக.

(அ) மத்தியானவேளை; வெயிற் கொடுமை தாங்கமுடியவில்லை; அவ்வேளை கடலிலிருந்து கடற்காற்று குளுகுளுவென வீசுகிறது - இதைத்தொடர்ந்து இதற்கான காரணங் காட்டி எழுதுக.

(ஆ) மழைக்கான அறிகுறி எங்கும் காணப்படுகின்றது - இதனை மையப் பொருளாகக் கொண்டு வருணனை முறையில் எழுதுக

(இ) ''ஒற்றுமையே பலம்'' - இதனை மையப்பொருளாகக் கொண்டு உதாரணங் காட்டி எழுதுக.

(ஈ) உணவும் நகர வாழ்க்கையும்; உணவும் கிராம வாழ்க்கையும் - இக்கருத்தை வேற்றுமை காட்டி எழுதுக.

2. பின்வரும் பந்தியிலுள்ள வாக்கியங்கள் ஒழுங்கினறிக் கருத்துத் தொடர்பின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்திக் கருத்துத் தொடர்புள்ள பந்தியாக எழுதுக.

(அ) அவர்கள் ஒரு வாரமாக அன்னாகாரமின்றி விரதம் அனுட்டித்தவர்கள். (ஆ) சூரியன் உச்சியை அடைந்து சிறிது நேரம் ஆகிவிட்டது. (இ) வந்தவர்கள் ஒருகணம் அங்கே நின்று பார்க்கிறார்கள் (ஈ) கோயில் மதில்களின் நிழல்கள் நீளத் தொடங்குகின்றன. (உ) ஒரு கோடியிலே பக்தர்கள் உடலை மட்டும் மறைக்கக்கூடிய ஆடை அணிந்தவர்களாய் அங்கே வருகிறார்கள். (ஊ) வெறும் தரை

யில் நித்திரை செய்தவர்கள் (எ) இடையறாமல் முணுமுணுத்துக்) கொண்டிருந்த சத்தம் திடீரெனப் பேரிரைச்சலாகக் கேட்கிறது.
(ஏ) அவர்களுடை பார்வையிலிருந்து அவர்கள் ,இந்த உலகத்தைச் சேர்ந்தவர்களாகத் தெரியவில்லை,

(குறிப்பு: முதல் வாக்கியம்: சூரியன் உச்சியை அடைந்து .....

3. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் பந்தி பிரித்து எழுதுங்கள்.

(அ) என் மனத்தை விட்டு நீங்காத ஒரு சோக நிகழ்ச்சி.
(ஆ) நீர் விரும்பும் ஒரு பெரியாரின் வாழ்க்கையும் பணியும்.
(இ) கடற்கரையில் ஒரு மாலை வேளை.
(ஈ) மரங்களை வளர்ப்பது ஏன் அவசியமானது?

4. பூமி, நானிலம் எனப்பட்ட காரணம் யாது? நானிலம் பற்றி விளக்குக.

பகுதி: III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) ''பிள்ளைகாள், நீவிர் பெற்ற அருங்கனியை ஐவீரும் ஒருவீராய்ப் பகிர்ந்து நுகர்மின்''

(ஆ) ''நீ சொல்லி நான் போகப்போவதில்லை. உன் வஞ்சனைகளை இன்று தேற்று அன்று, நெடுங்காலமாக அறிவேன்''

(இ) ''மகனே, இவன்பின் செல்; தம்பி எனும் படியன்று; அடியாரின் ஏவல் செய்தி; மன்னும் நகர்க்கு இவன் வந்திடிம் வா; அது அன்றேல், முன்னம் முடி''

2. பின்வரும் செய்புள்களைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ''ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மன்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ''

(1) இப்பாடலின் பொருளை உமது வசன நடையில் எழுதுக.
(2) இப்பாடலில் வரும் உவமையை விரித்து விளக்குக.

(ஆ) ''ஆளையாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''

(1) இப்பாடலின் பொருளை உமது வசனநடையில் எழுதுக.

(2) ''இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா'' என இராமன் கூறிய காரணம் யாது?
அக்கூற்றிலிருந்து புலப்படும் இராமனைப் பற்றிய உமது மனப்பதிவை எழுதுக.

(3) ''வள்ளல்'' ''நல்கினான்'' என்ற சொற்கள் வாயிலாக நீர் உணர்வது யாது.

3. கம்பராமாயணக்காட்சியில், அசையாச்சுதற் கட்டுரையாசிரியர் அவைக்கு அடக்கும் மூலத்தை எவ்வாறு கையாளுகிறார்?

4. இராமன் காடுசெல்லும் பொழுது, இன்று தமிழில் வழங்கும் வான்மீகி இராமாயணம் கூறுவதென்ன? கம்பராமாயணம் கூறுவதென்ன? எக்கூற்றுப் பொருத்தமானது? ஏன்?

செயல்: 2

பகுதி: I

1. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. ''மூங்கையான் பேசலுற்றான் என்ன யான் பேசலுற்றேன்''. மூங்கையான் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) முடவன் (2) குருடன் (3) செவிடன் (4) ஊமையன்

2. இராணுவ அட்டூழியத்தால் நல்குரவு என்னும் காட்டுத்தீ பரவி மக்களை வாட்டியது - நல்குரவு என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) கொடுமை (2) பட்டினி (3) வறுமை (4) தொற்றுநோய்

3. குண்டு வீச்சால் மனைவி மக்களை இழந்த குமரன் நடைப்பிணமாய்த் திரிந்தான் - நடைப்பிணம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) நடக்கும் பிணம் (2) பயனற்றவன்
(3) சோம்பேறி (4) உயிரற்றோன்

4. அகந்தை கொண்டவர் அழிவது உறுதி - அகந்தை என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) பணிவு (2) துணிவு (3) மகிழ்ச்சி (4) இரக்கம்

5. 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே''-இரண்டகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) துரோகம் (2) ஆதரவு (3) நேர்மை (4) சிறப்பு

2. புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தை நிரப்பத்தக்க சொல்லைத் தெரிக.

6. விசுவாச காதகம் என்னும் வடசொற்குரிய தமிழ்ச்சொல்.....
(1) கொலைமுயற்சி (2) நம்பிக்கையீனம்
(3) நேர்மை (4) நம்பிக்கைத்துரோகம்

7. அரசப் பேரவைத் தேர்தலில் சாவகச்சேரித் தொகுதிக்கு இரு..... போட்டியிட்டனர்.
(1) பிரதிநிதிகள் (2) வேட்பாளர்
(3) உறுப்பினர் (4) அங்கத்தவர்

8. நீதிமன்றில் சமுகமளிக்காத பிரதிவாதிக்கு நீதிபதி..... அனுப்பும் படி பணித்தார்.
(1) உத்தரவு (2) முறைப்பாடு
(3) அழைப்பாணை (4) தடையுத்தரவு

9. குண்டு வீச்சு விமானத்தைக் கண்ட மக்கள்.....அடைந்தனர்.
(1) பதற்றம் (2) பதட்டம் (3) பதற்றம் (4) பதற்றம்

3. பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

10. அறம், பொருள், இன்பம், வீடு, எனப்படுவன.
(1) நான்கு பொருள் (2) நாற்பாதம்
(3) மனுதர்மம் (4) புருடார்த்தம்

11. கடலும் கடல் சார்ந்த இடமும்.
(1) குறிஞ்சி (2) முல்லை (3) மருதம் (4) நெய்தல்

12. போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய எழுத்துருவிலான பத்திரம்.
(1) உறுதி (2) சாசனம் (3) ஆவணம் (4) சான்றுப்பத்திரம்

13. தோற்றவர் மேற் போருக்குச் செல்லாமை.
(1) கழிஞை (2) தழிஞ்சி (3) வஞ்சி (4) நொச்சி

4. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

14. "திரும்பத் திரும்பக் கேட்கிறேன்; கிளிப்பிள்ளைப்பாடம் ஒப்புவிக்கிறான்" கிளிப்பிள்ளைப் பாடம் என்னும் மரபுத் தொடரின் கருத்து.
(1) கிளியின் பேச்சு (2) கிளிக்குக் கற்பிக்கும் பாடம்
(3) திட்டவட்டமாய்க் கூறல் (4) சொன்னதையே சொல்லுதல்

15. வேண்டாதவர் ஒருவரின் துன்பத்தைக்கண்டு இரங்குவதுபோல நடித்தல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
(1) கூதுகுத்துதல் (2) முதலைக்கண்ணீர் வடித்தல்
(3) நாக்குவளைத்தல் (4) கசகரணம் போடுதல்

16. அனுபவக் குறைவுடையோரின் முயற்சி முழுப்பலனையும் தருவ தில்லை விளக்கும் பழமொழி,
(1) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
(2) சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது
(3) மந்திரமறியாதவன் பூசை விடிய விடிய
(4) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

17. "பங்குனி என்று பருப்பதுமில்லை; சித்திரை என்று சிறுப்பது மில்லை" என்னும் பழமொழியின் பொருள்,
(1) பங்குனி நல்லமாதம்; சித்திரை சிறப்பற்ற மாதம்
(2) இன்பத்தில் இன்பமும் துன்பத்தில் துன்பமும் அனுபவித்தல்
(3) எந்த நிலையிலும் விருப்பு வெறுப்பற்ற சுபாவம்
(4) வருடத்தில் எல்லா மாதங்களும் சமனானவையே.

18. காப்பாற்ற வேண்டியவர்கள் காப்பாற்றப்பட வேண்டியவர்களை அழிக்குஞ் செயலுக்குக் கூறத்தக்க உவமை,
(1) இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாதது போல
(2) கடலாற் கொள்ளப்பட்ட நிலம்போல
(3) குருடனுக்குக் குருடன் வழிகாட்டியது போல
(4) வேலியே பயிரை மேய்ந்தாற்போல

5. பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
19. "ஐயோ! ஊட்டி ஊட்டி வளர்த்தேனே!" என்று ஏங்கிக் கூறு கிறான் ஒரு தாய். அவன் கூற்றில்,
(1) எழுவாய் தொக்கு வந்தது.
(2) செயப்படுபொருள் தொக்கு வந்தது
(3) எழுவாயுஞ் செயப்படுபொருளும் தொக்கு வந்தன
(4) எழுவாயும் பயனிலையும் தொக்கு வந்தன.

20. பின்வருவனவற்றுள் இரு வேறு எழுவாய்கள் தொக்க வாக்கியம்,
(1) தட்டுங்கள்; திறக்கப்படும்
(2) சொல்வதைக்கேள்; சென்னபடி நட.
(3 சொல்வேன்; சொன்னபடி செய்வேன்.
(4) நேற்றுச் சொன்னார்; இன்று மறுக்கிறார்

21. கேளுங்கள்; கொடுக்கப்படும் - இதில் தொக்கு வந்த வாக்கிய உறுப்புக்கள்,
(1) ஒரு எழுவாய், ஒரு செயப்படுபொருள்
(2) ஒரு எழுவாய், இரு செயப்படுபொருள்
(3) இரு எழுவாய், இரு செயப்படுபொருள்
(4 இரு எழுவாய், ஒரு செயப்படுபொருள்

22. பின்வருவனவற்றில் வந்த விருப்பு வாக்கியம் எது?
(1) நன்றி மறத்தல் நன்றன்று (2) செய்ந்நன்றி மறக்கலாமா
(3) நன்றி மறப்பது பாவம் (4) நன்றி மறவீராக

23. காலம் பொன்னுக்குச் சரி என்ற உயர்ந்த குறிக்கோளை மாணவர் பின்பற்ற வேண்டும் - இதில் வந்த சார்புத் தொடர்,
(1) காலம் பொன்னுக்குச் சரி (2) உயர்ந்த குறிக்கோளை
(3) குறிக்கோளை மாணவர் (4) மாணவர் பின்பற்ற வேண்டும்

24. பெயரெச்சச் சார்புத் தொடர் வந்த வாக்கியம்,
(1) பல்லவன் பணி யன்றாயின் நும்பணி மறுப்பனோ?
(2) அறஞ்செய விருப்பு என்பது ஔவை வாக்கு.
(4) போனது போகட்டும் என்று கவலையை மறந்தான்.
(4) தாயார் கூறிய அறிவுரைகளை மகள் சிரமேற் கொண்டாள்.

25. மொழி முதலிலும் இறுதியிலும் அமைந்து வரத்தக்க வினா வெழுத்து,
(1) எ (2) ஆ (3) ஏ (4) யா

26. ஆகுசுட்டாய் அமைந்த சொல்,
(1) இவை (2) இவ்வீடு (3) இம்மனிதன் (4) இந்நூல்

27. உயிர்த் தொடர்க் குற்றியலுகரச் சொல்,
(1) பாக்கு (2) பயறு (3) பருப்பு (4) பயந்து

28. குணப்பண்பை உணர்த்தி வேற்றுமை ஏற்காத சொல்,
(1) உரிச்சொல் (2) குணப்பெயர்
(3) தொழிற்பெயர் (4) இடைச்சொல்

29. ''சானகத்துக் காருலில் என்னைக் கைவிட்டு ஏகினையே'' இதில் வந்த இடைச்சொற்களின் தொகை,
(1) நான்கு (2) ஐந்து (3) ஆறு (4) ஏழு

30. காலங்காட்டாத பெயரிடைநிலை பெற்று வந்த சொல்,
(1) ஓடினான் (2) இருக்கிறான் (3) அறிஞன் (4) நல்லவன்

31. ஆண்டான் என்னுஞ் சொல்லின் பகுதி,
(1) ஆண் (2) ஆள் (3) ஆண்டு (4) ஆண்ட

5. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தெரிக.

''ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின சண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''

32. இப்பாடலில் புலவர் புலப்படுத்த விரும்பிய தலைமைக் கருத்து.
(1) கோசல நாட்டு வளம்
(2) போர்க்களத்தில் இராவணன் நிலை
(3) இராவணன் படை அழிவு
(4) போர்க்களத்தில் இராமன் காட்டிய கருணை

33. இனங்கழுகின் மீது வானை மீன்கள் பாயும் நாடு என்பதனால் புலப்படுவது.
(1) கழுகும் வானை மீன்களும் நிறைய உண்டு.
(2) வானை மீன்கள் கழுகிற் பாயும் அதிசயநாடு.
(3) புலவரின் உயர்ந்த கற்பனைச் சிறப்பு.
(4) நீர்வளம் நிறைந்த செழிப்புள்ள நாடு.

34. இராவணனின் படை அழிவு விளக்கப்படும் முறை.
(1) உதாரணத்தின் வாயிலாக (2) உலமை வாயிலாக
(3) வருணனை வாயிலாக (4) காரண காரிய வகையால்

35. மாருதம் அறைந்த பூளை என்னும் உவமையின் பொருத்தமின்மை.
(1) காற்றாய்ப் பறத்தல் (2) மேலெழுந்து மறைதல்
(3) மிகவிரைவாய் மறைதல் (4) ஆழமாய்த் தோன்றுதல்

6. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

36. பூமி நானிலம் என அழைக்கப்பட்ட காரணம்.
(1) நால்வகை நில அமைப்பு இருந்தமை
(2) நான்கு கண்டங்களாய் இருந்தமை
(3) நான்கு கடலாற் சூழப்பட்டமை
(4) நால்வகைத் தாவரத்தன்மை இருந்தமை

37. மலையைக் குறிக்கும் வடசொல் அல்லாதது.
(1) பர்வதம் (2) வரை (3) சைலம் (4) அத்திரி

38. சம்பாதித்த பொருள் கொண்டு செய்யக் கூடாதது.
(1) விளைநிலம் தோட்டம் வாங்கல்
(2) ஈட்டுக்குக் கொடுத்தல்
(3) ஈட்டுக்குக் கொடுத்து வட்டி வாங்கல்
(4) வட்டிக்கு வட்டி வாங்கல்

39. வடமொழியாளர் கொள்ளும் இலக்கியக் கொள்கைக்குப் பொருந்தாத கூற்று.
(1) ஒரு நோக்கோடு எழுதப்படுவது
(2) புருடார்த்தங்களைக் கூறுவது
(3) உணர்ச்சியை வெளிப்படுத்தாதது
(4) உணர்ச்சியை வெளிப்படுத்துவது

10. தமிழ் வாக்கிய அமைப்பின் தனிச்சிறப்பு.
(1) எழுவாய் பயனிலையை உணர்த்தல்.
(2) செயப்படுபொருள் நின்று எழுவாயையும் பயனிலையையும் உணர்த்தல்.
(3) பயனிலை நின்று எழுவாயை உணர்த்தல்.
(4) பயனிலை நின்று செயப்படுபொருளை உணர்த்தல்.

பகுதி: II

11. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.
(அ) நீர்கண்ட தேர்த்திருவிழா பற்றிய வருணனை.
(ஆ) "குருடன் ஒருவனுக்குக் கண்பார்வை கிடைத்தால்" என்பது பற்றிய கற்பனை.
(இ) சூழல் மாசுபடும் முறையும் அதைத் தடுக்கும் வழியும் என்பது பற்றிய விளக்கம்.
(ஈ) "தமிழ் மாணவரின் கல்வித்தரம் குன்றி வருகிறது" இக்கூற்றைக் காரணம் காட்டி நியாயப்படுத்தியோ மறுத்தோ எழுதுக.

12. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு பந்தி எழுதுக.
(அ) (விளக்கமுறையைப் பின்பற்றி) தண்ணீர் கிடைக்கும் முறை.
(ஆ) (வரலாற்று முறையைப் பின்பற்றி) மிதிவண்டி பழகடைந்த விதம்
(இ) (வருணனை முறையைப் பின்பற்றி) காலையில் நான் கண்ட தாமரைத் தடாகம்.
(ஈ) (காரண காரிய முறையில்) நான் விரும்பும் பேனா.

13. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இத்தொன்மை பற்றி, தமிழ் மக்களாகிய நாமனைவரும் பெருமை மேற்கொள்ளுதல் இயல்பே. இதனினும் மிக்க தாரு சிறப்பு நமது தமிழ் மொழிக்கு உள்ளது. திராவிட வகுப்பிற் பிறந்த மொழிகட்குரிய ஆதியிலக்கியங்களெல்லாம் வடமொழி நூல்களின் வழிவந்தனவாம். உதாரணமாக, தெலுங்கு நூல்களுட் காலத்தால் முந்திய நன்னைய பாரதம் என்ற நூல் வடமொழியிலுள்ள வியாஸ பாரதத்தைப் பின்பற்றியது. தமிழிலக்கியங்களுட் காலத்தால் முந்திய நூல்கள் இப்பெற்றியனவல்ல. இவை பரந்துபட்ட உலகியலறிவும் இயற்கையோடு ஒன்றித்து நின்று அவ்வியற்கை நலன்களனைத்தையும் ஆழ்ந்து நுகரும் உணர்ச்சி வலியும் பொருட்களை நுணுகி ஆராய்ந்தறியும் அறிவாற்றலுமுடைய தமிழ்ப் புலவர்கள் தாமே புதிதாகப் புனைந்த

செய்யுள்களால் இயன்றன. புறநானூறு என்ற சங்ககாலத்துத் தொகை நூலை எடுத்துக் கொள்க. இதன் கண்ணுள்ள செய்யுட்கள் வடமொழி நூலொன்றினைப் பின்பற்றி இயற்றப்பட்டன என எவரும் கூறார். இங்ஙனமே பிற தொகை நூல்களும் அமைந்துள்ளன.

(அ) (1) இப்பந்தியில் தலைமைப்பொருள் (மையக்கருத்து) ஏதாவது உண்டா?

(2) உண்டெனில், அக்கருத்தைப் பொதுவாகவன்றி, நுட்பமாமாகக் கூறுக.

(3) அத்தலைமைக் கருத்தை மனத்திற் கொண்டு கவர்ச்சியான தலையங்கம் இடுக.

(ஆ) (1) இப்பந்தியில் இரு உதாரணங்கள் வருகின்றன. அவை எவை?

(2) இரு உதாரணங்களும் விளக்கும் துணைக்கருத்து (சார்புக் கருத்து) எவை?

(3) 'தமிழ்ப்புலவர்கள் தாமே புதிதாகப் புனைந்த செய்யுட்களால் இயன்றன' இவ்வாக்கிய விளக்கமாய் அமைந்த பகுதி எத்துணைக் கருத்துக்கு ஒளியூட்டுகிறது?

(4) இச்சார்புக் கருத்துக்கள் தலைமைப் பொருளுக்கு வலிமையூட்டுகின்றனவா? விளக்குக.

(இ) பந்தியிலக்கணத்தைக் கருத்திற் கொண்டு இப்பந்திபற்றிய உமது அபிப்பிராயத்தைக் கூறுக.

4. செவிலித்தாயைச் சபாதித்தல் பற்றியும் அதனைச் செவிழித்தல் பற்றியும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

பகுதி: III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) ''மன்னவன் பணியன்றாகில் நும்மணி மறுப்பனோ மற்றென்பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ''

(ஆ) ''அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ''

(இ) ''உன்னிலும் பார்க்க உன்சிறிய தாயின் மகன் தான் நிறைகுணத்தவன்; நின்னிலும் நல்லன்; குறைவிலன்; அவன் அரசு புரிவது நாட்டுக்கு நலன்''

2. பின்வருஞ் செய்யுள்களைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) "புரமெலாம் எரிசெய்தோன் முதலினோர் பொருபிலா
வரமெலாம் உருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலாம் உருவியென் உயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே."

(1) இப்பாட்டின் பொருளை உமது வசன நடையில் எழுதுக.

(2) இப்பாட்டின் வாயிலாக வாலியின் சிறப்புக்கள் ஏவை என உணருகிறீர்? இராமபாணத்தின் தன்மைபற்றியாது உணருகிறீர்?

(ஆ) "கழுந்த ராயுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீத
அழுந்த வாளிகள் தொடுசிலை ராகவ அபிநவ கவிநாதன்
விழுந்த ஞாயிறு எழுதவன் முன்மறை வேதிய ருடனாய்ந்
தெழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே"

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவுற எழுதுக.

(2) இப்பாடலைப் பாடியவர் அப்பாடலின் வாயிலாக எந்தக் கருத்தை உணர்த்த விரும்புகிறார்.

3. "கம்பர் தொட்டநான்றை அறுபதிக்கூட ஏனைய கவிஞர்க்கு ஏலாது" இக்கூற்றின் பொருந்தப்பாட்டை உதாரணங் காட்டி விளக்குக

செயல் - 3

பகுதி: I

1. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.

1. தனது எவ்வம் உரையாது சுதேலை சிறந்தது - எவ்வம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) ஏக்கம் (2) துன்பம் (3) இன்பம் (4) இயல்பு

2. ஊராண்மை செய்து உயர்புகழ் கொண்டோர் வெதி சிலரே ஊராண்மை என்றால்,
(1) உபகாரஞ் செய்தல் (2) ஊரை ஆளல்
(3) மிக்க வீரம் (4) அரசாட்சி.

3. படைவீரர் போரிலே தோற்றுச் சரணாகதி அடைந்தனர் - சரணாகதி என்றால்,
(1) வீரசுவர்க்கம் (2) அடைக்கலம்
(3) படைவீடு (4) பெருஞ்சினம்

4. நூலறிவால் மாத்திரம் அறிவு பூரணப்படுத்துவதில்லை - நூலறிவு என்பதன் எதிர்கருத்துச் சொல.

(1) ஏட்டுக்கல்வி (2) கேள்வியறிவு
(3) அறியாமை (4) பட்டறிவு

5. இலக்கிய நுகர்ச்சியால் மனம் பண்படும் - நுகர்ச்சி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.

(1) அனுபவம் (2) இன்பம் (3) வெறுப்பு (4) சோகம்

6. பின்வரும் மூதபகுதிக்கேற்ற பிற்பகுதியைத் தெரிவு செய்க.

6. ஆற்றிலே வெள்ளம்.

(1) குடுகுடு என ஓடியது. (2) சலசல என ஓடியது
(3) கலகல என ஓடியது (4) பளபள என ஓடியது.

7. எதிரியைக் கண்ட இடத்திற் கைது செய்யும்படி நீதிபதியால்,

(1) அழைப்பாணை அனுப்பப்பட்டது
(2) பரிந்துரை வழங்கப்பட்டது
(3) பிடியாணை பிறப்பிக்கப்பட்டது
(4) பிரேரணை கொண்டுவரப்பட்டது

8. சோலையிலே பலவகைப் பறவைக் கூட்டம்,

(1) ஒலி செய்தன (2) ஒலி செய்தது
(3) ஒலி செய்யப்பட்டது (4) ஒலி செய்யப்பட்டன

9. மழை பெய்தபோது

(1) தாவாரத தண்ணீர் தெறித்தது
(2) தாழ்வாறத் தண்ணீர் தெறித்தது
(3) தாள்வாரத தண்ணீர் தெறித்தது
(4) தாழ்வாரத் தண்ணீர் தெறித்தது

9. பின்வருந் தொடர் மொழிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

10. காடுங் காடு சார்ந்த இடமும்.

(1) குறிஞ்சி (2 மூல்லை (3) மருதம் (4) நெய்தல்

11. ஒரு நாட்டுக்குச் சொந்தமான வெளிநாட்டிலுள்ள செல்வம், சேவை என்பனவற்றின் மதிப்பு.

(1) பணவீக்கம் (2) சேமிப்புப்பணம்
(3) வைப்புநிதி (4) அந்நிய செலாவணி

12. சொத்தை அநுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்,

(1) உடைமை (2) தாயம் (3) ஈடு (4) ஒற்றி

13. எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன

(1) சோதிடன் (2) தீர்க்கதரிசி
(3) அட்டாவதானி (4) சாஸ்திரியார்

4. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

14. பண்டிதமணி கம்பன் கவிகளைப் படித்துப் படித்து வாயூறினார் - வாயூறல் என்ற மரபுத் தொடரின் பொருள்,
(1) வாயில் நீர் சுரத்தல் (2) சொற்பொழிவாற்றல்
(3) மிகமிக விரும்புதல் (4) நயங்கண்டு சுவைத்தல்

15. பிறரை மதியாது எதிர்த்துப் பேசுதல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,
(1) வாயிழத்தல் (2) வாயடங்கல்
(3) வாய் காட்டல் (4) வாயடைத்தல்

16. மாணவன் ஒருவனுக்கு அசிரியர் கூறிய அறிவுரைகள்
(1) நுனிப்புல் மேய்ந்தாற் போல
(2) விழலுக்கிறைத்த நீர் போல
(3) நீர்க் குமிழி போல
(4) புன்னுனிமேல் நீர்போல - பயனற்ற தாயின.

17. ''அறையில் ஆடியன்றோ அம்பலத்தில் ஆடவேண்டும்'' என்னும் பழமொழியின் கருத்து,
(1) தக்க பயற்சியின்றித் திறமை வராது
(2) இரகசியமாகப் பயின்றபின் பரகசியமாக ஆடல் வேண்டும்
(3) அறையில் ஆடிப்பழகிய பின் அம்பலத்தில் ஆடல் வேண்டும்
(4) நாம் விரும்பியபடி ஏதுஞ் செய்தல் இயலாது.

18. ஒரு சிறு தவறுமின்றிச் செய்யப்படுங் கருமங்களே முழுப் பயன் தரும் என்னுங் கருத்தை விளக்கும் பழமொழி,
(1) ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
(2) சர்திரனுக்கும் களங்க முண்டு
(3) ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விடம்
(4) வெள்ளம் வருமுன்பே அணைகட்டல் வேண்டும்.

5. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து நிரப்புக.

19. பின்வருவனவற்றுட் பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்த வாக்கியம்,
(1) நன்றுந் தீதும் பிறர் தர வாரா
(2) யாதுமூரே யாவருங் கேளிர்
(3) ஒதுவ தொழியேல்
(4) ஐயமிட்டுண்

20. ''அஞ்சினர்க்குச் சதமரணம்''—இதில்,
(1) எழுவாய் தொக்கது

(2) செயப்படுபொருள் தொக்கது
(3) எழுவாயும் பயனிலையும் தொக்கன
(4) பயனிலை தொக்கது.

21. வாக்கிய உறுப்புக்கள் சம்பந்தப்பட்ட வகையிற் பின்வருவன வற்றுள் ஒன்று வித்தியாசமானது. அதன் கீழ்க் கீறிடுக.
(1) இன்று படித்துவிட்டுத் தருகிறேன்
(2) கண்டது கற்கப் பண்டிதனாவான்
(3) நறாஅத் தட்டுங்கள்
(4) உண்டபின் உலாவி உறங்கு

22. எழுவாய்த் தொக்கு நிற்கும் வாக்கியம்,
(1) உண்மை ஒருநாள் வெல்லும்.
(2 உரத்துப் பேசினால் உண்மையாகி விடுமா?
(3) என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
(4 எதனையும் ஒளித்தல் இயலாது.

23. மனிதர் அறத்தின் வழி நடக்கக் கடவர் - இவ்வாக்கியம்,
(1) செப்புவாக்கியம் (2 வினாவாக்கியம்
(3) வியங்கோள் வாக்கியம் (4) ஏவல் வாக்கியம்

24. வினையெச்சச் சார்புத் தொடர் வந்த வாக்கியம்,
(1) இருள் தூங்கும் சோலையை நளன் அடைந்தான்.
(2 அனைத்தின் வெண்மேனி ஒளி பரந்து சோலை நிறம் மாறியது.
(3) தேன் நிறைந்த மலர்; அதிலொரு வண்டு.
(4) அனுமான் சீதையைக் கண்களாற் கண்டான்.

25. ஒலிமயக்கம் விளைவிக்கும் எழுத்துக் கூட்டம்,
(1) க், ச், த் (2) வ், ய், ர் (3) ல், ழ், ள் (4) ஈ, ஓ, ஔ

26. மொழியிடையில் இரட்டித்தன்றி வேறு மெய்களோடு சேர்ந்து வராத எழுத்துக் கூட்டம்,
(1) க், ச், ல், ம் (2) ந், ப், ம், ய்
(3) க், ச், த், ப் (4) ய், ள், ற், ன்

27. பின்வருவனவற்றில் வந்த மூற்றியலுகரம்
(1) அன்பு (2) ஆறு (3) அறு (4) காற்று.

28. தொழிற்பண்பை உணர்த்தி வேற்றுமை ஏற்குஞ் சொல்,
(1) குணப்பெயர் (2) வினைச்சொல்
(3) உரிச்சொல் (4) தொழிற்பெயர்.

29. இடைச்சொல்லடியாகப் பிறந்த வினைச்சொல்,
(1) போன்றான் (2) காத்தான்
(3) உயிர்த்தான் (4) கதைத்தான்

30. பெயராயும் வினையாயும் இடையாயும் வரத்தக்க சொல்.
(1) உலை (2) ஆள் (3) கல் (4) வில்

31. பகுபதவுறுப்பு ஆறும் பெற்று வந்த சொல்.
(1) உண்டான் (2) ஓடினான்
(3) அலைந்தனள் (4) ஆடுவான்

6. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

32. திருப்பதி எனச் சிறப்பித்துக் கூறப்படும் தலம்.
(1) பழனிமலை (2) சுவாமிமலை
(3) தணிகைமலை (4) திருவெங்கடமலை

33. எவ்வகை உணவு விஷம் எனப்படும்?
(1) மாமிச உணவு
(2) பிறர் தொழில் முயற்சியாற் கிடைத்தது
(3) சத்தில்லாத உணவு
(4) அகாலத்தில் உண்ணும் உணவு

34. திருக்குறளுக்கு உரை வகுத்தவர்களிற் சிறந்தவர்.
(1) சோமசுந்தர பாரதியார் (2) மணக்குடவர்
(3) மு. வரதராசனார் (4) பரிமேலழகர்

35. பொருள் தரும் வழிகளில் முறையற்றது
(1) தாயம் (2) உடமை (3) சீதனம் (4) யாசகம்

36. இராமகாதை ஆதி காவியமாகப் பாடியவர்.
(1) கம்பர் (2) வான்மீகி (3) வசிட்டர் (4) போதாயனர்

7. மீன்களும் உலர்ப்பதையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கவிஞன் வரை வியாபாரியைப் போன்றவன். வைரத்தின் ஒளி வைர வியாபாரியின் சஞ்சலைக்கூச வைப்பதில்லை. மனிதனின் மேற் பூச்சம் கவிஞனின் உணர்ச்சிகளை மயக்கி விடுவதில்லை. வைரவியாபாரியைப் போலவே அவனும் ஒவ்வொரு மனிதனையும் கையிலெடுத்து மதிப்புப் போடுகிறான். அவரவருடைய பண்புகளுக்கேற்றவாறு தரம்பரித்து விடுகிறான். இவ்வளவும் ஒரே பார்வையில். நமக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. கவிஞனையே பார்த்து வியந்தபடி நிற்கிறோம்.

ஒரேயொரு வித்தியாசம் உண்டு. வைரவியாபாரி எந்த வைரத்தை எடுத்து உயர்ந்தது என்று சொல்லுகிறானோ, அதைத்தான் நாமும் நம்பவேண்டியிருக்கிறது. அவன் வாக்குத்தான் வைரத்தைப் பொறுத்த மட்டில் தெய்வவாக்காகி விடுகிறது. அதன் உண்மை பொய்மைகளை

கண்டறிய நம்மால் முடியாது. அப்படிக் கண்டறிந்து விட்ட ஆனந்தத்தையும் நாமடைய முடியாது. நமக்கு அஃது ஒரு குறை யாகவே நின்று விடுகிறது.

ஆனால், இந்த விடயத்திலே கவிஞன் அப்படியமைபான். அவன் எடுத்துக்கொடுக்கும் சரக்குகளின் தாரதம்மியங்களை நாமும் காண முடிகிறது. அனுபவிக்க முடிகிறது. புதிதாக ஒன்றைக்கண்டு பிடித்து விட்ட ஆனந்தத்தையும் அடைகிறோம். ஏனென்றால், கவிஞன் நமக் குத் தெரியும்படி வைரங்களைப் பக்கத்திலே வைத்துத் தாரதம்மியங் களை விளக்கிக் காட்டி விடுகிறான்.

37. இவ்வுரைப்பகுதியில் ஆசிரியர் புலப்படுத்த விரும்பும் பிரதான கருத்து.
(1) வைரவியாபாரியின் ஆற்றல்
(2) வைரவியாபாரியும் கவிஞனும்
(3) இருவருக்குமிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமை
(4) கவிஞனின் தனிச் சிறப்பு.

38. பிரதான கருத்தை விளக்க ஆசிரியர் கைக் கொண்ட முறை.
(1) பிரதான கருத்தை விளக்கிக் கூறல்
(2) உதாரணங் காட்டி விபரித்தல்
(3) ஒற்றுமை வேற்றுமை காட்டிக் கூறல்
(4) வருணனை முறையில் விளக்கல்

39. இவ்வுரைப் பகுதிக்குப் பொருந்தக் கூடிய தலையங்கம்.
(1) வைரவியாபாரியும் கவிஞனும்
(2) கவிதைச்சுவை
(3) கவிஞனின் தனிச்சிறப்பு
(4) வைரத்தின் மதிப்பீடு

40. கவிஞனைப்பற்றிய கூற்றுகளிற் பொருத்தமற்றது.
(1) கவிஞன் விரைவாக மனிதன் பண்புகளைத் தரம் பிரிக் கிறான்.
(2) கவிஞன் மனிதனின் வெளிவேடங்களில் மயங்குகிறான்.
(3) கவிஞன் காணும் தாரதம்மியத்தை நாமும் காணமுடிகிறது.
(4) கவிஞன் தாரதம்மியம் காட்டும் வைரங்கள் கவிதைகள்.

பகுதி: II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) பட்டம் பறக்கிறது. (நியாயங் காட்டி ஒரு பந்தி)

(ஆ) "அவர் செய்த நன்றியை என்றுமே மறக்கமுடியாது." (இது இறுதி வாக்கியமாக அமைய, வரலாற்று முறையில் அமைந்த ஒரு பந்தி)

(இ) சூரியனே சக்திகளின் மூலகாரணம். (விளக்க முறையில் அமைந்த பந்தி)

(ஈ) "ஓ! தாமரை மலரே" என முன்னிலைப்படுத்தி (வருணனை முறையில் அமைந்த பந்தி)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) விஞ்ஞானமும் வீட்டுவாழ்க்கையும் என்பதுபற்றிய விளக்கக் கட்டுரை.

(ஆ) "எனக்குப் பறக்கும் ஆற்றல் கிடைத்தால்..." என்பது பற்றிய கற்பனை

(இ) தரப்படுத்தலும் தமிழ் மாணவரும் - என்பது பற்றிய வரலாற்றுக் கட்டுரை.

(ஈ) முழுமதி நாளிற் கண்ட காட்சிகள் பற்றிய வருணனைக் கட்டுரை.

3. பின்வரும் பந்தியை வாசிக்க. அதன் கீழுள்ள குறிப்புக்களைக் கருத்திற் கொண்டு, நியாயங்கூறி விமரிசனம் எழுதுக.

மிதிவண்டிச் சவாரி செய்வது சுகாதாரத்துக்கு ஏற்றதொரு விளையாட்டாகும். மிதிவண்டிச் சவாரி செய்பவர் கிராமப் புறத்துக்கு வந்து நல்ல காற்றைச் சுவாசிக்கலாம். அன்றியும் அது நல்ல உடற்பயிற்சியுமாகும். மேலும் அதனால் நாட்டுப்புறக் காட்சிகளையும் பார்க்கக் கூடியதாய் இருக்கும். ஒருவர் சுகதேகியாய் இருக்க விரும்பினால் ஒழுங்காக நாட்டுப்புறத்துக்கு மிதிவண்டிச்சவாரி செய்ய வேண்டும். மிதிவண்டிச் சங்கிலியைச் சுத்தமாக்க விரும்பினால், அதை மண்ணெண்ணெயிற் போட்டு வைத்திருக்க வேண்டும். பின்னர் எடுத்து மசக்கை எண்ணெயிடலாம். இவ்வாறு அடிக்கடி எண்ணெய் இடுவதால் மிதிவண்டியை நல்ல நிலைமையில் வைத்துக் கொள்ளலாம்.

குறிப்பு: (1) வாசகன் மனத்திற் பதியத்தக்க மையக் கருத்து (2) உதாரணம், உவமை, நியாயங்காட்டல் முதலியனவான மையக் கருத்தை விளக்கும் முறைகள் (3) தொடர்புள்ள வாக்கிய அமைப்பு (4) கூறியது கூறல், மிகைப்படக் கூறல், குன்றக் கூறல் முதலிய குற்றம் இல்லாமை.]

4. எது தமிழ் இலக்கியம்? என்னும் வினாவுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறும் விடையினை விளக்கிக் கூறுக.

பகுதி: III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) ''ஓ! ராம, உனது பாணத்தின் நுதியிலேதான் தருமம் குடியிருப்பது''

(ஆ) ''இவன் கிழித்த ஓலை மூல ஓலையைப் பார்த்து எழுதிய படி ஓலை. மூல ஓலையோ என்னிடத்தில் இருக்கிறது''

(இ) ''மூடிசூட்டு முகூர்த்தம் அணுகுகிறது. அதனால் சிற்றன்னை உன்னை அழைக்கிறாள்''

2. பின்வரும் செய்யுளகளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

(அ) ''அருண வெங்கதிர் ஆயிரத்தவன் அன்பினா லுதவுங்
கருண னுஞ்சில பகழி யோரிரு கணைர் மார்பில்விடா
வருண மும்பெய ருபபி றந்திலர் மனனு மொன் றெனவே
தருண வாண்ல வேந்த கைத்துரை தந்து போயினனே''

(1) இடபாடலின் பொருளைத் தெளிவாக உமது உரைநடையில் எழுதுக.

(2) இடபாடலில் வரும் கன்னனின் மனநிலை பற்றிய உமது எண்ணத்தை எழுதுக.

(ஆ) ''தாதகு சோலை தோறுப் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணற் நடங்கள்தோறும்
மாதவி வேரிப பூக வனந்தோறும் வயல்க டோறும்
ஓதிய உடம்பு தோறுப் உயரென உலாய தன்றே''

(1) இடபாடலின் பொருளைத தெளிவாக உமது வசனநடையில் எழுதுக.

(2) ''ஓதிய உடம்புதோறும் உயிரென'' என்னும் உவமை மூலம் சரயுநதியின் தன்மை பற்றி நீர உணர்வதை விளக்குக.

3. ''கப்பநாடனை கவிதைபோற் கற்றோர்க் கேயம களியாதே'' — இக் கூற்றினை ஒரு உதாரணந் தந்து விளக்குக.

செயல்-4

பகுதி I

1. மிகப் பொருத்தமான விடையின கீழக் கீறிடுக.

1. மனைதோறுஞ் சென்று புறங்கடை நின்று இரத்தல் இழிவு - புறங் கடை என்பதன் ஒத்த கருத்துச் சொல்

(1) கோடிப் புறம் (2) உட்புறம்

(3) வெளிவாயில் (4) தலைவாயில்

2. யாக்கையும் செல்வமும் நீர்க்குமிழி போன்றன - யாக்கை என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) வாழ்க்கை (2) உடம்பு
(3) உலகம் (4) உயிரினங்கள்

3. கொடுவினைகளைக்கண்டு மக்கள் செய்வதறியாது வெய்துயிர்த்தனர்-வெய்துயிர்த்தல் என்றால்,
(1) பொறாமை கொள்ளல் (2) பகைமை கொள்ளல்
(3) பெருமூச்சு விடுதல் (4) நாணமடைதல்

4. நீதிநெறியிலே தம்மை இட்டவர்கள் சான்றார் - சான்றோர் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) அறிஞர் (2) கயவர்
(3) இழிந்தோர் (4) அறிவிலிகள்

5. இரவு என்னும் புன்மையைச் சான்றோர் வெறுப்பர்-இரவு என்பதன் எதிர்க் கருத்துச் சொல், (1) இரத்தல் (2) இலம்பாடு
(3) விடிவு (4) ஈகை

2. இடைவெளியில் இடு நிரப்புதற்கு பொருத்தமான சொல்லைத் தெரிக.

6. பகீல் என்னும் அறபிமொழிக்குப் பொருத்தமான தமிழ்ச்சொல்...
(1) கெட்டித்தனம் (2) புத்திசாலித்தனம்
(3) உலோபித்தனம் (4) கீழ்மைத்தனம்

7. சொன்ன சொல் தவறாமை .... எனப்படும்
(1) நேர்மை (2) செல்லாநாணயம்
(3) நிதானம் (4) வாக்கு நாணயம்

8. எதிர்க்கட்சியினர் அரசின் போக்கைக் கண்டித்து .... பேசினர்.
(1) கோபமாக (2) காரசாரமாக
(3 கண்ணீரும் கம்பலையுமாக (4) குப்பை கூளமாக

9 வரவு செலவுத் திட்டத்தில் .... தொகையை நிரப்ப நிதியமைச்சர் பல வரிகளை அறிமுகப்படுத்தினார்.
(1) நட்டமடையும் (3) விழுக்காடாகும்
(3) தண்டுவிழும் (4) உபரியாகவரும்

3. பின்வருந்த தொடர்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிக.

10. நகருக்கு வெளியே மக்கள் வாழுமிடம்
(1) புறநகர் (2) வெளிக்களம் (3) புறநாடு (4) புறஞ்சேரி

11. வண்ணந்தீட்டி அழகு செய்யாத உயிர்த்தன்மையுள்ள ஓவியம்
(1) புகைப்படம் (2) வெற்றோவியம்
(3) உயிரோவியம் (4) புனையா ஓவியம்

12. வானூர்தியைச் செலுத்துவோன்,
(1) சாரதி (2) பாகன் (3) வலவன் (4) மீகாமன்

13. வருவாயிலிருந்து கொடுக்கும் தருமநிதி,
(1) கடமை (2) மகமை (3) மிடிமை (4) உடைமை

பிரிப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

14. தலைப்பட்ட பிள்ளைகளோடு அவதானமாகப் பேசல் வேண்டும் தலைப்படுதல் என்ற மரபுத் தொடரின் பொருள்,
(1) தலையிற்படுதல் (2) ஒன்றுகூடல்
(3) வளர்தல் (4) வெளிப்படுதல்

15. எதனையும் மேற்போக்காக, ஆழ அகலமின்றிக் கற்றல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்,
(1) நுனிப்புல் மேய்தல் (2) தலையைத்தடவல்
(3) முகஞ் சுளித்தல் (4) வெட்டி விழுத்தல்

16. எல்லாவற்றையுங் கண்டு கழித்துவிட்ட அவர் இப்போது,
(1) புன்னுனி மேல் நீர்போல
(2) கன் மேல் எழுத்துப்போல
(3) நீர்மேற் குமிழி போல
(4) தாமரையிலைத் தண்ணீர்போல - வாழ்கிறார்

17. ஒருவர் செய்த செயலின் பயனை அவர் அனுபவித்தே தீருவார் — என்னும் கருத்தைப் புலப்படுத்தும் பழமொழி,
(1) முக்காலும் காகம்முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?
(2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
(3) கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?
(4) விதையொன்று போடச் சுரையொன்று முளைக்குமா?

18. "எறும்பூரக் கற்குழியும்" என்னும் பழமொழியின் கருத்து,
(1) சிறிய எறும்பாலும் பெரிய சாதனையைச் செய்யமுடியும்
(2) சிறியவர்களும் ஒரோர் சமயம் அருஞ் செயல்கள் செய்வார்
(3) இடையறா முயற்சியால் எதனையும் சாதிக்கலாம்,
(4) எறும்பு இடைவிடாது ஊர்வதால் கல்லிலே பள்ளம் உண்டாகும்.

5. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

19. நடப்பது நடக்கட்டும் என்பது,
(1) செப்பு வாக்கியம் (2) ஏவல் வாக்கியம்
(4) வினா வாக்கியம் (4) வியங்கோள் வாக்கியம்

20. கோள்களில் மிகப் பெரியது வியாழன் - இச்செப்பு வாக்கி யத்தை மெய்ப்பாட்டு வாக்கியமாக்கினால்,
(1) கோள்களிற் பெரியது வியாழனா?
(2) கோள்களிற் பெரியது வியாழனாகும்.
(3) ஓகோ கோள்களிற் பெரியது வியாழனாமே.
(4) வியாழன்தான் கோள்களிற் பெரியது.

21. "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்ற ஒளவை வாக்கு ஒரு பொன்மொழி - இதில் வந்த சார்புத் தொடர்,
(1) எண்ணும் எழுத்தும்
(2) எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்
(3) என்ற ஒளவை வாக்கு
(4) ஒளவை வாக்கு ஒரு பொன்மொழி

22. செய்நன்றி மறந்தோர் நரகினை அடைவர் - இதன் எழுவாய்,
(1) செய்நன்றி (2) மறந்தோர்
(3) செய்நன்றி மறந்தோர் (4) நன்றிமறந்தோர்.

23. சின்னக் குழந்தைக்குப் பேசத் தெரியும்-இதில் பேச என்பது,
(1) வினையெச்சம் (2) பெயரெச்சம்
(3) தொழிற் பெயர் (4) ஈறு குறைந்த தொழிற்பெயர்

24. கல்வியழகே அழகு என்று நாலடியார் கூறுகிறது என்பதை மறவாதே - இதன் செயப்படுபொருள்,
(1) என்பதை (2) கல்வியழகே யழகு
(3) நாலடியார் கூறுகிறது
(4) கல்வியழகே யழகு என்று நாலடியார் கூறுகிறது.

25. நாட்டில் விளைவு பெருகினால் நல்லது - இதன் எழுவாய்,
(1) நாடு (2) விளைவு (3) பெருக்கம் (4) பெருகினால்

26. பின்வருவனவற்றில் பயனிலை வெளிப்பட்டு வந்த வாக்கியம்,
(1) துறவிக்கு வேந்தன் துரும்பு
(2) கல்வி அழகே அழகு
(3) கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?
(4) முகத்துக்கு முகம் கண்ணாடி.

27. பன்னிரண்டு உயிரோடுஞ் சேர்ந்து மொழிக்கு முதலில் வரக் கூடிய எழுத்துக் கூட்டம்,
(1) சு, த், ந், ம், (2) க், ய், ச், ட்
(3) ப், ம், வ், ய் (4) ஞ், ங், ம், த்

28. தொழிற் பெயர்களின் முதனிலை (பகுதி).
(1) குணப்பண்பை உணர்த்தும் உரிச்சொல்
(2) தொழிற்பண்பை உணர்த்தும் உரிச்சொல்
(3) பொருட்பெயர் (4) இடைச்சொல்

29. மாணவர்க்கு ஒழுக்கமே உயிரெனப்படும். இதில் வந்த 4 ஆம் வேற்றுமைப் பொருள்,
(1) கோடல் (2) நட்பு (3) தகுதி (4) காரணகாரியம்

30. பிறவினை விகுதி பெற்றுவராத பிறவினைச் சொல்,
(1) கடந்தான் (2) பயிற்றினான்
(3) அலைத்தான் (4) கற்பித்தான்

6. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. செல்வம் கொழிக்கும் நாடு
(1) கலைஞர் வாழும் நாடு
(2) கலைஞரும் தொழிலாளரும் வாழும் நாடு
(3) வாணிப முயற்சியுள்ள நாடு
(4) விஞ்ஞான முயற்சி பெருகிய நாடு

32. தென்னிந்தியாவில் வழங்கிய திராவிட மொழிவகை அல்லாதது.
(1) கன்னடம் (2) தெலுங்கு (3) மராட்டி (4) தமிழ்

33. பெரும்பாலான மக்களின் தவறு காரணமாகச் செல்வாக்குப் பெற்ற ஒரு பிழையான தொடர்.
(1) மாங்காய்மரம் (2) தேங்காயெண்ணைய்
(3) துளசியிலைச்செடி (4) போய்வா

34. பண்டைப் புலவர்களிடம் காணப்படும் சிறப்பியல்புகளுள் பொருத் தமில்லாதது,
(1) உலகியலறிவுடைமை (2) இயற்கை நலன் நுகர்ச்சி
(3) நுணுகி ஆராயும் அறிவுவலி
(4) வடமொழிச் செய்யுளமைப்பைப் பின்பற்றல்

35. போர்க்கலை பண்டைத் தமிழகத்திற் சிறப்புற்று விளங்கியமைக் குச் சான்று பகரும் மக்கட் பெயர்,
(1) வள்ளுவன் பெருஞ் சாத்தனார்
(2) ஏனாதிநெடுங் கண்ணனார்
(3) முதுகூத்தனார் (4) பெருங்கொல்லனார்

36. தமிழின் தனிப்பண்புகளாகக் கூறப்படுவன.
(1) தொன்மையும் செய்யுள்மரபும்
(2) தொன்மையும் இலக்கியப் பொருண்மையும்

(3) இலக்கியப்பொருண்மையும் செய்யுள் மரபும்
(4) இவை மூன்றும்

7. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடைகளிற் பொருத்தமானதைத் தெரிக.

நாற்பது அல்லது ஐம்பது வருடம் வாழ்ந்த மனிதனையும் நானூறு வருடமாக மறையவழி தெரியாமல் திண்டாடும் மதிலையும் ஒன்றாக வைத்து "இவன் நீர்மேற் குமிழியாக மறைந்து போனான். சுவரோ நிலைத்து நிற்கிறது. ஆகவே மனிதன் வாழவில்லை; மதில்தான் வாழுகிறது" என்று யாராவது சொல்வார்களா? எவ்வளவுகாலம் இருந்தோம் என்பதைக் கொண்டன்று; எப்படி இருந்தோம் என்பதைக் கொண்டே வாழ்ந்தோமா இல்லையா என்பதை நிருணயிக்க வேண்டியுள்ளது. எவ்வளவு காலந்தான் நின்ற பொழுதிலும் சுவரை நாம் வாழ்ந்ததாகக் கருதுவதில்லை; அது வாழவில்லை; இருக்கிறது. மனிதனோவாழ்கிறான்; அவனுள்ளே உணர்ச்சிகளும் கருத்துக்களுமஎண்ணங்களும் ஊற்றெடுத்துப் பெருகி வெள்ளக்காடாய் மணடிவிடுகின்றன. இந்த உள் உசைத்தை வைத்துத்தான் வாழ்க்கையை அளவிடுகிறோம். எவனுக்கு இந்த உலகம் வளம் பொருந்தியதாக இருக்கிறதோ அவன் வாழ்பவன். உள்ளுலகம் ஒன்றுமில்லாத சூனியமாக இருக்குமானால் அந்த மனிதனிடம் மற்றை எது இருந்தாலும் அவன் வாழவில்லை.

37. இப்பந்தியின் ஆசிரியர் வாசகனுக்கு அறிவிக்க விரும்பும் கருத்து,
(1) கருங்கற் சுவரின் அழிவற்ற தன்மை,
(2) மனைளம் கொண்டே வாழ்க்கை கணிக்கப் படுகிறது.
(3) வாழுங்காலம் கொண்டே வாழ்க்கை கணிக்கப்படுகிறது.
(4) மனித வாழ்க்கை நீர்மேற் குமிழியாய் அழிந்துவிடும்.

38. இங்குத் தரப்பட்ட பந்தி கருத்தை விளக்கும் முறை,
(1) ஒப்பீட்டு முறை (2) உதாரணங் காட்டும் முறை
(3) காரண காரியம் காட்டும் முறை
(4) வேற்றுமை காட்டும் முறை

39. இப்பந்தியை வாசித்தபின் எமது மனத்தில் உண்டாகும எண்ணம்,
(1) கருங்கற் சுவர்போல் நீண்ட ஆயுளுடன் வாழவேணடும்.
(2) உள்ளுலகம் ஒன்று மில்லாத சூனியமாக வாழ வேண்டும்.
(3) மனத்தில் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வளர்க்க வேண்டும்.
(4) எப்படியாவது செல்வம் சேர்த்து வாழ வேண்டும்.

40. இவ்வுரைப் பகுதி ஆசிரியர் கூற்றுக்குப் பொருந்தாத கூற்று,
(1) கருங்கற் சுவர் நெடுங்காலம் நின்றபோதிலும் வாழவில்லை
(2) மனிதனிடம் கருத்துக்களும் உணர்ச்சிகளும் தோன்றுகின்றன
(3) கருகற் சுவர் நீண்ட காலமாய் நின்று வாழ்கிறது
(4) மனிதனின் வாழ்நாள் கருங்கற் சுவரைவிட மிகக் குறைவு

பகுதி: II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் பத்தியமைத்துக் குறியீடுகள் இடாது எழுதுக.

(அ) வீட்டுத் தோட்டம் அமைத்தலும் அதனால் நாம் பெறும் பயன்களும் என்பதுபற்றி விளக்கக் கட்டுரை.

(ஆ) "குடையுஞ் செருப்பு மின்றிக் கொழுத்தும் வெயிலில் வழிநடை நடந்தபோது....." என்ற தலைப்பில் நீர்க்கண்ட காட்சிகளையும் அனுபவங்களையும் வருணித்து எழுதுக.

(இ) வாழ்வாங்கு வாழ்ந்த எங்களூர்ப் பெரியார் - என்ற தலைப்பில் வரலாற்றுச் சித்திரம்.

(ஈ) "எனக்கும் பறவைகளைப் போலச் சிறகு முளைத்தால்....." என்பது பற்றிய கற்பனை.

2. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுக. (கடிதத்தின் தலைப்பு, விளிப்பு என்பன முறைபுத அமைதல் வேண்டும். அவை சொற்றொகைக் கணிப்பில் அடங்கா)

(அ) அகதிகளாய் இடம்பெயர்ந்த உமது குடும்பத்தினருக்குப் புகலிடமளித்து ஆதரவு தந்த நண்பனுக்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம்.

(ஆ) விபத்தொன்றில் ஒரு கண்ணிழந்து மருத்துவமனையிற் சிகிச்சை பெறும் உமது நண்பனுக்கு ஆறுதலும் ஒரு கண்ணிழந்தாலும் சிறப்புடன் வாழ முடியும் எனத் தேறுதலும் கூறி ஒரு கடிதம்.

3. பின்வரும் ஆறு வாக்கியங்கள் ஒழுங்கின்றி அமைந்துள்ளன. அவற்றை ஒழுங்காக்கினால் பொருட் தொடர்புடைய ஒரு பந்தியாகும் ஒழுங்காக எழுதுங்கள்.

(அ) நாற்புறமும் அடைப்பாக உள்ள பள்ளத்தாக்குகளில் வளரும் மரங்கள் எளிதில் முறிந்து விடும் இயல்பின. (ஆ) ஆனால் அடுத்தடுத்துக் காற்றினால் அலைக்கப்படும் மரமோ உரம் ஏறப்பெற்று நிலத்திலே அழுத்தமாக வேர் ஊன்றுகிறது. (இ) ஆகவே அச்சத்துக்கு ஏதுவான நிகழ்ச்சிகளின் நடுவே உயிர் வாழப் பெறுவதே நல்லோன் ஒருவனுக்கு நன்மை அளிக்கின்றது. (ஈ) மேலும் எந்தத் துன்பத்தையும்துன்பமாகக் கருதாமையிலிருந்து எத்தகைய இடர் வரினும் அதனைப் பொறுக்கவும் கற்றுக் கொள்கிறான். (உ) பலகாலும் காற்றினால் அலைக்கப்படாத எத்தகைய மரமும் வலுவாய் உறுதியாய் நிற்பதில்லை. (ஊ) ஏனென்றால் அவற்றின் நடுவிலிருந்து பழகப் பழக அவன் அஞ்சா நெஞ்சினன் ஆகின்றான்.

(குறிப்பு: இதில், 'உ' எழுத்திடப்பட்டதே முதல் வாக்கியம்)

4. பழந்தமிழர் கலைகளைக் கட்டுரையாசிரியர் நால்வகையாகப் பிரித்து ஆராயும் வகையை உதாரணங் காட்டி விளக்குக.

பகுதி: III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) ''அஞ்சல் மடவனமே யுன்ற னணி நடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் — விஞ்சியது
காணப் பிடித்தது காண்''

(ஆ) ''வீமன் றிருமடந்தை மென்மாலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்''

(இ) வாவியுறையும் மடவனமே பென்னுடைய
வாவியுவந் தளித்தாய் யாதியாற் — காவினிடைத்
தேர்வேந்தற் கென்நிலைமை சென்றுரைத்தி''

2. பின்வரும் பாடல்களைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ''எழுவடுதோள் மன்னா இலங்கிழைபேர் தூண்டக்
கொழுநுதிபிற் சாய்ந்த குவளை — யுழுநர்
மடைமிதிப்பத் தேம்பாயும் மாடெலிநீர் நாடன்
கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

(i) இப்பாடலின் பொருளை விளக்கமாக உமது வசனநடையில் எழுதுக.

(ii) விதர்ப்ப நாட்டின் நீர்வளம் இப்பாடலிற் காட்டப்படும் முறையை விளக்குக.

(ஆ) ''அரும் பெறல் யாக்கை பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றலே கொள்க — கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு''

(i) இப்பாடலின் பொருளை விளக்கமாக உமது வசன நடையில் எழுதுக.

(ii) இப்பாடலில் வந்த உவமையை விளக்கி எழுதுக.

3. இஸ்லாமியக்கலையும் பண்பும் என்னும் கட்டுரையில் இஸ்லாமியர் வளர்த்த சில கைத்தொழில்களையும் அவற்றின் பண்பையும் கட்டுரையாசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?

செயல்: 5

பகுதி: I

1. பொருத்தமான விடையின்மேற்க் கோடுங்கள்

1. வேதி நூற்றுறையிலே சிறப்புத் தேர்ச்சி பெற்றான் - வேதிநூல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) வேதநூல் (2) இரசாயனம் (3) அரசியல் (4) பௌதிகம்

2. பஞ்சரத்தில் வாழ்ந்த கிளியின் குரல் கேட்டுத் திகைத்தாள் - பஞ்சரம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) சோலை (2) பொந்து (3) தோப்பு (4) கூண்டு

3. இலம்பாடு என்னும் குறைபாடு என்றுதான் நீங்குமோ? - இலம்பாடு என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்,
(1) பஞ்சம் (2) இலஞ்சம் (3) வறுமை (4) கொடுமை

4. ''மூல்லைச் சிரிப்பாலே எனது மூர்க்கம் தவிர்த்திடுவாய்'' - மூர்க்கம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) கோபம் (2) சாந்தம் (3) இன்பம் (4) பொறுமை

5. களர்நிலத்து நெற்பயிர் வெம்மையால் வாடியது - களர்நிலம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) விளைநிலம் (2) மேட்டுநிலம் (3) காட்டுநிலம் 4) பாலைநிலம்

2. இடவெளியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

6. ஏன் ..... நிற்கிறாய்; உள்ளே வா.
(1) தாவாரத்தில் (2) தாள்வாரத்தில்
(3) தாவாறத்தில் (4) தாழ்வாரத்தில்

7. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று ..... செய்பவர்களுக்கு உண்மையை உணர்த்த முடியுமா?
(1) வரைவிலக்கணம் (2) விதண்டாவாதம்
(3) விண்ணப்பம் (4) வேண்டுகோள்

8. இனப்பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு கிடைக்குமென இந்திய ..... கருத்துத் தெரிந்தன.
(1) நீதிபதி வட்டாரங்கள் (2) எதிர்க்கட்சி வட்டாரங்கள்
(3) இராச தந்திர வட்டாரங்கள் (4) மேற்சபை வட்டாரங்கள்

9. அரசியற் தலைவர்களின் .....பேச்சுக்கள் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கா
(1) ஆக்கபூர்வமான (2) வகுப்புவாதமான
(3) சொல்லலங்காரமான (4) தான்தோன்றித்தனமான

3. பின்வரும் தொடர்புகளுக்குப் பொருத்தமான சொல்லை அல்லது சொற் தொடரைத் தெரிக.

10. பெண்ணுக்குத் தந்தை முதலானோராற் கொடுக்கப்படும் பொருள்,
(1) தாயம் (2) சீதனம் (3) நன்கொடை (4) முதுசொம்

11. உலகத்துச் சான்றோர் வாழ்ந்த முறையறிந்து ஒழுகுதல்,
(1) சான்றாண்மை (2) பட்டறிவு
(3) ஒப்புரவு (4) ஆசாரம்

12. ஒருநாட்டின் செல்வத்தின் பெறுமதிக்கு அதிகமாக அந்நாட்டில் பணம் புழங்கும் நிலை,
(1) கள்ளப்பணம் (2) கறுப்புப்பணம்
(3) பணவீக்கம் (4) பணமோசடி

13. உள்ளத்திலே நிகழ்ந்து பிறர்க்கு இத்தன்மையான்தென்று கூற முடியாத இன்ப ஒழுக்கம்,
(1) அகத்திணை (2) அஃறிணை
(3) புறத்திணை (4) உயர்திணை

4. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

14. ஆண்டிகள் கூடி மடங் கட்டுதல் என்பதன் உட்பொருளை விளக்கத்தக்க மரபுத் தொடர்,
(1) வெறுவாய் சப்புதல் (2) மனப்பால் குடித்தல்
(3) நாக்கு வளைத்தல் (4) கல்லில் நார் உரித்தல்

15. சரியான மறுமொழி சொல்லாமற் பூசிமெழுகினாள் - பூசிமெழுகுதல் என்ற மரபுத்தொடரின் பொருள்,
(1) பொய் கூறுதல்
(2) சிரித்துப் பேசுதல்
(3) குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
(4) பதில் போசாது நிற்றல்

16. ஆசிரியர்களிற் சிலர் மாணாக்கர்களின் திறமையைப் பாராட்டி உற்சாகமளிப்பர் என்னும் பொருளை விளக்கும் பழமொழி,
(1) கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
(2) சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.
(3) பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டுமா?
(4) ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்.

17. ''பொரிமாவை மிச்சினானாம் பொக்கை வாயன்'' - என்னும் பழமொழியின் கருத்து.
(1) பொரிமாவே பொக்கைவாயன் விரும்பும் உணவு.

(2) பல்லில்லாதவர்கள் நல்ல உணவைச் சுவைக்க முடியாது.
(3) கிழவர்கள் எதனையும் நன்றாக இரசிக்க மாட்டார்கள்.
(4) தத்தம் தகுதிகேற்றவாறே எவரும் எதனையும் அனுபவிப்பர்.

18. .... ஊரறிந்த உண்மையை மறைத்து என்னென்னவோ சொல்கிறாள் - இடைவெளியில் வைக்கத்தக்க உவமை,
(1) குப்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல.
(2) வேலியே பயிரை மேய்ந்தது போல
(3) முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைப்பது போல
(4) உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது போல.

5. பொருத்தமான விடையினை எழுதுக.

19. பின்வருவனவற்றுள் இனவெழுத்து இல்லாத தொகுதி,
(1) இடையினம் (2) வல்லினம்
(3) மெல்லினம் (4) உயிரினம்

20. இலக்கணப் போலியாய் அமைந்த சொல்,
(1) வாணாள் (2) நுனிமரம் (3) நகாப்புறம் (4) தண்ணீர்

21. குழந்தாய், நீ ஓடி விளையாடல் வேண்டும் - இதன் எழுவாய்,
(1) குழந்தாய் (2) நீ (2) விளையாடல் (4) ஓடி

22. பின்வருவனவற்றுள் சிறுகெட்ட தொழிற்பெயர் செயப்படு பொருளாய் வந்த வாக்கியம்,
(1) குழந்தை தவழ்ந்து செல்லக் கண்டேன்
(2) போகம்போக எல்லாம் விளங்கும்
(3) அவர்கள் பாடுதலைக் கேட்டேன்
(4) குழந்தை, நீ அழக்கூடாது.

23. தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும் - இதன் பயனிலை,
(1) மட்டும் (2) சுடுகாடுமட்டும் (3) தொடரும் (4) பழக்கம்

24. நாங்கள் வீட்டுக்கு வரும்போது நன்றாக இருட்டிவிட்டது - இதன் எழுவாய்,
(1) நாங்கள் (2) வீடு (3) வரும்போது (4) பொழுது

25. பின்வருவனவற்றில் வந்த திசைச் சொல்,
(1) புடைவை (2) சால்வை (3) போர்வை (4) அறுவை

26. நீங்கள் என்னும் சொல் மூன்றாம் வேற்றுமை ஆல் உருபு ஏற்றால் வரும் வடிவம்,
(1) நீங்களால் (2) எங்களால்
(3) உங்களால் (4) நீங்களினால்

27. கண் என்னும் பெயர் ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்த வாக்கியம்,

(1) கண்ணிற் செவ்வரி படர்ந்தது
(2) கண்ணீற் சிறந்த உறுப்பில்லை
(3) கண்ணின் இமை துடித்தது
(4) கண்ணின் மணி போன்றவள்.

28. இருதினை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான தெரிநிலை வினைமுற்று.

(1) இல்லை (2) கூறுக (3) கூறுமின் (4) வந்தனை

29. குறிப்புவினை முற்றாகவும் குறிப்புவினைப் பெயரெச்சமாகவும் அமையத்தக்க சொல்,

(1) உண்ட (2) காய்க்கும் (3) உண்டு (4) அழகிய

30. பின்வருவனவற்றில் வந்த பிழையான வாக்கியம்,

(1) நீ தியை யல்லை (2) நான் தியேனல்ல
(3) அது தியதன்று (4) அவை தியவையல்ல

6. மிகப் பொருத்தமான விடையைத் தெரிக.

31. பண்டைத் தமிழகத்தில் இசைக்கலை சிறப்புற்றிருந்தமையை அறிய சமூகவியற் காரணமாய் அமைந்த பெயர்,

(1) ஆயர்சேரி (2) கூத்தக்கண்ணனார்
(3) வேட்டுவசேரி (4) பாண்சேரி

32. மெய்யுணர்வுக்கலை எனப்படுவது,

(1) உணர்வின்பம் தருவது
(2) பொருள்கள் வாயிலாகப் பெறுவது
(3) ஆராய்ச்சிகளால் விளைவது
(4) உணர்வு நிலையில் உணரப்படுவது

33. தெலுங்கு மொழியின் ஆதி இலக்கிய நூல்,

(1) நன்னைய பாரதம் (2) சிலப்பதிகாரம்
(3) கவிராஜமார்க்கம் (4) ராமசரிதம்

34. கிறிஸ்து ஆண்டின் மிக முற்பட்ட காலத்தே தமிழிலக்கியம் தோன்றியிருக்க வேண்டும் என்னும் கூற்றுக்கு ஆதாரமாய் அமையாதது,

(1) கிறீஸ்து ஆண்டின் ஆரம்பத்தில் தோன்றிய ஆதி இலக்கியங்களின் திருந்திய வடிவம்

(2) அவ்விலக்கியங்களிற் காணப்படும் செய்யுளழகு
(3) அவை வடமொழிச் செய்யுளமைப்புக் கொண்டிருத்தல்
(4) அவைகளிற் காணப்படும் முதிர்ந்த பக்குவநிலை

35. மொழிவழக்கிலும் ஊருடன் கூடி வாழ வேண்டும் என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணம்,
(1) பேச்சுமொழி உயிருள்ள மொழியாயிருத்தல்
(2) பேச்சுமொழி வழுவின்றி அமைந்திருத்தல்
(3) தவறாயினும் பெரும்பான்மையோரின் மொழி செல்லாக்குப் பெறுதல்
(4) தவறைத் திருத்தினால் ஊர்மக்கள் கோபமடைவர்.

36. சீவக சிந்தாமணி ஆசிரியர்,
(1) திருத்தக்க தேவர் (2) இளங்கோவடிகள்
(3) சபண முனிவர்கள் (4) வில்லிபுத்தூராழ்வார்

7. பின்வருஞ் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.

"வெள்ளிய அன்னக் கூட்டம் விளையாடி வீழ்வ தைப்போல்
துள்ளியே அலைகள் மென்மேல் கரையினிற் சுழன்று வீழும்
வெள்ளலை கரையைத் தொட்டு மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி யாடிப் பெரியதோர் வியப்பைச் செய்யும்"

37. இப்பாடலில் ஆசிரியர் புலப்படுத்த விரும்பும் மையப்பொருள்,
(1) கடலின் எழிற்காட்சி
(2) அன்னக்கூட்டம் விளையாடுங் காட்சி
(3) கடலலையும் கடற்கரையும்
(4) நண்டுப்பிள்ளைகளின் வியத்தகு செயல்

38. "வெள்ளிய அன்னக் கூட்டம் விளையாடி வீழ்வது" என்னும் கூற்று இப்பாடலிலே
(1) மையப் பொருளாய் அமைகிறது
(2) உதாரணமாய் அமைகிறது
(3) சார்புப் பொருளாய் அமைகிறது
(4) உவமையாய் அமைகிறது.

39. நண்டுப் பிள்ளைகள் செய்த வியப்பு எதுவாயிருக்கலாம்?
(1) கூட்டமாய் அங்குமிங்கும் ஓடுவது

(2) வெள்ளலை மீண்டபின் புற்றுள்ளிருந்து ஒவ்வொன்றாகப் புறப்படுவது

(3) வெள்ளலை சுத்தம் செய்த கரையில் எட்டுக்கால் பதித்துக் கோலம் போடுவது

(4) வெள்ளலை கரையத் தொட வரும்போது புற்றுக்குள் மறைவது.

40. பாடலைப் படித்து இரசித்த பின் எச்சுவை உமது மனத்தில் விஞ்சி நிறைகிறது.

(1) நகை (2) உவகை (3) இழிவரல் (4) பெருமிதம்

பகுதி: II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் பந்தியளவுத் தலைப்பிட்டு எழுதுக.

(அ) 'நீர்த்தடையாதலுங்' என்னுந் தலைப்பில், நீரின் வியந்தருபயன்கள் பற்றிய விளக்கக் கட்டுரை.

(ஆ) எழுத்தறிவு அறிவு வளர்கிறது; இலக்கியத்தால் மனம் பண்படுகிறது என்னுங் கருத்தை விரித்து "வாழ்வின் இரு கண்கள்" என்ற தலைப்பில் ஏதுவோடு உதாரணங் காட்டி எழுதுக.

(இ) 'இறைவனை நான் நேர் நேராகத் தரிசிக்க நேர்ந்தால்.....' என்ற கற்பனை செய்து எழுதுக.

(ஈ) "அருணன் உதித்தனன்" என்ற தலைப்பில், உவமை, உருவகம், கற்பனை, மேற்கோட் செய்யுள் முதலிய பொருத்தமானவற்றைப் பயன்படுத்தி வருணனைக் கட்டுரை

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுக.

(அ) உமது நண்பன் மாணவருக்காக நடத்தப்பட்ட அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெறுகிறான். அவனைப் பாராட்டியும் அத்துறையில் மேலும் சிறப்படைய வழி கூறியும் வாழ்த்தியும் ஒரு கடிதம்.

(ஆ) உமது ஊரில் அல்லது நகரில் குடிசைகள் நிறைந்த ஒருபகுதி தீவிபத்தால் நாசமடைகிறது. அங்குச் சென்ற நீர் தீ விபத்துக்கான காரணம், சேத விபரம், குடிசைவாழ்மக்கள் நிலை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு ஒரு அறிக்கை

5. பின்வருஞ் செய்யுளை நன்கு படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

''தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விளித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம் வீற்றிருக்கு மாதோ''

[அரும்பதப் பொருள்: தண்டலை-சோலை; விளக்கம் - விளக்கு; கொண்டல்கள்- முகில்கள்; முழவின் ஏங்க -மத்தளம்போல் ஒலிக்க; குவளை - கண்களுக்கு உவமையாகும் நீர்ப்பூ; திரை - அலை; எழினி - திரைச்சீலை; யாழின்-யாழின் ஒலி போல்; மருதம் - மருத நிலமாகிய அரசன் அல்லது அரசி]

(அ) மருதம் கொலு வீற்றிருக்கிறது: அதன் முன்னே ஒரு நடன நிகழ்ச்சி நடைபெறுகிறது. (1) நடனம் நிகழும் அரங்கு எது? (2) எழினி எது? (3) நடனமாதர் யார்? (4) விளக்கு எது? (5) முழவு எது? (6) பாடுவோர் யார்? (7) பார்வையாளர் யார்?

(ஆ) (1) இப்பாடலின் மையப்பொருள் யாது? (2) பொருளைப் புலப்படுத்தப் புலவர் இப்பாடலில் உருவக அணியைக் கையாளு கிறார். அவ்வுருவகங்களை உவமைகளாக்கி எழுதுக.

(இ) மயில், தாமரை, கொண்டல் முதலாக இங்குக் கூறப்பட்ட பொருள்களுக்கும் மருதத்துக்கும் உள்ளதொடர்பு யாதாயிருக்கலாம்?

(ஈ) இப்பாடலில் நீர் கண்டு அனுபவிக்கும் காட்சியைச் சிறுச்சிறு வசனங்களாக, தேவையான இடங்களில் வேறு வாக்கியங்கள் சேர்த்து, நிகழ்காலத்தில், சொந்த வசனநடையில் எழுதிக் காட்டுங்கள்.

4. தமிழ்மொழியின் (1) தொன்மைச் சிறப்பு, (2) பொதுமைச் சிறப்பு (3) செய்யுள் மரபுச் சிறப்பு என்பவற்றைத் தொல்காப்பியமும் மொழி வளர்ச்சியும் என்னும் கட்டுரையில் ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?

பகுதி: III

1. பின்வருவனவற்றுள்ளுள் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) ''அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணு
மறங்கிடந்த திண்டோள் வலியுந் - திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
வங்கண்மா ஞாலத் தவற்கு.

(ஆ) ''மன்னன் புயலின் வனமார்புக் கச்சாகும்
என்ன முயங்குவிப்பேன்''

(இ) ''இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மான மழிந்ததுநாண் — மற்றினியுன்
வாயுடைத் தென்னுடைய வாழ்வு''

2. பின்வருஞ் செய்யுள்களைப் படித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) சீதமதிக் குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ் பூந்தாரான் தனிக்காத்தான் - மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவுற உமது வசன நடையில் எழுதுக.

(2) இப்பாடலின் மூலம் புலப்படும் குறிப்புப் பொருளை விளக்குக.

(ஆ) ''இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவுற உமது வசனநடையில் எழுதுக.

(2) இப்பாடலிற் கவிஞன் வாசகனுக்கு உணர்த்தும் அறநெறி எது வென விளக்குக.

3. ''இஸ்லாமியக் கலையும் பண்பும்'' என்னும் கட்டுரையில் இஸ்லாமியர் வர்த்தகத்துறையிற் பெற்றிருந்த செல்வாக்குப் பற்றி, ஆசிரியர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துத் தொழுதுக.

செயல்: 6.

பகுதி: I

1. மிகப் பொருத்தமான விடையைத் தெரிக.

1. அறம் வெல்லும் என்பதைத் தனது பூட்கையாகக் கொண்டவன் தருமன்- பூட்கை என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) வீரம் (2) இலட்சியம் (3) ஒழுக்கம் (4) தருமம்

2. சான்றோர் ஒழுக்கத்தை அருங்கலமாகக் கொள்வர் - அருங்கலம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) சிறப்பு (2) பொற்பாத்திரம் (3) அட்சயபாத்திரம்
(4) அணிகலம்.

3. கானுறை பறவைகள் அந்தியில் தத்தம் சேக்கையை அடைந்தன - சேக்கை என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) மரக்கிளை (2) அமளி (3) கூடு (4) சூகை

4. திண்மை கொண்ட உடலும் உள்ளமும் கொண்டவர் எதனையும் சாதிப்பர் - திண்மை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) தொய்ம்மை (2) வன்மை (3) கோழைமை (4) நீர்மை

5. துச்சாதனனைப் பாரதம் முழுமகனாகக் காட்டுகிறது - முழுமகன் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) அரைமகன் (2) பெருமகன் (3) அறிஞன் (4) மூடன்

2. இக் வெளியை நிரப்புக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

6. மூன்றோர் தேடிவைத்த அசையும் அசையாப் பொருள்களான ..... விற்றுச் சீவனம் நடத்தினான்,
(1) சராசரத்தை (2) சேதனத்தை
(3) மாராயத்தை (4) தாவர சங்கமத்தை

7. அவன் விபத்தில் இறந்தபோது அவனது..... பணத்தை மனைவி பெற்றாள்.
(1) நன்கொடை (2) சீதனம்
(3) அன்பளிப்பு (4) ஆயுட் காப்புறுதி

8. செய்யுளையோ பிறர் கூற்றையோ மேற்கோளாக எடுத்துக் காட்டல்.....எனப்படும்
(1) உதாரணம் (2) உவமை (3) அனுவாதம் (4) நியாயவாதம்

9. கையில் தோன்றிய ..... உடைந்து சீழ் வடிந்தது.
(1) கொப்புளம் (2) கொப்பழம் (3) மொக்கழம் (4) மொக்குளம்

3. பின்வருஞ் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

10. தம் நாட்டிலிருந்து வேற்று நாட்டுக்குச் செல்வோர் தம் நாட்டரசிடமிருந்து பெறும் அனுமதிப்பத்திரம்,
(1) பிரயாணச் சீட்டு (2) நுழைவுச் சீட்டு
(3) கடவுச் சீட்டு (3) விடுகைச் சீட்டு

11. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிகளும்
(1) நால் வருணம் (2) புருடார்த்தம் (3) சதுர்மறை (4) நாற்பாதம்

12. செய்யுளில் ஓசை குறையுமிடத்து எழுத்துக்கள் நீண்டொலித்தல்,
(1) அளபெடை (2) மாத்திரை (3) நெட்டெழுத்து
(4) நெடிற்றொடர்

13. மாலையில் அல்லது இரவிற் கூடும் சந்தை,
(1) சிறுசந்தை (2) நாளங்காடி (3) அல்லங்காடி
(4) பேரங்காடி

4. பொருத்தமான விடையைத் தெரிக.

14. எதனையும் முறையின்றி, ஒழுங்கின்றிச் செய்தல் என்னும் பொருளைப் புலப்படுத்தும் மரபுத் தொடர்.
(1) குத்துக் கரணம் 2) தப்புத்தாளம்
(3) அண்டப் புரட்டு (4) கழுத்தை முறித்தல்

15. அவன் எல்லார்க்கும் எடுப்பார் கைப்பிள்ளையாய் விளங்கினான்- எடுப்பார் கைப்பிள்ளை என்னும் மரபுத் தொடரின் பொருள்,
(1) நற்குணமுடையவன் (2) எவருக்கும் வசப்படக் கூடியவன்
(3) குழந்தைப் புத்தியுள்ளவன் (4) தொண்டு செய்பவன்

16. காரணமின்றிக் காரியமில்லை என்னுங் கருத்தை விளக்கும் பழ மொழி,
(1) எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
(2) வேலிக்கு வைத்தமுள் காலில் குற்றியது.
(3) மாடு கிழமானால் பாலின் சுவை போகுமா?
(4) பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.

17. "ஊருக்குபதேசம் உனக்கல்லடி மகனே" என்னும் பழமொழியின் கருத்து,
(1) அறிவுரையைக் கேட்டு எவரும் பயனடைவதில்லை
(2) பிறருக்கு அறிவுரை கூறுதல் மிக இலகுவான செயல்
(3) பெண்கள் எவர் உபதேசத்தையும் கேட்பதில்லை
(4) வாக்கு நாணயம் உள்ளவன் சொன்ன சொற்படி நடப்பான்.

18. தோர்வேக்குத் தன்னந்தனியாகச் சென்ற குமரன் ..... திகைத்தான். இடைவெளியில் இட்டு நிரப்பத்தக்க உவமைத் தொடர்,
(1) இனம் பிரிந்த மான்போல
(2) புலிக்கூட்டத்தில் அகப்பட்ட மான்போல
(3) உடுக்கை இழந்தவன் கைபோல
(4) கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதைப்போல

5. பொருத்தமான விடையைத் தெரிக.

19. இங்கு வருவோர் எவரும் உத்தரவின்றி உள்ளே வரக் கூடாது—இதன் எழுவாய்,
(1) வருவோர் (2) எவரும்
(3) வருவோர் எவரும் (4) உள்ளேவர

20. பசித்தபோது புசிப்போர்க்கு நோய் உண்டாகாது - இதில் பசித்த போது புசிப்போர்க்கு என்பது,
(1) எழுவாய் வடிவம் (2) எழுவாய் அடைமொழி
(3) பயனிலை வடிவம் (4) பயனிலை அடைமொழி

21. யாங்காணேம் கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து - இதன் செயப்படுபொருள்.
(1) கல்வி (4) மருந்து
(3) மம்மர் அறுக்கும் மருந்து (4) அறுக்கும்மருந்து

22. அப்பப்பா, இன்று கடுங்குளிரரய் இருக்கிறது - இதன் எழுவாய்,
(1) அப்பப்பா (2) நீ (3) கடுங்குளிர் (4) காலநிலை

23. பின்வருவனவற்றுள் ஒரு சொல் பொருத்தமற்றது; அதன் கீழ்க் கீறிடுக.
(1) கொலை (2) அறம் (3) சேர்வை (4) தொழுகை

24. குடி குடியைக் கொடுக்கும்—இதில் முதலில் வந்த குடி,
(1) முதனிலைத் தொழிற்பெயர் (2) பொருட்பெயர்
(3) தொழிற்பெயர் (4) குணப்பெயர்

25. ''கார் பெற்ற தோகையோ''—இதில் வந்த தோகை என்பது,
(1) பொருட்பெயர் (2) சினைப்பெயர்
(3) பொருளாகு பெயர் (4) சினையாகுபெயர்

26. அவை, இவை என்னும் பெயர்ச்சொற்கள் வேற்றுமை ஏற்கும் போது,
(1) அன் சாரியை பெறும் (2) அற்றுசாரியை பெறும்
(3) இன் சாரியை பெறும் (4) அத்து சாரியை பெறும்

27. வெம்மையால் வெந்தான்—வெந்தான் என்பதன் பகுதி,
(1) வெந்து (2) வே (3) வெம்மை (4) வெந்த

28. பகுதி இரட்டித்ததும் இடைநிலைபெற்றும் காலங்காட்டக்கூடிய ஒரு வினையடி
(1) நடு (2) கொடு (3) விடு (4) எடு

29. செயப்பாட்டுவினை இடம் பெற்ற வாக்கியம்,
(1) அவன் தறித்து மரம் விழுந்தது
(2) மரம் தறியுண்டு விழுந்தது

(3) மரம் விழுந்தது

(4) அவன் மரந்தறிக்க விழுந்தது

30. பின்வருவனவற்றில் நடந்தது என்னுஞ் சொல் வினையாலணை யும் பெயராய் வந்த வாக்கியம்,

(1) அவன் நடந்ததைக் கண்டேன்

(2) அவன் விரைவாய் நடந்தது நன்று

(3) நடந்தது நடந்துவிட்டது

(4) குமரன் நடந்தது அழகாய் இருந்தது

5. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. நீதி நூல்களைக் காட்டிலும் காவியங்களும் கதைகளும் செல் வாக்குப்பெறக் காரணம்,

(1) உண்மையைக் கூறுதல்

(2) சுற்றிவளைத்துக் கூறல்

(3) கற்பனைக் கலப்போடு கூறுதல்

(4) கதாபாத்திரங்கள் வருதல்

32. தமிழிற்கே தனிஇனிமையுடைய செய்யுள் வகை அல்லாதது

(1) கலிப்பா (2) சுலோகப்பா (3) அகவற்பா (4) வெண்பா

33. தமிழ்மொழி வளர்ச்சியை நெறிப்படுத்திய இரு சக்திகள்,

(1) நியமசக்தியும் கற்பனாசக்தியும்

(2) கற்பனாசக்தியும் தாராளசக்தியும்

(3) நியம சக்தியும் தாராள சக்தியும்

(4) இவைமூன்றும்

34. பழந்தமிழரின் நாடகச் சிறப்பினை அறிய உதவும் நூல்,

(1) நெடுநல்வாடை (2) சிலப்பதிகாரம்

(3) புறநானூறு (4) நளவெண்பா

35. இராமகாதையை முதல் முதலிற் பாடியவர்,

(1) போதாயனர் (2) வியாசர்

(3) கம்பர் (4) வான்மீகி

36. தமிழ் இலக்கியம் என்னும் பாடநூலில் வரும் ஆசாரக்கோவை பாடியவர்,

(1) உமறுப்புலவர் (2) அல்-யாகூபி

(3) அல்பால்கி (4) மு.அ.க. அப்துல்மஜீது

6: பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிக.

மனித சமூகத்தை ஒன்றாக இணைப்பது கலை. அதிலும் மற்றெல்லாக் கலைகளைக் காட்டிலும் மனிதனை ஈர்க்கும் சக்தி, இசைக் கலைக்கு மிக அதிகமுண்டு. இனிமையான சங்கீதம் அரசியல் எல்லைகளையும் இன வேறுபாடுகளையும் கடந்து உள்ளத்தைத் தொடுகிறது. இன்று தென்னகத்துக் கெல்லாம் பொதுவாய் விளங்குகிறது கருநாடக சங்கீதம். தமிழர்களையும் ஆந்திரர்களையும் கேரளமக்களையும் கன்னட மக்களையும் அது ஒருங்கே கவர்ந்து அவர்களை மெய்ம் மறக்கச் செய்கிறது. உண்மையில் தொன்று தொட்டுப் பாரத நாட்டில் எங்குமே வழங்கி வந்தது இந்தக் கருநாடக இசைதான். இதற்கும் இந்துஸ்தானிச் சங்கீதத்துக்கும் பாடும் முறையிலே சற்றே வேறுபாடு இருப்பினும், இரண்டுக்கும் இலக்கணம் ஒன்றே. பிற்காலத்தில் பிறநாட்டு இசையுங்கலந்து இந்துஸ்தானி சங்கீத மாயிற்று. தூய்மையான கருநாடக சங்கீதத்தை மேன்மையுறச் செய்த முப்பெரியார்களில் முதல்வராகத் திகழ்பவர் தியாகையர். எண்ணற்ற இனிய கீர்த்தனைகளை இயற்றி இசை வழியாகப் பத்தியைப் பரப்பிய அந்த மகானைச் சங்கீத வித்துவான்களும் இரசிகர்களும் உள்ளன்போடு போற்றி வணங்கி வருகிறார்கள்.

37. இப்பந்தியின் ஆசிரியர் புலப்படுத்த விரும்பும் மையப்பொருள்.
(1) இசைக்கலையின் சிறப்பு
(2) கருநாடக இசையின் சிறப்பு
(3) தியாகையார் சிறப்பு
(4) இந்துஸ்தானி இசையின் சிறப்பு

38. பந்தியின் ஆரம்பத்திற் கூறப்பட்ட இசைக்கலைபற்றிய செய்தி,
(1) மையப்பொருளாய் அமைகிறது.
(2) மையப் பொருளை விளக்கும் முன்னுரை
(3) விளக்கமற்ற பொதுவான கூற்று
(4) வேண்டாக்கூற்று

39. தியாகையார் பற்றிய செய்தி,
(1) கருநாடக இசைச்சிறப்பின் சார்புக் கருத்தாய் அமைகிறது.
(2) தியாகையார் போற்றப்படும் காரணம் கூறுகிறது.
(3) கருநாடக சங்கீதத்தை மேன்மைப்படுத்தியவர் அவரே எனக் கூறுகிறது.
(4) இப்பந்திப் பொருளோடு ஒட்டாமல் தனித்து நிற்கிறது.

40. கருநாடக சங்கீதம் பற்றிய விளக்கம்,
(1) சார்புக்கருத்தை விளக்குவதாய் அமைகிறது.

(2) அரசியலையும் இன வேறுபாடுகளையும் கடந்தது சங்கீதம் என்பதற்கு உதாரணமாய் அமைகிறது.

(3) கருநாடகசங்கீதம் தென்னிந்தியாவிற் பிரபலமாயிருந்தது என்பதைவற்புறுத்துகிறது

(4) இந்துஸ்தானி சங்கீதம் கருநாடஇசை மரபிற்றோன்றியது எனக் காட்டுகிறது.

பகுதி: II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) பெரும்பான்மையான மூடநம்பிக்கைகளுக்கு அறியாமையே காரணம்— நியாயங் காட்டியும் உதாரணந் தந்தும் எழுதுக.

(ஆ) "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" என்பதை விளக்கும் கற்பனைக் கதை.

(இ) மின்னாற்றலின் வியந்தகு விளைவுகள் - வீட்டில், விவசாயத்தில் முதலியனவாசப் பொருட்கூறு செய்து, ஒவ்வொன்றையும் பந்தியாக்கி விளக்குக.

(ஈ) ஞாபகமறதியுள்ள ஒருவரின் வேடிக்கைச் செயல்கள் இரண்டு - இப்பொருள் பற்றி நகைச்சுவை தோன்ற எழுதுக.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுக.

(அ) உமது ஊரில் மின்சாரக் கோளாறு ஏற்பட்டுப் பல நாளாகியும் திருத்தப்படவில்லை. அது குறித்தும் அதனால் உண்டாகும் அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டியும் பிராந்திய மின்சாரப் பொறியியலாளருக்குக் கடிதம்.

(ஆ) தூர்ந்துபோன குளமொன்று உமது மேற்பார்வையில் திருத்தம் செய்யப்பட்டது. அங்குச் செய்யப்பட்ட வேலைகளும் விளைவும் பற்றி அறிக்கை எழுதுக.

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இன்று அறிவுத் துறைகள் பலவற்றிலே மின்வேகத்திலே புதுப் புதுக் கொள்கைகளும் உண்மைகளும் உருவாக்கிக்கொண்டு வருகின்றன. நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஒன்றன்பின் ஒன்றாய், அறிவுத் துறையிலே பெரும் பூரட்டி தோன்றும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை யாவற்றையும் எம்மவர் அறிவதென்றால், ஆங்கிலத்தையோ பிறிதொரு மேனாட்டு மொழியையோ கற்று, அதன் வழியாக அறிவு பெறுதற்கு வாய்ப்பு உண்டாக வேண்டும். இது பகற்

கனவு. இங்ஙனம் உலகில் என்றும் நடந்ததில்லை; இனியும் நடக்கப் போவதில்லை. மொழிபெயர்ப்பின் மூலமேஇதைச் செய்யலாம். ஆனால், அதுவும் எளிதாய் முடியக்கூடிய ஒன்றன்று. அறிஞர்கள் பற்பலர் ஆங்கிலத்தை மாத்திரமன்றி, ஜேர்மன்மொழி, பிரான்சுமொழி, உருசியமொழி முதலியவற்றையுங் கற்று, தாம் கற்றதைத் தமிழ்மொழி ஒன்றையே தெரிந்தவர்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். மொழிக்கலையில் நல்ல ஆற்றல் படைத்தவர்களும், வேண்டிய துறையில் அறிவுடையவர்களுமான ஒரு சிலரே எந்நாட்டிலும் இருப்பர். இவர்களுக்குப் போதிய தமிழறிவும் இருந்தால் இவர்கள் சிறந்த மொழி பெயர்ப்பாளர் ஆவர். இவ்வாறான தகுதிவாய்ந்தவர்களை விரல்விட்டு எண்ணலாம். ஆயினும் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நம் மொழிப் பெயர்ப்பது இன்றியமையாது செய்யவேண்டிய ஒன்றான படியால், எல்லா நிறைவும் உடையவர்கள் தோன்றும் வரையில், பொறுத்திருத்தல் முடியாது. வேண்டிய திறன்களில் ஒரளவு கைதேர்ந்தவர்கள் இப்பணியில் ஈடுபடல் வேண்டும். இம்முயற்சியும் ஆரம்பத்தில் வழுக்கள் இன்றி நிறைவேறாது. பயிற்சியால் திறமையும் நுண்மையும் கைகூடும். இவற்றை மறவாது மொழிபெயர்ப்பு முயற்சியில் ஈடுபடவேண்டும்.

(அ) இப்பந்தியின் தலைமைக் கருத்து யாது? அதனைத் தலையங்க வடிவில் எழுதுக.

(ஆ) மொழிபெயர்ப்பு நூல்கள் முதலியவற்றால் எம்மவர் பெறும் பிரதான பயன் யாது?

(இ) எல்லா நிறைவும் உடைய மொழிப்பெயர்ப்பாளர் யார்?

(ஈ) இங்குப் பகற்கனவு எனக் கூறப்பட்டது யாது?

(உ) ஆரம்ப மொழிபெயர்ப்பு முயற்சி பற்றி இங்குக் கூறப்பட்ட கருத்துக்கள் எவை?

4. ''மாங்காய்ப்பழம்'' என்று மாம்பழம் விற்பவன் கூறுவதற்கும் ''மாங்காய்மரம்'' என்று கூறாமைக்கும் காரணம் யாதென ''ஊருட்கூடி வாழ்'' என்னும் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்.

பகுதி: III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பங் கூறி விளக்குக.

(அ) ''அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
உன்னவே சோரு முனக்கவனோ—டென்னை
யடைவு''

(ஆ) ''மஞ்சை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கும் அறைக''

(இ) ''அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
வென்னுயிரை மீளவெனக் களித்தாய்''

2. பின்வரும் பாடல்களைப் படித்தபின் அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) ''தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான் - கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலும் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்''

(i) இப்பாடலின் பொருளைத் தெளிவுற உமது வசனநடையில் எழுதுக.

(ii) இப்பாடலிற் காணப்படும் புலவனின் கற்பனைத் திறத்தை விளக்குக.

(ஆ) கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தோர் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமு லாளர் தொடர்பு''

(i) இப்பாடலின் பொருளை விளக்கமாக எழுதுக.

(ii) இப்பாடலில் வரும் உவமை மூலம் புலப்படுத்தப்படும் கருத்து யாதென விளக்குக.

3. இஸ்லாமியக் கலையும் பண்பும் என்னுங் கட்டுரையில், இஸ்லாம் மார்க்கத்தின் தனிப்பண்புகள் எவையெனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்?

செயல்: 7

பகுதி: I

1. பொருத்தமான விடையின் மேற் கோடிடுக.

1. செய்ந்நன்றி மறந்தவர்களுக்குக் கழுவாய் இல்லை என்பது வள்ளுவர் கருத்து. கழுவாய் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) ஒருவகை ஆயுதம் (2) உய்யும் வழி
(3) கழுவுதல் (4) மோட்சம்

2. ஒழுக்கம் விருப்பம் தரும் என்பது ஒருதலை - ஒருதலை என்பதன் ஒத்த கருத்துச் சொல்
(1) நிண்மம் (2) கொள்கை (3) முடிவு (4) சந்தேகம்

3. பொருளறியாது நெட்டுருச் செய்தல் பயனற்றது - நெட்டுரு என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) நீண்ட உருவம் (2) படிப்பு
(3) பாடுதல் (4) பாடமாக்கல்

4. தினைத்துணை நன்றியையும் பெரியோர் மறவார் - தினைத்துணை என்பதன் எதிர்க்கருத்துச் சொல், (1) எட்டுணை
(2) கடற்றுணை (3) பனைத்துணை (4) எத்துணை

5. பெரியோரை வந்தித்து ஆசி பெறுவது நற்பழக்கம் - வந்தித்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல், (1) வணங்கல்
(2) வரவேற்றல் (3) புறக்கணித்தல் (4) நிந்தித்தல்

2. இடைவெளியை நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

6. தேவனிடம் குமரன் ஐந்நூறு ரூபா..... வாங்கினான்.
(1) கைம்மாத்தாக (2) கைமாத்தாக
(3) கைமாற்றாக (4) கைம்மாற்றாக.

7. துரியோதனனுக்காகக் கன்னன் போரில் உயிர் கொடுத்து ..... கழித்தான். (1) சொன்ன சொல் (2) கைம்மாறு
(3) செஞ்சோற்றுக்கடன் (4) பிறவிப்பயன்

8. ஆணையாளரின் ..... மீறிய பணியாளன் தண்டிக்கப்பட்டான்,
(1) விதப்புரையை (2) பணிப்புரையை
(3) நெறியுரையை (4) அறிவுரையை

9. மன உணர்ச்சிகள் ..... ஆக அங்கங்கள் வாயிலாகப் புலப்படும்,
(1) நாட்டியம் (2) அசைவு (3) குறியீடு (4) மெய்ப்பாடு

3. பின்வரும் தொடர் மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.

10. இரு பொருள் தருமாறு தொடுக்கப்படும் தொடர்மொழி அல்லது செய்யுள்,
(1) அங்கதம் (2) வஞ்சப்புகழ்ச்சி
(3) சிலேடை (4) சொற்சிலம்பம்

11. அரண்மனைகளில் பெண்கள் வசிக்கும் பிரத்தியேக பகுதி,
(1) அகஞ்சேரி (2) புறஞ்சேரி
(3) மகளிர் மறைவிடம் (4) உவளகம்

12. குரு, பெரியோர், குழந்தை என்போரைக் காணச் செல்வோர் கொண்டு செல்லும் பொருள்,
(1) கையுறை (2) தட்சணை (3) வேதனம் (4) கையூட்டு

13. புராணக் கதைகளைச் சுவைபட விளக்கிக் கூறுவோன்,
(1) பேச்சாளன் (2) புளுகன் (3) பௌராணிகன்
(4) சொற்கொண்டல்

4. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

14. நகைச்சுவைக் கதைகளைக் குழந்தைகள் செவிமடுத்தல் - செவி மடுத்தல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,
(1) வெறுப்புடன் கேட்டல் (2) விரும்பிக் கேட்டல்
(3) பிசவிப்படுதல் (4) சுவைத்தல்

15. தனக்குத்தான் எல்லாந் தெரியும் எனச் செருக்குக் கொள்ளுதல் என்னும் பொருளைப் புலப்படுத்தும் மரபுத் தொடர்,
(1) தான்தோன்றித்தனம் (2) தலையால் நடத்தல்
(3) வால் முறுக்கல் (4) மண்டைக்கனம்

16. அறிவுரை கூறியும் தண்டித்தும் எவரையும் திருத்துதல் இயலாது என்னும் பொருளை விளக்கும் பழமொழி,
(1) செடியில் வணங்காததை மரத்தில் வணங்கும்
(2) கங்கையில் மூழ்கினாலும் கரடி அன்னமாகுமா?
(3) செருப்பால் அடித்தாலும் திருட்டுக்கை நிற்காது
(4) தானே கனியாத பழத்தைத் தடி கொண்டடித்தால் கனியுமா

17. சேற்றில் புதைந்த யானையைக் காகமும் கொத்தும் - என்னும் பழமொழியின் கருத்து,
(1) சேற்றில் புதைந்த யானை எதுவும் செய்யாது; அதனால் காகம் கொத்தும்.
(2) வல்லவனுக்கும் விபத்துண்டாகும்.
(3) யாமே வலிமையுடையோம் எனத் தற்பெருமை பேசல் கூடாது
(4) வாழ்வும் தாழ்வும் எவர்க்கும் உண்டு.

18. குண்டுவெடிப்பால் வீடு தகர்ந்தது என்ற செய்தியைக் கேட்ட கணேசன்.....கலங்கினான் - இடைவெளிக்குப் பொருத்தமான உவமைத்தொடர்
(1) சிறகிழந்த பறவைபோல் (2) அடியற்ற மரம்போல
(3) கண்ணிழந்த குருடன்போல
(4) அடிவயிற்றில் இடி விழுந்தாற்போல

5. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

19. பின்வருவனவற்றில் தழுவுஞ் சொல்லும் தழுவப்படுஞ் சொல்லும் (முடிக்கப்படும் சொல்லும் முடிக்குஞ் சொல்லும்) இயைபின்றி வந்த வாக்கியம்,
(1) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
( ) கூரம்பாயினும் வீரியம் பேசேல்
(3) எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்
(4) ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும்

20. வினைச்சொல்லை மாத்திரம் கொண்டு முடியும் வேற்றுமை.
(1) 2ஆம், 3ஆம் வேற்றுமை (2) 2ஆம், 4ஆம் வேற்றுமை
(3) 3ஆம், 6ஆம் வேற்றுமை (4) 4ஆம், 5ஆம் வேற்றுமை

21. 8ஆம் வேற்றுமையின் முடிக்குஞ் சொல்,
(1) உயர்திணைப் பெயர்
(2) மூக்காலமுங் காட்டும் தெரிநிலை வினை,
(3) ஏவல் வினை (4) தொழிற்பெயர்

22. 'செய்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் நிகழ்காலத்தை உணர்த்துவதற்கு எடுத்துக் காட்டாய் அமைந்த வாக்கியம்,
(1) தேவன் கல்வி கற்கப் பாடசாலைக்குச் சென்றான்.
(2) காவோலை விழக் குருத்தோலை சிரித்தது.
(3) உலகம் என்னைப் போற்ற நூல் செய்தேன்
(4) குளம் நிறைய மழை பெய்தது.

23. ''இன்று இறந்தனர்; நாளை இறந்தனர்; என்திறம் தரும் செய்கையிதால்'' இதில் வந்த வழுவமைதி,
(1) காலம் (2) இடம் (3) திணை (4) பால்

24. இடைச்சொல் இலக்கணம் பற்றிய கூற்றிற் பொருத்தமற்றது.
(1) சொல்லாக்கத்துக்குத் துணையாய் அமைவது
(2) திணை, பால், எண், இடம் உணர்த்துவது.
(3) பெயரோடும் வினையோடும் சார்ந்து வருவது.
(4) தனித்து நின்று பொருள் உணர்த்தாத சொல்.

25. இடைச்சொல் வகையில் அடங்காதது,
(1) விகுதி (2) சாரியை (3) வேற்றுமையுருபு (4) ஆகுபெயர்

26. உரிச்சொல் பற்றிய பின்வரும் கூற்றுக்களிற் பிழையானது.
(1) பெயர், வினைச்சொற்கள் தோன்றுவதற்கு முதனிலையாய் வரும்.
(2) குணப்பண்பையும் தொழிற்பண்பையும் உணர்த்தும்.
(3) எழுவாயாய் வரும்.
(4) பெரும்பாலும் செய்யுளில் வரும்.

27. பின்வருவனவற்றிற் பெயருடன் சேர்ந்து வந்த உரிச் சொல் கொண்ட தொடர்,
(1) மலர்ப்பொழில் (2) தண்ணீர்
(3) காவலரண் (4) பொற்காப்பு

28. சந்திரஒடம் வானக்கடலில் நீந்தியது - இதில் வந்த அணி,
(1) உவமை (2) உருவகம்
(3) தற்குறிப்பேற்றம் (4) வேற்றுமை

29. பெரியார் பிறர் செய்த தியனவற்றை வெறுப்பர்; ஆனால் நல்லனவற்றைப் போற்றுவார் - இதில் வந்த அணி,

(1) முரண் (2) வேற்றுமை
(3) வேற்றுப்பொருள் வைப்பு (4) சிலேடை

30. பின்வருவனவற்றில் வினையெச்சத்தை முடிக்கும் சொல் அல்லாதது.
(1) தொழிற்பெயர் (2) பண்புப்பெயர்
(3) வினைமுற்று (4) பெயரெச்சம்

6. பின்வரும் முற்பகுதிக்கேற்ற பிற்பகுதியைத் தெரிந்து குறிக்க.

31. நீயும் நானும் அவனும்,
(1) சுற்றுலாவிற் சென்றாய் (2) சுற்றுலாவிற் சென்றேன்
(3) சுற்றுலாவிற் சென்றோம் (4) சுற்றுலாவிற் சென்றான்.

32. கற்றாரோ கரிய மனிதனோ அங்கே,
(1) தோன்றுவது (2) தோன்றுவன
(3) தோன்றுபவன் (4) தோன்றும் உருவம்

33. பொய் சொல்வதும் களவெடுப்பதும்,
(1) நல்ல பழக்கமன்று (2) நல்ல பழக்கமல்ல
(3) நல்ல பழக்கங்களன்று (4) நல்ல பழக்கங்களல்ல.

34. அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும்,
(1) தன்தன் கடமையைச் செய்பவரல்ல
(2) தன்தன் கடமையைச் செய்பவரல்லர்
(3) தத்தம் கடமையைச் செய்பவரல்லர்
(4) தத்தம் கடமையைச் செய்பவரல்ல

7. பொருத்தமான விடையின் கீழ்க் குறிக்க.

35. ஐம்பெருங் காப்பியங்களிற் பௌத்தர் இயற்றியவை,
(1) மணிமேகலையும் சிலப்பதிகாரமும்
(2) மணிமேகலையும் சீவக சிந்தாமணியும்
(3) மணிமேகலையும் குண்டலகேசியும்
(4) வளையாபதியும் சிலப்பதிகாரமும்

36. பௌத்த, ஜைனர் மன்னிக்க முடியாத குற்றம் எனக் கருதியது,
(1) புத்தரையும் சினனையும் வணங்காமை
(2) வேற்று மொழிகளில் மதக்கொள்கை இருப்பது
(3) பௌத்த, ஜைன மதக் கொள்கையை மக்கள் பின்பற்றாமை
(4) பிராமி எழுத்திலே தேர்ச்சி பெறாமை.

37. டெஸ்கி என்னும் வீரமாமுனிவர் இயற்றிய அகராதி,
(1) சதுரகராதி (2) மானிப்பாய் அகராதி
(3) கதிரைவேற்பிள்ளை அகராதி (4) சென்னைப் பேரகராதி

38. ஆரியச் சொற் பிறப்பை முதன்முதல் ஆராய்ந்து அடிச் சொல்லைக் கண்டவர்,
(1) யாஸ்கர் (2) வீரமாமுனிவர்
(3) திவாகரர் (4) பெஸ்கி

39. சிவகாமியின் கணவன் பெயர்,
(1) கந்தரன் (2) பெரிய முனி
(3) சிதம்பரம் (4) சிதம்பரநாதன்

40. சிவகாமி சரிதையின் முதனூல்,
(1) சிலப்பதிகாரம் (2) மனோன்மணீயம்
(3) இலக்கியவழி (4) குண்டலகேசி

பகுதி: II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் பந்தி பிரித்து, ஏற்ற தலைப்பிட்டு எழுதுக.

(அ) "பூமியிலுள்ள சமுத்திரம் அனைத்தும் நிலமாக மாறினால் .... " என்பது பற்றிய கற்பனைச் சித்திரம்.

(ஆ) நான் சிரமதானப் பணியொன்றில் பங்குபற்றினேன் - என்னும் தலைப்பில் அச்சிரமதானப்பணி நிகழ்ந்த இடம், காலம், பணியின் தன்மை, பங்குகொண்டோர் இயல்பு, விளைவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு எழுதுக.

(இ) இன்றைய மாணவர்க்கு ஆங்கிலக்கல்வி ஏன் அவசியம்—என்பது பற்றி மாணவர் மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு.

(ஈ) சனநெருக்கம்மிகுந்த வீதியொன்றில் நீர்கண்டகாட்சிகளையும் பெற்ற அனுபவங்களையும் வருணித்து எழுதுக.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்கள்வரை எழுதுக.

(அ) வெளிநாடு செல்ல ஆயத்தங்கள் செய்யும்நண்பர் ஒருவர் உமது அபிப்பிராயங்கேட்டு எழுதியிருக்கிறார். அவருக்கு உமது அபிப்பிராயத்தைப் புலப்படுத்தி எழுதும் பதிற் கடிதம்.

(ஆ) உப்பு எப்படி உண்டாகிறது எனக்கேட்ட உமது தங்கைக்கு உப்புவிளைவிக்கும் முறை பற்றிய வரன்முறையான விளக்கம்

3. ஒவ்வொரு உரைப்பகுதியினதும் மூன்ற அறிவுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு சுருக்கம் எழுதுக.

(அ) பட்டுப்பூச்சி தானே நூல் உண்டாக்கித் தன்னையே சுற்றிக் கொண்டு தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானேகிடந்து வருந்துகின்றது அன்றோ? மனிதனும் அப்படியே தனது மூளை

யைக்கொண்டு தானே ஏற்படுத்திக் கொள்கின்ற கொள்கை வலைக்குள் தானே அகப்பட்டு அழிகிறான்.

[உவமையை நீக்கிப் பிரதான பொருளைக்காண்க: எட்டு சொல் லளவில் சுருக்கி எழுதுக]

(ஆ) சங்ககாலத்திலும் அதற்கு முற்பட்டகாலத்திலும் தமிழ்ச் சமூதாயத்திற் கவிஞர்களுக்குத் தனிமதிப்பு இருந்து வந்தது பொது மக்களை மட்டுமல்லாமல் தவறு செய்யும் அரசர்களையே கண் டிக்குமளவுக்கு அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. கோவூர் கிழார் என்னும் புலவர் போர் முரசு கொட்டிநின்ற அரசர்கள் இருவரை அணுகி, அவர்களுக்கு உண்மையை விளக்கி, அந்தப் போரைத்தடுத்த வரலாறு புறநானூற்றிற் கூறப்படுகிறது.

[உதாரணத்தை நீக்கிப் பிரதான கருத்தைக்காண்க. 10 சொற் களிற் சுருக்கி எழுதுக.]

(இ) காட்டுத்தென்றலும் மலர்மணமும் சேர்ந்து ஒருவகை ஊமைச் சுகத்தை அளித்தன. சங்கரி தன் மனத்திரையில், கோணல் மாணலான சில கோடுகளை வரைந்தாள். அந்தக் கோடுகளின் ஊடே ஓர் உருவை எழுப்பமுயன்றாள். அறிமுகமில்லாத அந்த உருவம் யாருடைய தென்று அடையாளம் தெரியாதபடி அதன் மேல் மேசைவிட்டம் போல மங்கல் படிந்திருந்தது.

[உருவகைகளை நீக்கிப்பிரதான பொருளைக் காண்க. 10 சொற் களிற் சுருக்கி எழுதுக.

(ஈ) போரில் தோற்று வேறு துணையில்லையெனத் தன்னிடம் வந்த [illegible] கண்பு நலன் நாடரவு, கண்ணோட்டம் வாய்மை என்னும் குணங்களை கொண்ட அந்த வேந்தன் மன்னித்து அரமனையிலே வாழ்ந்து வாழுதற்கு அமைந்த தனியிடத்தின் அயலிலே தங்குமாறு செய்தான். கடவுள் இல்லையென வாதிடுங்கொள்கையுடையவனும் மனைவியை இழந்தவனுமான அப்பகைவன் பகையுமின்றி நட்பு மின்றி நடுநிலையில் நிற்பவன்போல நடித்தான்.

[தடித்த எழுத்திலுள்ள தொடர்களுக்கு ஏற்ற ஒரு சொற்காண்க. 15 சொற்களிற் சுருக்கி எழுதுக.

4. பௌத்தர் தமிழுக்குச் செய்த சேவை எவையெவையென, பௌத்தமும் தமிழும் என்னும் கட்டுரையாசிரியர் கூறுகிறார்.

பகுதி III

1. வீரவருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) "அன்னைப் பெடையே தொழுதேன்; அன்னைகொடியன் கண் டாய்; என்னை அடிமைவேண்டின் தாடித்தன"

(ஆ) ஏ, கலீபா, நீ நன்றே செய்தாய்! உன்னைப் பராட்டுகிறோம். ஏனெனில் அவனை நாம் தீர்க்கதரிசியாக அனுப்பியதே இல்லை''

(இ) ''உம் வேண்டுகோளுக்கு நாம் இணங்குகிறோம். ஏனெனில் இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் உபகரணங்களைவிட இதை உடைப்பதற்குச் செலவாகும் பணமே மிகுதியாகும்''

2. பின்வருஞ் செய்யுள்களைப் படித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

(அ) ''கற்றறிந்தவர் பாலினிலேகியே கற்றுக்கேட்டு விளங்கிடல் வேண்டுமே
கற்றுணர்ந்தபின் கற்றவை போலவே கடமையாக நடந்திடல் வேண்டுமே.
கற்றயாவையுங் கற்றறி யார்க்குறக் கற்பித்துக் கொடுத்தேவிடல் வேண்டுமே
சற்குணாலய மானமு கம்மதுத் தம்பிமாமரைக் காய சகாயனே''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக எழுதுக.

(2) இப்பாடலிற் கல்விபற்றிய பொதுநீதிகள் எவை எனக் கூறப் படுகின்றன?

(ஆ) ''குஞ்சி யழகுங் கொடுத்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக உமது வசனநடையில் எழுதுக.

(2) இப்பாடலிற் கூறப்படும் கல்விக் கொள்கை யாதென விளக்குக.

3. கிரிக்கத் தெரிந்த பாசிசர் என்னுங் கட்டுரையில் இடம்பெறும் நான்கு குறைகள் பற்றிய நகைச் சுவைத்துணுக்குகளை எழுதுக.

செயல் - 8

பகுதி: I

1. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவர் — செந்தண்மை என்பதன் ஒத்த கருத்துச் சொல்

(1) அழகு (2) கருணை (3) மிகுந்த குளிர்ச்சி (4) இரக்கம்

2. வீடுவாசல் இழந்து சிந்தாகுலம் கொண்டிருக்கும் அகதிகள் பலர் — சிந்தாகுலம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) மனவுறுதி (2) உயர்குலம் (3) பட்டினி
(4) மனக்கவலை

3. செங்கோல்மன்னன் கவிகைக் கீழ்உலகு வாழும் - கவிகை என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) குடை (2) செய்யுள் (3) ஆட்சி (4) கட்டளை

4. அருச்சுனனின் பேராண்மையைக் கண்டு பீஷ்மர் வியந்தார். பேராண்மை என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) அலங்கோலம் (2) புண்கள்
(3) கோழைமை (4) தறுகண்மை

5. நல்லோர் கேண்மை என்றும் விழுப்பந்தரும்-விழுப்பம் என்பதன் எதிர்க்கருத்துச்சொல்,
(1) இழுக்கம் (2) ஒழுக்கம் (3) அவலம் (4) ஆகுலம்.

2. பின்வருந் தொடர் மொழிகளுக்கேற்ற சொல்லைத் தெரிக.

6. ஒரு இனத்தினது கலைகலாசார, நாகரிக, ஒழுக்கப்பண்புகள்,
(1) குறிக்கோள் (2) விழுமியம் (3) நாகரிகம்
(4) ஆசாரம்.

7. பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அரசு வெளியிடும் சட்டமூலவரைவு,
(1) சட்டக்கோவை (2) சட்டவாக்கம்
(3) போலியறிக்கை (4) வெள்ளையறிக்கை

8. ஒரு செய்யுளின் இறுதிச்சீர் அடுத்தசெய்யுளின் முதற்சீராக அமையத் தொடுக்கும்பா வகை,
(1) கலப்பகம் (2) கோவை
(3) பிள்ளைத்தமிழ் (4) அந்தாதி

9. ஒரு இயக்கத்தில் இருந்து கொண்டே இயங்க இரகசியங்களை எதிரிக்குக் காட்டிக் கொடுத்து அதனைச் சீர்குலைப்பவன்,
(1) துரோகி (2) கயவன் (3) கருங்காலி (4) பிசினன்

3. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

10. பிறரை வஞ்சித்தல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்,
(1) காதைக் கடித்தல் (2 நட்டாற்றில் விடல்
(3) காது குத்துதல் (4) நாக்கு வளைத்தல்

11. செய்யுளுக்கு ஆசிரியர் கூறிய கருத்து ..... விளக்க மாயிருந்தது.
(1) மேகம் மூடிய வானம்போல
(2) மின்வெயிலில் விளக்குப்போல

(3) காட்டகத்துக் குன்றுபோல
(4) வெள்ளிடைமலைபோல

12. ''குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை, மெலிந்தோரும் நண்ணினும் நண்ணுவர்'' - இப்பாடற் பொருளை விளக்கும் பழமொழி.
(1) விதி எப்படியோ மதி அப்படி
(2) முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்,
(3) கடல் திடலாகும்; திடல் கடலாகும்
(4) அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது

13. கடல் சூழ்ந்த எல்லும் மரபுத்தொடரின் பொருள்.
(1) கடனை இல்லையெனல்
(2) மனமின்றி வேலை செய்தல்
(3) முழுமனத்தோடு வேலை செய்தல்
(4) பட்ட கடனை வேலைசெய்து கழித்தல்.

14. ''உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கொக்காகுமா'' - என்ற பழமொழியின் கருத்து.
(1) பிறரைக்கண்டு பொறாமை கொள்ளலாகாது.
(2) கண்ட பாவனையிற் கொண்டை போடக்கூடாது.
(3) இயற்கை நியதியை எவராலும் மாற்றமுடியாது.
(4) ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு நடப்பதே நல்லது

4. பொருத்தமான விடையை கீழ்க் கூறுங்கள்.

15. இலக்கண முறைப்படி பிழையெனக் கருதப்படும் வாக்கியம்.
(1) ஐந்து மாடுகள் புல் மேய்ந்தன
(2) நீர் ஐவீரும் வருக
(3) நாம் ஐவேமும் வருவோம்
(4) ஐந்து மாணவரும் வந்தனர்

16. வள்ளுவரை ஓதினால் வாழ்க்கை சிறக்கும் - இதில் வள்ளுவர் என்பது,
(1) பொருட்பெயர் (2) கருத்தாப்பெயர்
(3) கருத்தாவாகுபெயர் (4) பொருளாகுபெயர்

17. பெயர்ச்சொல்லை மாத்திரம் கொண்டு முடியும் வேற்றுமை,
(1) 2ஆம் வேற்றுமை (2) 3 ஆம் வேற்றுமை
(3) 5 ஆம் வேற்றுமை (4) 6 ஆம் வேற்றுமை

18. தன்மையும் முன்னிலையும் படர்க்கையும் கூட்டொழுவசையாய் வரின் முடிக்கும் சொல்,
(1) தன்மைப்பன்மை (2) முன்னிலைப்பன்மை
(3) தன்மை ஒருமை (4) படர்க்கைப்பன்மை

19. சுந்தரனா சுந்தரியா மேடையில் இருப்பவர் என்ற வினாவுக்குச் சுந்தரி என்பது விடையானால், எது சரியான வாக்கியம்,
(1) மேடையில் இருப்பவர் சுந்தரன் அல்லன், சுந்தரி
(2) மேடையில் இருப்பவள் சுந்தரன் அல்லன்: சுந்தரி.
(3) மேடையில் இருப்பவன் சுந்தரன் அல்லன்; சுந்தரி.
(4) மேடையில் இருப்பவர் சுந்தரன் அல்லள்; சுந்தரி.

20. குளத்தில் நீரெல்லாம் வற்றியது - இவ்வாக்கியம்,
(1) திணைவழுவமைதி (2) இடவழுவமைதி
(3) பால்வழுவமைதி (4) எண் வழுவமைதி

21. இதழ்கள் இரண்டும் பொருந்தப் பிறக்கும் ஒரு சொல்,
(1) பாலம் (2) மாதம் (3) மாமன் (4) பாம்பு

22. பின்வருவனவற்றில் வந்த வேற்று மொழிச்சொல்,
(1) சோறு (2) குழம்பு (3) சாம்பார் (4) பொரியல்

23. மனத்தை அரசனடிக்கே செலுத்தினர் - என்பதில் அரசனடிக்கே என்பது,
(1) உருபு மயக்கம் (2) பொருள் மயக்கம்
(3) 4 ஆம் வேற்றுமை (4) 7 ஆம் வேற்றுமை

24. இடை நிலையால் இறந்த காலங்காட்டாது வேறுவகையால் இறந்த காலங்காட்டிய வினை கொண்ட வாக்கியம்,
(1) வந்து கண்டனன் (2) நன்கு கற்றனர்
(3) அது நேற்றுப் போயது (4) அவன் பொருள் பெற்றான்

25. பிச்சை புகினும் கற்கை நன்றே - இதில் 'உம்' இடைச்சொல் தந்தபொருள்,
(1) எதிர்மறை (2) முற்று (3) எச்சம் (4) எண்

26. தாரணி தடந்தோள் - இதில் வந்த உரிச்சொல்,
(1) தார் (2) அணி (3) தடம் (4) தோள்

5. பின்வரும் முற்பகுதிக்கேற்ற பிற்பகுதியைத் தெரிவு செய்க.

27. சுந்தரனால் அழகிய சித்திரம்,
(1) வரைந்து நிறந்தீட்டப்பட்டது
(2) வரையப்பட்டு நிறந்தீட்டப்பட்டது
(3) வரையப்பட்டு நிறந்தீட்டினான்
(4) வரைந்து நிறந்திட்டினான்

28. அப்பெண்களுள் ஒவ்வொருத்தியும்,
(1) தானே அழகி என்றனர் (2) தாமே அழகி என்றனர்.
(3) தானே அழகி என்றனள் (4) தாமே அழகி என்றனள்

29. தோட்டத்துப் பயிர்கள் எல்லாம்,
(1) செழிப்புடைய தாய்க் காணப்பட்டது.
(2) செழிப்புடையதாய்க் காண்ப்பட்டன
(3) செழிப்புடையனவாய்க் காணப்பட்டது
(4) செழிப்புடையனவாய்க் காணப்பட்டன

30. அங்கே நிற்கும் குழந்தைகள்
(1) அவர்களுடையதல்ல (2) அவர்களுடையனவல்ல
(3) அவர்களுடையதன்று (4) அவர்களுடையனவல்லர்

6. பொருத்தமான விடையைத் தெரிக

31. நெருப்பின் எதிரில் இருந்த குழந்தை முனியின் செயல் அல்லாதது,
(1) மூனிவரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தமை,
(2) நாணிக்கூசி ஒதுங்கி ஒருபக்கத்தில் இருந்தமை
(3) முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டிருந்தமை,
(4) சுவரில் எழுதிய சித்திரம் போல இருந்தமை,

32. புத்தகத்தமிழ் எனப்படுவது,
(1) பாமரர் பேசும் கொடுந்தமிழ்
(2) இலக்கியங்களில் வரும்செந்தமிழ்
(3) இரண்டும் அல்லாதது
(4) கொடுந்தமிழுக்கும் செந்தமிழுக்கும் இடைநிற்பது

33. ஆரியத்திலே சொற்பொருள் விகற்பங்களை அறியத் துணை நிற்பது,
(1) சமஸ்கிருத அகராதி
(2) அகராதியிலுள்ள சொற்பிறப்புக் கட்டளை
(3) சொற்பொருள் விளக்கம்
(4) பொருள் விளக்கம் தெளிவாயிருத்தல்

34. பிராமி எழுத்தைக் கண்டுபிடித்தவர் எனக் கூறப்படுபவர்,
(1) புத்தர் (2) கோஷ்மேந்திரர் (3) அசோகன் (4) பிராமணர்

35. சிரிப்பின் உடல் ரீதியான ஒரு பயன்,
(1) பற்கள் தூய்மையடைதல் (2) முகம் மலர்தல்
(2) குருதியோட்டம்கூடுதல் (4) மனம் மகிழ்தல்

36. பௌத்த, ஜைனர் கல்வியைப் பரப்ப முயன்றமைக்கு அடையாளமாய் விளக்கும் ஒரு சொல்,
(1) பள்ளி (2) பள்ளிக்கூடம்
(3) பாடசாலை (4) கல்விக் கூடம்

7. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிக.

மக்கள் உயிர்வாழ்க்கைக்கு மட்டுமன்றி, இந்நிலவுலகத்துள்ள எல்லா உயிர்களுக்குமே நீரானது மிகவும் தேவையுள்ளதாய் இருக்கிறது. பாருங்கள்! உயிர்த்தொகுதிகளுள் மிகவும் கீழ்ப்படியான நிலையில் இருக்கும் மரஞ்செடி கொடிகளும் புற்பூண்டுகளுங் கூடத் தண்ணீரையே பெருங்கருவியாய்க் கொண்டு உயிர்பிழைத்து வருகின்றன. பார்வைக்கு வெறுமையாகத் தோன்றுந் தீஞ்சுவைத் தண்ணீரைப் பருகி, அவைகளெல்லாங் கவருங்கோடுங் கொப்பும் வளாரும் துளிரும் இலையும் பிஞ்சுங்காயுங் கனியுமாய்ச் செழித்து எவ்வளவு பொலிவாய்த் தோன்றுகின்றன? நாலைந்து ஆண்டுகள் மழைபெய்யாது விட நீலம் வறண்டுபோமாயின் அவைகளெல்லாங் கரிந்தும் பட்டும் போகும் என்பது எவருக்குத்தான் தெரியாது! இன்னும் அம்மரங்களில் உறையுங் பறவைகளும் அவற்றின் நிழலில் உறையும் விலங்குகளும் காஞ்சாறுகளிலும் கனைகளிலும் மலைவீழருவிகளிலும் இருக்குந் தெளிநீரைப்பருகி எவ்வளவு களிப்பாய், உயிர் வாழ்கின்றன. மழைக் காலத்தில் நம்மனோர் தண்ணீரின் அருமையை உணராவிட்டாலும் வேனிற்காலத்து வெப்பந்தாங்காமல் துடிக்குங்கால் அவர்கள் தண்ணீரே உயிரென்று கூறுதலைக் காண்கிறோம் அன்றோ? ஆதலால், நீரின் சிறப்பையும் அதன இன்றியமையாமையினையும் தெரியாத உயிர் இந்நிலவுலகத்தில் எதுவுமே இல்லை என்று திண்ணமாய்ச்சொல்லலாம்.

(மறைமலையடிகள்)

37. இவ்வுரைப் பகுதியாசிரியர் வாசகனுக்குப் புலப்படுத்த விரும்பும் தலைமைக்கருத்து,
(1) நீரின் இன்றியமையாமை
(2) நீரின் இயல்பு
(3) தாவரங்களுக்கு நீர் அவசியம்
(4) நீர்பற்றி எல்லாரும் அறிவர்

38. தலைமைக் கருத்தை விரித்துரைக்க ஆசிரியர் கைக்கொண்ட முறை.
(1) வருணனை முறை
(2) உதாரணங்காட்டி விளக்கும் முறை
(3) காரணங்காட்டி விளக்கும் முறை
(4) மேற்கோள் காட்டி விளக்கும் முறை

39. பறவைகள் மிருகங்களைப் பற்றிய கூற்று.
(1) வருணனைப் பாங்கானது (2) வரலாற்றுப் பாங்கானது
(3) ஆராய்ச்சிப் பாங்கானது (4) மிகைபடக் கூறுவது

40. இவ்வுரைப்பகுதியைப் பின்வரும் உரைநடை வகையில் எதில் அடக்கலாம்.

(1) வெள்ளை நடை (2) ஓழுகினசதடை
(3) தனித்தமிழ்நடை (4) செந்தமிழ்நடை

பகுதி II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்கு நன்மை செய்துளதா?-உமது அபிப்பிராயத்தைக் காரணங் காட்டியும் உதாரணங்கள் தந்தும் விளக்கி எழுதுக.

(ஆ) முற்றத்து வேப்பமரம் கூறிய கதை - என்ற தலைப்பில் அது கண்ட காட்சிகளுக்கும் அனுபவங்களுக்கும் சிறப்பிடங் கொடுத்து வரலாறு, வருணனை, கற்பனை என்பனவற்றைக் கலந்து எழுதுக.

(இ) நீர் அண்மையீற் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் குறை, நிறைகளைக் காரணங் காட்டி விமரிசனம் செய்க.

(ஈ) மலை மீதொரு நாள் - என்ற தலைப்பில் அதிகாலை முதல் மாலை வரை நீர்கண்ட காட்சிகளை வருணித்து எழுதுக.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்கள் வரையில் எழுதுக.

(அ) உமது பாடசாலையில் பரிசளிப்புவிழா அல்லது வாணிபமாதகடத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் விழா அலங்காரம், அழைக்கப்படும் அதிதி, நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் பற்றி நீர் சமர்ப்பிக்கும் அறிக்கை.

(ஆ) உமது அடையாள அட்டை பஸ்வண்டியிற் சென்றபோதுதொலைந்துவிட்டது. அதனைக் கண்டுஎடுத்தவர் ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கிறார். நீர் அதைப் பெற்றுக் கொண்டு கண்டெடுத்தவரின் முகவரியையும் அறிகிறீர். கண்டெடுத்தவருக்கு நன்றி தெரிவித்து நீர் எழுதும் கடிதம்.

3. ஒவ்வொரு உரைப்பகுதியினதும் கீழுள்ள அறிவுறுத்தல்களைக் கருத்திற் கொண்டு சுருக்கம் எழுதுக.

(அ) பாரதி போன்ற பெருங்கலைஞன், ஓவியனைப்போலப் படங்கள் எழுதுகிறான் பாட்டிலே. சிற்பியைப் போல உருவங்கள் வடிக்கிறான் தீந்தமிழ்ச் சொல்லிலே. இசைஞனைப் போலப் பாடித் தருகிறான் இனியவாசகத்துள்ளே. அவன் சொற்களுக்குள் ஓவியம் சிற்பம், இசை யாவும் இருக்கின்றன என்பதோடு இயக்கமுள்ள நாடகத் தத்துவமும் உள்ளது என்பதைப்பார்க்கிறோம். அதாவது உயிர்பெற்று நடமாடும் ஓவியமாய் பேசும் பொற் சித்திர

மாய், இன்னிசைபாடும் குயிலாக வருகின்றன கவிதைகள். ஊமை யராய்க் குருடராய் வாழ்ந்த மக்களுக்கு உணர்ச்சியாய் ஒளிப் பிளம்பாய் நிரம்பிய மேன்மக்களை அறிமுகம் செய்விக்கிறான் கவிஞன்.

[விரிவான விளக்கங்களை விடுத்துத்திரண்ட பொருளைக்காண்க. 20 சொற்களிற் சுருக்கி எழுதுக]

(ஆ) டாக்டர் உ.வே. சாமிநாதையர் தமது ஆசிரியரான மீனாட்சி சுந்தரம்பிள்ளையைப் பற்றி "என் ஆசிரியர் பாடஞ் சொல்லும் போது கையிலே புத்தகம் வைத்துக்கொள்ளும் வழக்கம் இல்லை. அப்பெரியாருக்கு அவ்வளவு செய்யுட்களும் மனப்பாடமாகவே இருந்தன. சிறிதேனும் தடையின்றிப் பாடல்களைச் சொல்லு வதும் பொருள் சொல்லுவதும் பதசாரம் சொல்லுவதுமாகவே அவர் பெரும்பாலான நேரத்தைக் கழிப்பர். இவர்கள் இதற் காகவே உதித்தவர்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. பாடஞ் சொல்வதில் இவருக்குச் சலிப்பே ஏற்படாது" என்று கூறுகிறார்.

[தேவையற்ற விபரங்களை நீக்கி, தன்கூற்றைப் பிறன் கூற்றாக்கி 15 சொற்களுக்குள் சுருக்கம் எழுதுக]

4. செந்தமிழ்ப் புகட்டலை என்றால் என்ன? அது சம்பந்தமான வடமொழி அகராதிகளிலுள்ள சிறப்பம்சத்தையும் தமிழ்மொழி அகராதிகளிலுள்ள குறைபாட்டையும் கவாமி ஞானப்பிரகாசர் எவ்வாறு காட்டுகிறார்

பகுதி III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) "இதன் மீது சவாரிசெய்யுந் தகுதியை யான் பெறவில்லை. குறைந்தது இது என்னை விடமூப்பது ஆண்டுகளுக்கு மூத்ததாய் இருக்கவேண்டும். மூத்தோர்கள் முதுகில் அமர்வது அவர்களை அவமதிப்பது போலாகும்"

(ஆ) "எனது புதல்வி உன்புதல்வனை மணஞ்செய்ய வேண்டுமாயின் இரு நூறு பாழடைந்த பட்டணங்களைச் சீதனமாக வழங்கவேண்டும்"

(இ) பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவள்தன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்
படைசுற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தே நாம்

2. பின்வருஞ் செய்யுள்களைப்படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) "பாவமீட்சி யில்லா வீளவாலிபர் பாவமஞ்ச தில்லாமனை
போலுமே
மேவுநீத மில்லாமுடி மன்னவர் மேய்க்கு மாயரில்லாத் தகர்
போலுமே

கோவசாந்த மில்லாத பக்கிறுகன் குடிக்கநீரு மில்லாதநதி
போலுமே
தாவந்தனைத் தீர்க்கு முகம்மதுத் தம்பிமாமரைக் காயசகாயனே''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக உமது வசனநடையில் எழுதுக.

(2) இப்பாடலில் வரும் உவமைவாயிலாகப் பெறப்படும் உண்மையை விளக்குக.

(ஆ) ''கரும் பாட்டிக்கட்டிச் சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் துயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக உமது வசனநடையில் எழுதுக

(2) இப்பாடலில்வரும் உவமைவாயிலாகப் பெறப்படும் அறநெறியை விளக்குக.

3. ''கன்னனுங் கும்பகர்ணனும் செய்தநன்றி யறிதலாகிய ,அதத்தைத் தம் ஆவியினும் அருமையாக ஆதரித்த வீரர்'' இக்கூற்றினை (1) கன்னனின் செய்நநன்றி மறவாமை (2) கும்பகர்ணனின் செய்நநன்றி மறவாமை என்னுந் தலைப்புக்களில் விளக்குக.

செயல்-9

பகுதி: I

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்

1. அசதிசளாய் இடம் பெயந்தோருக்குப் புனர்வாழ்வுக்கழகம் அபயம் அளித்தது - அபயம்அளித்தல் என்றால்,
   (1) உணவு அளித்தல்
   (2) உறைவிடம் அளித்தல்
   (3) உணவும் உறைவிடமும் உடையும் அளித்தல்
   (4) தஞ்சமளித்துக் காத்தல்

2. ஏசாந்த நிலையை விரும்புவது கலைஞர்களின் இயல்பு - ஏகாந்தம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
   (1) உண்மை (2) தனிமை (3) கற்பனை (4) சிந்தனை

3. மன அந்தகாரத்தை மாய்க்கும் ஒளிவிளக்கு கல்வி - மன அந்தகாரம் என்றால்,
   (1) மனவிருள் (2) சீற்றம் (3) பொறாமை (4) அறியாமை

4. சான்றோர் செற்றம் நீங்கிய மனத்தினர் - செற்றம் என்பதன் எதிர்ச்சொல்,
   (1) கோபம் (2) இன்பம் (3) சாந்தம் (4) சோர்வு

5. இறைவனிடம் அனுக்கிரகம் செய்யும்படி ஈழத்தமிழர் வேண்டினர் - அனுக்கிரகம் என்பதன் எதிர்ச்சொல்,

(1) உபக்கிரகம் (2) நிக்கிரகம்
(3) கருணை (4) பெருங்கோள்

4. இடைவெளியில் நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

6. காட்டு வழியில் யானை சென்றமைக்கு அடையாளமாக .... காணப்பட்டது.

(1) யானைமலம் (2) யானைவிட்டை
(3) யானைப்பிழுக்கை (4) யானையிலத்தி

7. சிற்றப்பனும் .... வீட்டுக்கு வந்தனர்.

(1) குஞ்சாச்சி (2) சிற்றம்மா
(3) சின்னம்மை (4) சின்னம்மா

8. குருவுக்குத் தட்சணை அளித்தான் - தட்சணை என்னும் வடசொற்குரிய தமிழ்ச்சொல்,

(1) உபகாரம் (2) வேதனம் (3) கைக்கூலி (4) காணிக்கை

9. அரசியல் யாப்பில் சிலநாட்டுச் சனாதிபதிக்கு ..... வழங்கப்பட்டுள்ளது. (1) இறை (2) நிறைவேற்றதிகாரம்
(3) குடியுரிமை (4) சர்வாதிகாரம்

3. பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

10. தமிழ் எழுத்துக்கள் ஒழுங்குமுறையில் அமைந்த அட்டவணை.

(1) தமிழ்ப் பட்டியல் (2) அகராதி
(3) நெடுங்கணக்கு (4) அகரவரிசை

11. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலிய பா வகைகள் கலந்து பாடப்படும் பிரபந்தவகை,

(1) கலம்பகம் (2) அந்தாதி
(3) கதம்பம் (4) பிள்ளைத்தமிழ்

12. தங்கத்தின் மாற்று அல்லது தகுதி அறிவதற்காக அதனை உரைத்து மாற்றறியுங் கல்,

(1) பொற்கல் (2) கட்டளைக்கல்
(3) மாற்றுக்கல் (4) தகவுக்கல்

13. ஒவ்வொரு கூட்டத்தார் ஒவ்வொரு பொருள் குறித்துத் தம்மிடையே வழங்குஞ் சொல்,

(1) குறிப்புச்சொல் (2) இலக்கணைச் சொல்
(3) குழூஉக்குறி (4) இடக்கரடக்கல்

4. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

14. சிற்றூழியர் சிலர் மேலதிகாரிகளைச் சிலபல உபாயங்களால் வசப்படுத்தித் தங்காரியம் பார்ப்பர் - இக்கருத்தைப் புலப்படுத்தும் மரபுத்தொடர்,
(1) கையைப் பிசைதல் (2) பந்தம் பிடித்தல்
(3) தோள் கொடுத்தல் (4) பொடிவைத்தல்

15. இராமன் தன்னைச் சரணடைந்த விபீடணனை ஆட்கொண்டான் - ஆட்கொள்ளல் என்னும் மரபுத் தொடரின் பொருள்,
(1) வேலை செய்வித்தல் (2) விலைக்கு வாங்குதல்
(3) போற்றிக்காத்தல் (4) அடிமையாகக் கொள்ளல்

16. ..... ஆசிரியன் சொற்கேட்டு மாணவன் ஒழுகினான். இடைவெளியில் நிரப்பத்தக்க உவமைத் தொடர்,
(1) நகமுஞ் சதையும் போல (2) கிணற்றுத் தவளை போல
(3) எறும்பின் நிரை போல (4) ஊசியைத் தொடரும் நூல் போல

17. தன்பத்தின்மேல் துன்பம் அனுபவித்துப் பழக்கப்பட்டவன் மேலுந் துன்பம் வரும்போது கலங்குவதில்லை என்னும் பொருளைப் புலப்படுத்தும் பழமொழி,
(1) வெள்ளம் வருமுன் அணை கோல வேண்டும்.
(3) கங்கையிற் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
(3) பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்.
(4) தலைக்கு மேல் வெள்ளம் சாணேறினால் என்ன முழமேறினால் என்ன?

18. ''மழை விட்டுந் தூவானம் மாறவில்லை'' என்னும் பழமொழியின் பொருள்,
(1) எந்தச் செயலுக்கும் ஏதோவொரு விளைவு உண்டு.
(2) மழையோடு தூவானம் நின்று விடுவதில்லை
(3) போரோ கலகமோ முடிந்தாலும் அதன் தாக்கம் இருக்கவே செய்யும்.
(4) மழை பெய்யாவிட்டால் தூவானத்தால் வரும் துன்பமும் இல்லை

5. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக

19. வாக்கிய இயைபு எனப்படுவது,
(1) சொற்கள் எவ்வகையாகவுந் தொடர்ந்துவருதல்
(2) தழுவுஞ் சொல், தழுவப்படுஞ் சொல் என்பன அடைமொழியோடு வருதல்.
(3) தழுவப்படுஞ் சொல்லின் பயனிலையாய்த் தழுவுஞ் சொல் வருதல்

(4) இருசொற்களும் திணை, பால் முதலியவற்றில் மாறுபடாது வருதல்

20. கருங்கற்றூணோ கரியனோ அங்குத் தோன்றும் உரு என்னும் வினாவுக்கு விடை கரியன் ஆயின் பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது ?

(1) அங்குத் தோன்றுவது கருங்கற்றூண் அல்லன்; கரியன்.
(2) அங்குத் தோன்றுவோன் கருங்கற்றூண் அன்று; கரியன்.
(3) அங்குத் தோன்றுவோன் கருங்கற்றூண் அல்லன்; கரியன்.
(4) அங்குத் தோன்றுவது கருங்கற்றூண் அன்று; கரியன்.

21. பின்வருவனவற்றில் வந்த திணைவழுவமைதி கொண்ட வாக்கியம் எது?

(1) தலைமயிர் எல்லாம் நரைத்துவிட்டது.
(2) நாளைக்கு நான் தேர்வு எழுதப் போகிறேன்.
(3) தம்பி தேர்விலே சித்தி பெற்று விட்டார்.
(4) இந்த எருதுகள் அன்புள்ள எனது செல்வமக்கள்.

22. சேவல்கள் சூரியனை ''வாவு பரித் தேரேறி வா'' என்று அழைப்பனபோல்கூவின''-இதில் இடம்பெறும் அணி,

(1) உவமை (2) வேற்றுமை
(3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வுநவிற்சி

23. பொருள் இலலார்க்கு இவ்வுலக இன்பமில்லை; அருளில்லார்க்கு அவ்வுலக இன்பமில்லை - இதில் இடம் பெற்ற அணி,

(1) வேற்றுமை (2) தற்குறிப்பேற்றம்
(3) முரண் (4) தன்மை நவிற்சி

24. பஃறலை என்பதைப் பிரித்தெழுதினாற் சரியானது,

(1) பஃ + றலை (2) பல்+தலை
(3) பஃ + தலை (4) பல + தலை

25. துறவிக்கு வேந்தன் துரும்பு-இவ்வாக்கியம்,

(1) பெயர்ப் பயனிலை கொண்டது
(2) வினைப்பயனிலை கொண்டது
(3) பயனிலை மறைந்து வந்தது
(4) எழுவாய் மறைந்து வந்தது

26. மணிமலர்ச் சோலை - இதில் மணி என்பது அழகு என்னும் பொருள் தருவது. எனவே மணி என்னுஞ் சொல்,

(1) பெயர்ச்சொல் (2) வினைச்சொல்
(3) இடைச்சொல் (4) உரிச்சொல்

27. மூன்றாம் வேற்றுமைக் கருத்தாப் பொருளில் வந்த வாக்கியம்,

(1) தாயோடு மகள் சென்றாள்
(2) என்னாற் கூட்டுரை எழுதப்பட்டது

(3) நான் பேனாவால் எழுதினேன்
(4) வாளினால் மரத்தை அரிந்தான்.

28. தெரிநிலைவினை காலங்காட்டும் விதம் பற்றிய கூற்றுக்களிற் பிழையானது.
(1) பகுதி இரட்டித்துக் காலங்காட்டும்
(2) சிறுபான்மை விகுதியாற் காலங்காட்டும்.
(3) பெரும்பான்மை இடைநிலையாற் காலங்காட்டும்
(4) சிறுபான்மை சாரியையாற் காலங்காட்டும்.

29. ''அறத்தால் வருவதே இன்பம்'' - இதில் ஏகார இடைச்சொல் தந்த பொருள்,
(1) தேற்றம் (2) வினா (3) எதிர்மறை (4) அசைநிலை

30. ''பூரணகுடத்துநீர் நறவிற் பொங்குமால்'' - இதிற் புறத்துறுப் பாய் வந்துள்ள இடைச் சொற்கள்,
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

6. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

31. மூற்காலத்தில் வழங்கி வந்த சொற்றொகுதி நூல் அல்லாதது.
(1) பிங்கலந்தை (2) திவாரகம்
(3) சூடாமணி (4) தொல்காப்பியம்

32. ''ஆன்'' விகுதி ''ஆள்'' விகுதியாயிற்று என்றால்,
(1) ஆண்பால் பெண்பாலாயிற்று
(2) பெண்பால் ஆண்பாலாயிற்று
(3) ஆண்மேடம் கொண்ட குஞ்சுமுனி பெண் ஆனது.
(4) பெரிய முனிவர் திகைப்பாற் பெண் போலானார்.

33. ஐம்பெருங் காப்பியங்களில் ஜைனரால் இயற்றப்படாதது
(1) சீவக சிந்தாமணி (2) சிலப்பதிகாரம்
(3) மணிமேகலை (4) வளையாபதி

34. கும்பகர்ணன் பற்றிய கூற்றுக்களிற் பிழையானது.
(1) சீதையைச் சிறைவிடும்படி இராவணனுக்கு அறிவுரை கூறினான்.
(2) இராவணனின் தம்பி; விபீடணனின் தமையன்
(3) விபீடணன் கூறியவற்றை ஏற்று நடந்தான்
(4) இராவணனுக்காகப் போர்புரிந்து ஆவியிந்தான்

35. கன்னட மொழியின் ஆதியிலக்கிய நூல்.
(1) சிலப்பதிகாரம் (2) நன்னைய பாரதம்
(3) கவிராஜமார்க்கம் (4) ராமசரிதம்

36. புனையா ஓவியங்கள் பற்றிய செய்தி கூறும் நூல்.
(1) புறநானூறு (2) நெடுநல்வாடை
(3) மலைபடுகடாம் (4) சிலப்பதிகாரம்

7. பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிக.

''பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர் சிலிர்க்கும்
சிங்கமே! வானவீதி திருதிரு வென எரிக்கும்
மங்காத தணற் பிழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவிளக்கே!''

[பாரதிதாசன்]

37. இப்பாடலின் மையப் பொருளாய் அமைவது,
(1) சந்திரன் (2) விண்மீன் (3) பெருவிளக்கு (4) சூரியன்

38. மையப்பொருள் இதுதான் எனத் துணிவதற்குரிய தொடர்,
(1) பிடர் மயிர் சிலிர்க்கும் சிங்கம்
(2) திருதிருவென எரிக்கும் மங்காத தணற்பிழம்பு
(3) மாணிக்கக் குன்று
(4) தங்கத்தின் தட்டு

39. இப்பாடலில் இடம்பெறும் பொருளணி எதுவாயிருக்கலாம்,
(1) உயர்வு நவிற்சியணி (2) உருவகவணி
(3) உவமையணி (4) தற்குறிப்பேற்ற அணி

40. பின்வருவனவற்றில் எந்தச் சுவை இப்பாடலைப் படிக்கும்போது உமது மனத்தில் மிக்கு நிற்கிறது,
(1) வெகுளி (2) சாந்தம் (3) பெருமிதம் (4) வியப்பு

பகுதி II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 300 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) போக்குவரத்துச் சேவையும்மக்கள் வாழ்க்கையும்-என்றதலைப்பில்,
(1) போக்கு வரத்துச் சாதனங்களும் சேவையும் (2) மக்கள் வாழ்வு சௌகரிய மாதல் (3) வேலைவாய்ப்புக் கிடைத்தல் (4) சேய்மை நாடுகள் அண்மை நாடுகளாதல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு விளக்கக் கட்டுரை.

(ஆ) ''நான் செய்த அந்த நற் செயலை எண்ணுந்தோறும் என் மனம் உவகையாற் பூரிக்கிறது.'' இதனை முடிவு வாக்கியமாகக் கொண்டு, நீர் செய்த நற்செயல் ஒன்றைப்பற்றி உணர்ச்சி வெளிப்படத் தற்சார்புக் கட்டுரை.

(இ) ''உலகெங்குமுள்ள அச்சியந்திரங்கள் அனைத்தும் மாயமாய் மறைந்து விட்டால் ..... கற்பனை செய்து எழுதுக.

(ஈ) நீர் பங்குபற்றிய மேதின ஊர்வலத்தில் கண்ட காட்சிகளையும் சம்பவங்களையும் வருணித்து எழுதுக.

9

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுக.

(அ) உமது பாடசாலை மாணவர் மன்றச் செயலாளர் என உம்மைப் பாவித்து அதன் சென்ற கூட்ட அறிக்கையைப் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி எழுதுக. (i) இடம், நேரம், தலைமை (ii) சென்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் (iii) சொற்பொழிவுகள் (iv) இசை நிகழ்ச்சிகள் (v) பிற அம்சங்கள்.

(ஆ) கல்லூரி விடுதியொன்றிலே தங்கிக் கல்விகற்கும் மாணவன் ஒருவன் விடுதி வாழ்க்கையின் நன்மை, குறைபாடு என்பவற்றைப் பற்றித் தன் அன்புச் சகோதரிக்கு எழுதும் கடிதம்.

3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் இரண்டாவது கருத்தை 40 சொற்களில் உமது சொந்த வசனநடையில் எழுதுக.

மொழி மனிதனுடைய உடலில் ஊறாததாக இருக்கலாம்; ஆனால் அவனுடைய மூளையை உருவாக்கியது அதுவே. அவன் எண்ணும் எண்ணம், பேசும் பேச்சு, எழுத்து மூன்றிலும் மொழி உள்ளது; அதன் செல்வாக்கு உள்ளது. மொழி வேறுபாடு குழந்தையின் தொட்டிலிலேயே தொடங்குவது; மரணப்படுக்கைவரை தொடர்ந்து வருவது. இடையில் மனிதன் கற்ற எத்தனையோ பழக்க வழக்கங்கள் மாறி விடுகின்றன; ஆனால் மொழியின் செல்வாக்கு மாறுவதில்லை. பரம்பரையாக ஆசிரியத் தொழிலில் இருந்தவன் துப்பாக்கி ஏந்தும் தொழிலுக்குச் செல்கிறான்; செருப்புத் தைக்கும் தொழில் செய்தவன் நாட்டை ஆளுகிறான்: பரம்பரையாகத் தராசுபிடித்தவன் விமானம் ஓட்டுகிறான்; பரம்பரையாக ஏர் ஓட்டியவன் நூல் எழுதுகிறான், ஆனால் மொழி மாறுவதில்லை. பரம்பரையாகக் குடித்து மயங்கிப் புலால் மணம் கமழ்ந்த குடும்பத்திற் பிறந்த பேர்னாட்ஷா குடியை அறவே வெறுத்து மரக்கறி உண்டு வாழ்ந்துவந்தார். வழிவழியாக வைதிகமாக இருந்த குடும்பத்துப் பண்டித நேரு, இருபதாம் நூற்றாண்டின் புதுப்புதுப் பழக்கங்களில் மூழ்கி விடுகிறார். செல்லும் நாடுகளுக்கு ஏற்றபடியெல்லாம் நடையுடைகளை மாற்றிக் கொள்ளுகிறார். இமய மலைச் சாரலிலுள்ள பழங்குடி மக்களுடன் பழகும்போது அவர்களைப் போலவே உடுத்துக்கொள்ளுகிறார். சென்னை மக்களுடன் பழகும்போது கீழ்ப்பாய்ச்சுக் கட்டிக் கொள்கிறார், இங்கிலாந்திற் கால்வைக்கு முன்பே ஆங்கில உடையில் விளங்குகிறார். மற்றப் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொள்ளுகிறார். ஆனால் மொழியின் தொடர்பு அவரை விட்டதா? லண்டன் பாராளுமன்றத்திற் பேசும் போது முதலிற் பத்து நிமிஷம் தம் தாய் மொழியில் தான் பேசுகிறார். தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ? ஆனால் அவர்களை விடத் தாய் மொழி

மீற் பற்றுக் கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர் களை விட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்க வேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னால் சொல்லுகிறவர் களின் மூளையில் நஞ்சு கரந்து கிடக்கிறது என்றே கொள்ளல் வேண்டும்.

["தம்பிக்கு"—மு.வரதராசன்]

4. சிவகாமி பெரிய முனிக்குக் கூறிய தன் கதையை எழுதுக.

பகுதி III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) "நீ ஒரு சிறுவனாக இருந்தபோது எவ்வளவு அழகாய் இருந் தாய்! இப்போது அவ்வழகிய வதனம் மிகவும் மாறிவிட்டதே. தாடி முளைத்துக் கறுத்துப்போய்விட்டதே"

(ஆ) "இன்னும் ஓராண்டுக்காலம் தாங்கள் பிரதம மருத்துவராக நீடித்திருந்தால் தாங்கள் மட்டுந்தான் வாழ்ந்திருப்பீர்கள்"

(இ) "என்று தொடங்கு மிடையென்ப ஏழுலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே - யொன்றி
அறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து"

2. பின்வரும் செய்யுள்களைப்படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) "ஏந்து வாட்கொலை வீரரை நம்பினும் எதிர்த்து நின்றிடுங்
கள்ளரை நம்பினும்
காந்து மும்மத யானையை நம்பினும் கரடி சிங்க மியாளியை
நம்பினும்
பாந்த வுட்பகை கொண்டவர் தங்களைப் பாசஞ் செய்யினு
நம்ப வொண்ணாது காண்
சாந்த சற்குணம் வாய்த்த முகம்மதுத் தம்பிமாமரைக் காய
சகாயனே"

(1) இப்பாடலின் பொருளை உமது வசனநடையிலே தெளிவாக எழுதுக.

(2) இப்பாடலின் மூலம் கவிஞர் வாசகனுக்கு அறிவிக்கும் எண்ணம் யாதென விளக்குக.

(ஆ) "வழிமேல் விழிவைத்து வாணுதலா ணாம
மொழிமேற் செவிவைத்து மோகச் - சுழிமேற்றன்
நெஞ்சோட வைத்தபர்வான் கண்டா னெடுவானின்
மஞ்சோட வன்னம் வர"

(1) இப்பாடலின் பொருளை உமது வசன நடையில் எழுதுக.
(2) இப்பாடலின் மூலம் கவிஞர் வாசகனுக்குணர்த்த விரும்பும் எண்ணம் யாதென விளக்குக.

3. மாதரும் மலர்ப் பொய்கையும் என்னும் பாடத்தில் வரும் (1) பொய்கையில் துயிலும் அன்னம் (2) அன்னத்தின் மயக்கம் என்பனபற்றி நயம்பட எழுதுக.

செயல்: 10.

பகுதி I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

1. ''சாளரந்தோறும் நல்ல சந்திரன் உதயங் கண்டார்'' சாளரம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
(1) மேன்மாடி (2) வாயில் (3) யன்னல் (4) நிலாமுற்றம்

2. வழிநடந்த களைப்பாற் சிறிது நேரம் அம்பலத்திற் காலாறினர்- காலாறுதல் என்றால்,
(1) உணவுண்ணல் (2) நித்திரை செய்தல்
(3) அளவளாவல் (4) இளைப்பாறல்

3. திறந்தவெளியரங்குத் திறப்புவிழா குறித்த நேரத்திற் கால் கோயிற்று - கால்கோள் என்றால்,
(1) அத்திவாரம் (2) ஆரம்பம்
(3) கடல் கோள் (4) கருணுகோள்

4. சந்திரன் சுவர்க்கியின் வண்மையைப் புகழேந்திப் புலவர் பல விடங்களிற் போற்றியுள்ளார் - வண்மை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
(1) கொடை (2) வலிமை (3) நொய்ம்மை (4) உலோபம்

5. அபிமன்யுவின் பேராண்மையால் மன்னர் பலர் புறங்காட்டினர்- புறங்காட்டல் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
(1) எதிரூன்றல் (2) தோற்றல்
(3) சரணடைதல் (4) நெஞ்சு காட்டல்

2. இடைவெளியில் நிரப்பத்தக்க பொருத்தமான சொல்லைத் தெரிக.

6. மத்திய அரசின் சுமை மாநிலங்களுக்கு ..... அளிப்பதன் மூலம் குறையும். (1) புனர் நிர்மாணம்
(2) அதிகாரப்பரவலாக்கம் (3) சுயாட்சி (4) நிதியுதவி.

7. மாம்பழத்தின் உள்ளீடு சதை என்பது போலக் கற்றாளையின் உள்ளீடு .....

(1) மணி (2) முத்து (3) சுளை (4) சோறு

8. ..... ரூபா கொடுத்து மருந்து வாங்கினேன்,

(1) ஐம்பத்தியொன்பது (2) அம்பத்தொன்பது
(3) ஐம்பத்தொன்பது (4) ஐம்பத்தொம்பது

9. பெரியோர் முன்னிலையிற் சொல்லத் தகாதவார்த்தையை மறைத்து வேறொரு வாய்பாட்டாற் கூறுதல்.....

(1) இடக்கரடக்கல் (2) இலக்கணப் போலி
(3) மங்கலம் (4) குழூஉக்குறி

இ. பின்வருந் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.

10. ஒருநாட்டுப்படை உத்தரவின்றி மற்றொரு நாட்டிற் பிரவேசித்தல்,

(1) பலாத்காரம் (2) கரந்துறைதல்
(3) இறைமைமீறல் (4) அத்துமீறல்

11. அகர வரிசைப்படியமைந்த சொற்களின் பொருள் கூறும் நூல்

(1) நெடுங்கணக்கு (2) அகராதி
(3) கலைக்களஞ்சியம் (4) நிகண்டு

12. சிவபதமடைந்த ஒருவரின் அருமை பெருமைகளைக் குறித்துப் பாடப்படும் பாடல்,

(1) ஒப்பாரி (2) மரண கீதம் (3) சரமகவி (4) தோத்திரம்

13. நடன நிகழ்ச்சி யொன்றினை மேடையில் ஒழுங்குற நெறிப்படுத்தல்

(1) அரங்கேற்றம் (2) ஒத்திகை
(3) வரன்முறை (4) நட்டுவாங்கம்

ஈ. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

14 பட்டினியால் வாடிய மக்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு சிரட்டைக் கஞ்சி.....ஆயிற்று - இடைவெளியை நிரப்பத்தக்க உவமைத் தொடர்,

(1) யானையுண்ட விளாங்கனி போல
(2) வெந்த புண்ணில் வேல் பாய்ந்தாற்போல
(3) வாடும் பயிருக்கு வான் மழை போல
(4) யானைப் பசிக்குச் சோளப் பொரி போல

15. சில பெரிய இடத்து வீடுகளில் அல்லிராட்சியந்தான் நடைபெறுகிறது - அல்லிராட்சியம் என்னும் மரபுத் தொடரின் பொருள்,

(1) அன்புச் சூழ்நிலை (2) ஆடம்பர வாழ்வு
(3) பெண்களின் ஆதிக்கம் (4) களியாட்டம்

16. ஒருவரது அறிவு தகுதி முதலியவற்றை அளந்தறிதல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்,

(1) ஒருகை பார்த்தல் (2) ஆழம் பார்த்தல்
(3) துறை போதல் (4) தட்டிப் பார்த்தல்

17. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்து மனதனை வருத்தும் என்னும் பொருள் தரும் பழமொழி,

(1) பூதுகிற் புண் இருந்தால் காடு நுழையப் பயம்.
(2) கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளர்ப்பம் தெரியுமா?
(3) மருண்டவன கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்.
(4) வேலிக்கு வைததமுள் காலிற் குற்றியது.

18. ''கம்மா கடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி'' இப்பழமொழியின் கருத்து,

(1) சங்கு சிலசில தேவைகளுக்காவே ஊதப்படும்.
(2) தனக்குத் தெரியாததொன்றைச் செய்ய முயலுதல் கூடாது.
(3) தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டுத் துன்பப்படக் கூடாது
(4) ஆண்டிக்குப் பிச்சை எடுக்கத் தெரியும்; சங்கை ஊதத் தெரியாது.

5. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

19 ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'' என்று வள்ளுவர் அறம்பற்றிக் கூறுகிறார். இவ்வாக்கியம்,

(1) கூட்டுவாக்கியம் (2) கலப்புவாக்கியம்
(3) கதம்ப வாக்கியம் (4) தொடர் வாக்கியம்

20. ''ஈவது விலக்கேல்'' என்பது ஔவை வாக்கு - இதன் எழுவாய்

(1) விலக்கேல் (2) ஈவது விலக்கேல் (3) ஔவைவாக்கு
(4) என்பது

21. பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்த வாக்கியம்

(1) தந்தை முன்வாய் புதைத்து நின்றான் மைந்தன்
(2) இறைவனே அவனியில் வாழும் உயிர்களுக்கு நற்றுணை
(3) அஞ்சல் மடவனமே (4) வருக என் ஆருயிர்மகளே

22. மனக்கவலையால் வாடி வதங்கினான் - இதிற்கவலை என்பது

(1) குணப்பெயர் (2) தொழிற்பெயர்
(3) முதனிலைத்தொழிற்பெயர் (4) ஆகுபெயர்

23. பின்வருவனவற்றிற் கூட்டொலி அமைப்புக் கொண்ட எழுத்து,

(1) ஆ (2) ஐ (3) ஊ (4) ஃ

24. பின்வருவனவற்றில் இலக்கணப் போலியாக வந்த சொல்

(1) கார்முகில் (2) இன்சொல் (3) வாய்க்கால் (4) நடுகல்

25. பன்மை விகுதி பெற்று வழங்கக்கூடிய ஒரு பெயர்

(1) தண்ணீர் (2) குணம் (3) கோபம் (4) குளிர்

26. எதனையோ தேடுகிறான் – எதனையோ என்ற சொல்லில் பொருளுணர்ச்சிக்குத் தேவையற்ற சொல்,
(1) எது (2) ஐ (3) அன் (4) ஓ

27. உடன்பாட்டுப் பொருளையும் எதிர்மறைப் பொருளையும் தரும் ஒரு வினைமுற்று,
(1) பாடாய் (2) செய்யேல் (3) கூடினை (4) விடுமின்

28. சீதை அழுத கண்ணீர் ஆறாக ஓடிக் கடலையடைந்தது - இதில் வந்த அணி,
(1) சிலேடை (2) உருவகம்
(3) தற்குறிப்பேற்றம் (4) உயர்வுநவிற்சி

29. பெயராயும் வினையாயும் உரியாயும் வரத்தக்க ஒருசொல்,
(1) அணி (2) கணி (3) பணி (4) துணி

30. பின்வருவனவற்றுள் காலங்காட்டும் தொழிற்பெயராயும் தெரி நிலைவினைமுற்றாயும் வரத்தக்க சொல்.
(1) பாய்ந்தான் (2) பாய்ந்தனர்
(3) பாய்ந்தன (4) பாய்ந்தது

5. பின்வரும் முற்பகுதிக்குப் பொருத்தமான பிற்பகுதியைத் தெரிக.

31. காட்டிற் கண்ட மயில்களின் கூட்டம்
(1) அழகுடையனவாய் இருந்தன
(2) அழகுடையனவாய் இருந்தது
(3) அழகுடையதாய் இருந்தன
(4) அழகுடையதாய் இருந்தது

32. நேற்றுமாலை நிகழ்ந்த விழாவுக்கு,
(1) நீங்கள் எல்லாரும் வந்தீர்கள்
(2) நீங்கள் எல்லாம் வந்தீர்கள்
(3) நீங்கள் எல்லோமும் வந்தீர்கள்
(4) நீங்கள் எல்லோரும் வந்தீர்கள்

33. அவனுடைய ஆடுகள் உன் தோட்டத்துள்,
(1) நுழைந்ததென்று கூறுவது உண்மையல்ல
(2) நுழைந்த தென்று கூறுவது உண்மையன்று
(3) நுழைந்தன வென்று கூறுவது உண்மையன்று
(4) நுழைந்தன வென்று கூறுவது உண்மையல்ல.

34. நீ கூறியவற்றை நான்,
(1) மறந்தவனல்ல (2) மறந்தேனல்ல
(3) மறந்தேனல்லேன் (4) மறைந்தேனன்று

6. பொருத்தமான விடையைத் தெரிக.

35. இஸ்லாமியக் கட்டடக் கலை எவ்வாறு தோன்றி வளர்ந்தது?
(1) மசூதிகளை மையமாகக் கொண்டு
(2) கோட்டைகளை மையமாகக் கொண்டு
(3) அரண்மனைகளை மையமாகக் கொண்டு
(4) வீடுகளை மையமாகக் கொண்டு

36. இக்காலத்தில் திருப்பதி என வழங்கப்படும் இடம்,
(1) தணிகை மலை (2) திருவேங்கட மலை
(3) திருவெள்ளறை (4) தணிகாசலம்

37. பிராமணர் விரிந்த மனப்பான்மையற்றவர் என்பதற்குக் கட்டுரையாசிரியர் காட்டும் காரணங்களிற் பிழையானது,
(1) தங்கள் மதத்தைத் தாங்களே அறிய வேண்டும் என்ற எண்ணம்
(2) மதக் கொள்கைகளைச் சமஸ்கிருத மொழியில் எழுதி வைத்தமை
(3) பிறமதக் கொள்கையுடையோரையும் ஆதரித்தமை
(4) மதக்கொள்கை நூல்களைப் பிறர் படிக்கக் கூடாது என்ற எண்ணம்.

38. தமிழ் அகராதிகளின் வளர்ச்சியைக் காட்டும் இறங்கு வரிசை,
(1) சென்னைப் பேரகராதி, கதிரவேற்பிள்ளை அகராதி, மானிப்பாய் அகராதி, சதுரகராதி,
(2) சதுரகராதி, சென்னைப் பேரகராதி, மானிப்பாய் அகராதி, கதிரவேற்பிள்ளை அகராதி,
(3) மானிப்பாய் அகராதி, சதுரகராதி, கதிரவேற்பிள்ளை அகராதி, சென்னைப் பேரகராதி,
(4) சதுரகராதி, மானிப்பாய் அகராதி, கதிரவேற்பிள்ளை அகராதி, சென்னைப் பேரகராதி.

39. மலையாளமொழியின் ஆதி இலக்கியம்
(1) நன்னைய பாரதம் (2) கவிராஜ மார்க்கம்
(3) ராமசரிதம் (4) நாலடியார்

7. பின்வரும் வாக்கியங்கள் ஒழுங்கின்றி அமைந்துள்ளன. அவற்றை ஒழுங்காக்கினாற் பொருட்டொடர்புள்ள பந்தியாகும். ஒழுங்கு முறைபற்றிய விடையிற் சரியானதைத் தெரிக.

40. (அ) தமிழ் மாலுமிகளும் வர்த்தகர்களும் சென்றநாடுகள் சில வற்றில் சில தமிழ்ச் சொற்கள் ஆங்காங்கு புகுந்து வழங்கப் படலாயின.

(ஆ) ''திரைகடலோடியுந் திரவியந்தேடு'' என்று ஔவைப்

பிராட்டியார் கூறிய உபதேசம் மிகப்பழங் காலந்தொட்டுத் தமிழ் மக்கள் கடைப்பிடித்துவந்த ஒரு கொள்கையை ஒட்டியதாகும்.

(இ) பாலஸ்தீன நாட்டை ஆண்ட சொலமன் என்ற அரசன் காலத்திலே தோகைகள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டன என்று அந்நூல் கூறுகிறது.

(ஈ) இதீஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, தமிழ் வாணிகம் கிழக்குத் திக்கிலும் மேற்குத் திக்கிலும்பல நாடுகளிற் பரவியிருந்தது என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

(உ) யூதர் எபிரூ மொழியில் எழுதிய "டைபில்" என்ற சமய நூலிலே தோகை என்ற தமிழ்ச்சொல் துக்கிம் என்று மருவிய வடிவிற் காணப்படுகிறது.

(1) ஆ, இ, உ, அ, ஈ (2) அ, இ, ஆ, உ, ஈ

(3) ஆ, ஈ, அ, உ, இ (4) ஆ, உ, ஈ, அ, இ

பகுதி: II

1. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 300 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுக.

(அ) வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் மூத்ததான பத்திரிகைகளின் பங்கும் பயனும் பண்பும் பற்றிய விளக்கக் கட்டுரை.

(ஆ) ஓர் இலட்சிய நாட்டை நீர் கற்பனைக் கண் கொண்டு காணுகிறீர். அந் நாட்டின் அரசியல், மக்கள் வாழ்க்கைமுறை, இதழில்கள், ஒழுக்கம் முதலியன எவ்வாறமைந்திருக்கும் என எழுதுக.

(இ) கடல் திடலாகும்; திடல் கடலாகும் இப்பழமொழியின் கருத்தையொட்டிக் கதையொன்றை மனத்தில் உருவாக்குக. அதனைக் காட்சிகளாக வகுத்துச் சிறுநாடகம் ஒன்று எழுதுக.

(ஈ) செழிப்பு நிறைந்த கிராமம் ஒன்றில் நீர்கண்ட காட்சிகள் பற்றிய வருணனை

2. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 100 சொற்கள் அளவில் எழுதுக.

(அ) உங்களூரின் அமைவிடம், மக்கள் தொகை, பொருளாதார நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு மருந்தகம் ஒன்று அமைத்துத்தருமாறு மாண்புமிகு சுகாதார அமைச்சருக்கு விண்ணப்பக் கடிதம்.

(ஆ) உமது வகுப்பு மாணவர் கல்விச் சுற்றுலா செல்வதற்குத் தீர்மானிக்கிறார்கள். செல்லும் நாள், இடங்கள், அவற்றைப் பார்ப்பதால் விளையும் நன்மைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அனுமதி கோரி அதிபருக்கு எழுதும் அறிக்கை.

8. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் இரண்ட கருத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக. (70 சொற்கள்)

காஞ்சி மாநகரிலே பிறந்து வளர்ந்து கலை பயின்ற ஆயனர் இளம் பிராயந்திலேயே 'மகா சிற்பி என்று பெயர் பெற்று விட்டார். ஆயனருடைய புகழ் வளர வளர, அவருடைய வேலைக்குக் குந்தகம் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருந்தது. மகேந்திர சக்கரவர்த்தி முதல், சாதாரண சனங்கள் வரையில் அடிக்கடி அவருடைய வீடுதிக்கு வருவதும் அவருடைய சிற்ப வேலைகளைப் பாராட்டுவதுமாய் இருந்தார்கள். வந்தவர்களை வரவேற்று உபசரிப்பதிலேயே அவருடைய காலம் அதிகமாகச் செலவழிந்து வந்தது.

சைவகுலத்திற் பிறந்த ஆயனர், இயற்கையாகச் சைவசமயப் பற்றுக்கொண்டிருந்தார். அதோடு பழந்தமிழ் நாட்டுச் சிற்பவடிவங்களிற் சிறந்த ஸ்ரீ நடராச வடிவம் அவருடைய உள்ளத்தைப் பூரணமாகக் கவர்ந்திருந்தது. எனவே அவருடைய சிற்ப வேலைகள் பெரும்பாலும் சைவமதத்தைத் தழுவியனவாகவே இருந்தன. இது காரணமாகப் புத்தபிக்குகளும் சமண முனிவர்களும் ஆயனரைத் தங்கள் தங்கள் சமயத்திற் சேர்த்துக்கொள்ள இடைவிடாத முயற்சி செய்தவண்ணம் இருந்தார்கள்.

இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்காக, ஆயனைச்சிற்பியார் ஒரு தீர்மானத்துக்கு வந்தார் அதாவது காஞ்சி நகரை விட்டுச் சென்று எங்கேயாவது நடுக்காட்டில் ஏகாந்தப் பிரதேசத்தில், வீடு அமைத்துக்கொண்டு வசிக்கவேண்டும் என்பதுதான்.

அவ்விதம் ஆயனர் தீர்மானித்ததற்கு இன்னொரு முக்கியமான காரணம் இருந்தது. அந்த மகாசிற்பி, சிற்ப சித்திரக் கலைகளை தன்கு பயின்றிருந்ததோடு பரத சாஸ்திரம் என்னும் மகா சமுத்திரத்தையும் கரைகண்டவராய் இருந்தார்.

அவருடைய ஏக புதல்வி சிவகாமி குழந்தையாய் இருந்தபோதே நடனக்கலையில் அவள் சிறந்த தேர்ச்சியடைவாள் எனபதற்கு அறிகுறிகள் காணப்பட்டன. ஆயனருடைய உள்ளத்திற் பெரிய ஆசை உதயமாயிற்று

குழந்தை சிவகாமிக்குப் பரதநாட்டியக் கலையிற் பயிற்சி அளிக்க வேண்டும்; அவளுடைய நடனத் தோற்றங்களைப் பார்த்து அவற்றைப் போல ஜீவ களையுள்ள நல நவமான நடனவடிவங்களைச் சிலையிலே அமைக்கவேண்டும் என்னும் மனோரதம் அவருக்கு உண்டாகி நாளுக்கு நாள் வலுப் பெற்று வந்தது. நகரத்தை விட்டு எங்கேயாவது ஏகாந்தப் பிரதேசத்துக்குப் போனாலொழிய மேற்படி மனோரதம் நிறைவேறுவது சாத்தியமாகாது என்பதையும் அவர் நன்கு உணர்ந்தார்.

(ரா. கிருஷ்ணமூர்த்தி - கல்கி)

4. ''தாடனைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலரோ ஏகமெனக் கொள்'' இதன்பொருள் யாது? இதற்கும் சிவகாமி கூற்றுக்குமுள்ள தொடர்பை விளக்குக.

பகுதி: III

1. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.

(அ) ''செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்க
டம்மனத்தை வாங்குந் தடந்தோளான் - மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளனென்பான் வேந்த னுனக்கு''

(ஆ) ''தப்பீஸில் ஷிராஸ் வாசிகள் நாய்களைவிட அதிகமாகி விட்டனர்''

(இ) ''இஸ்லாத்தின் வெற்றிச் சின்னமாக அது இலங்கட்டும். அதனை அழிக்கவேண்டாம்

2. பின்வருஞ் செய்யுள்களைப் படித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) ''வாழுஞ் செல்வமும் தாழிலம் பாடனும் வையகத்துள் சக்கரம் போலுமே
சூழுமாநிலத் தின்பமுந் துன்பமுஞ் சுற்றுகின்ற விராட்டினம் போலுமே
வீழுமாயுளுந் தேகமும் விண்ணினில் விளங்கி மங்கிடு மின்னலைப் போலுமே
தாழுந்தன்மை யகன்ற மூகம்மதுத் தம்பி மாமரைக்காய சாயனே''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக உமதுவசனநடையில் எழுதுக

(2) இப்பாடலில் காட்டப்படும் உவமை சுட்டும் பொருளை விளக்கி எழுதுக.

(ஆ) ''இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
நன்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து''

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக உமதுவசனநடையி லெழுதுக

(2) தடித்த எழுத்திலுள்ள சீதாடர்கள் புலப்படுத்தும் நயத்தை விளக்குக.

(இ) ''முகம்பார்த் தருணோக்கி முன்னிரந்து செல்வ
ரகம்பார்க்கு மற்றோரைப் போல மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
லாளான் விருந்திட மன்.

(1) இப்பாடலின் பொருளைத் தெளிவாக உமது வசன நடையில் எழுதுக,

(2) இப்பாடலின் நயத்தை விளக்குக.

5. சிரிப்பின் சிறப்பியல்பையும் அதனாலடையும் நன்மைகளையும் சிறிக்கத் தெரிந்த பாரதிகர் என்னும் கட்டுரையில் ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்.

விடைக் குறிப்புக்கள்

பகுதி I

செய்யுள் 1.

1.	(3)	2.	(2)	3.	(1)	4.	(4)	5.	(2)	6.	(3)
7.	(4)	8.	(3)	9.	(3)	10.	(2)	11.	(3)	12.	(1)
13.	(3)	14.	(3)	15.	(2)	16.	(2)	17.	(3)	18.	(2)
19.	(4)	20.	(3)	21.	(4)	22.	(3)	23.	(1)	24.	(1)
25.	(2)	26.	(1)	27.	(4)	28.	(3)	29.	(2)	30.	(1)
31.	(3)	32.	(2)	33.	(4)	34.	(2)	35.	(4)	36.	(4)
37.	(2)	38.	(1)	39.	(3)	40.	(2)				

பகுதி II

1. வினாவிலேயே விடைக்குறிப்பும் உண்டு: அவதானிக்க.

2. ஆ, ஈ, எ, உ, அ, ஊ, இ, ஏ.

3. கட்டுரைக் குறிப்புக்கள்: பந்தி பிரித்தும் குறியீடுகள் இட்டும் எழுதுதல் வேண்டும். இங்குத் தரப்படுங் குறிப்புக்கள் வழிகாட்டற் குறிப்புக்களேயன்றி, முழுமையானவையல்ல. மாணவர்கள் சகமாணவருடனும் ஆசிரியருடனும் பிறருடனும் கலந்துரையாடிப் பெற்றுக்கொண்ட கருத்துக்களையும் இக்குறிப்புக்களுடன் சேர்த்து விரிவுபடுத்திக் கட்டுரைப் பொருளைச் சிறப்படையச் செய்யலாம். இந்நெறிமுறை ஏனைய வினாப்பத்திரக் கட்டுரைகளுக்கும் பொருந்தும்.

(அ) என்மனத்தை விட்டு நீங்காத சோக நிகழ்ச்சி: [படிமுறையன வரலாற்றுத் தன்மையும் சோகவுணர்வை வெளிப்படுத்தும் திறமையும் அமைதல் வேண்டும்]

(1) எங்கே, எப்போது, எவ்வகையில் அது நிகழ்ந்தது [உ-ம்: சூன்மி வீச்சால் முழுக் குடும்பம் அழிதல், பயங்கர விபத்து முதலியன] (2) அந்த இடத்தின் அலங்கோலநிலை, இறந்தவர்களின் பரிதாபக்கோலம், காயமுற்றோரின் அவலநிலை; (3) சுற்றத்தவர் துடிப்பு, அழுகை ஓலமும் அயலவர் துயரமும், (4) நீர் அடைந்த அநுபவமும் அதனை மறக்கமுடியாமைக்குரிய மனத்தாக்கமும்.

(ஆ) நீர் விரும்பும் பெரியாரின் வாழ்க்கையும் பணியும்: [வரலாற்றுப் பாங்கான கட்டுரை] (1) ஆரம்பம்: 'செயற்கரிய செய்வார் பெரியர்'. செயற்கரிய செயற்றுறைகள் பல. நீர் விரும்பும் பெரியார் எவ்வகையினர். (2) அவரது வாழ்க்கைச் சுருக்கம் (3) அவர் ஆற்றிய பணிகள்: சமூகப்பணி, அரசியற்பணி,

கலைப்பணி, தமிழ்ப்பணி, சமயப்பணி, முதலியவற்றுள் எவ் வகைப்பணி என்பது. அப்பணியினை அவர் மேற்கொண்டவிதம்; (4) அவரது பணியால் விளைந்த நிலையான பயன்கள்.

(இ) கடற்கரையில் ஒரு மாலைவேளை: வருணனைப் பாங்கான கட்டுரை. 'கட்டுரை மஞ்சரி' ஆண்டு 10, 11 இல் உள்ள 'கடற் கரையில் ஒரு பொன் மாலைப் பொழுது' என்னும் கட்டுரையைத் துணைக் கொள்ளலாம்]

(1) கடற்கரை எதுவென்பதும் சென்ற காரணமும் நேரம் முதலியனவும் (2) தொடுவானக் காட்சி; வானத்து வண்ண சாலங்களைக் கடல் பிரதிபலித்தல் (3) கடலலைகளின் தோற்றம்; அவை கரையில் மோதுங்காட்சி. (4) சூரியனின் அத்தமனக் காட்சி; அப்போது கடலின் தோற்றம். (5) மீனவர் மீன்பிடிக்கும் காட்சி; கடலிற் செல்லுங் கலங்களின் காட்சி.

(ஏ) மரங்களை வளர்ப்பது ஏன் அவசியமானது [சிந்தனையோடு கூடிய விளக்கப் பாங்கான கட்டுரை]

(1) பலபல தேவைகளுக்காகக் காடுகளும் மரங்களும் அழிக்கப் படல்; அழிக்கப்பட்டாலும் புதியபுதிய காடுகள் உருவாக்கப்படல் வேண்டும்; புதிய புதிய மரங்கள் வளர்க்கப்படல் வேண்டும். (2) மரங்கள் மழைவளத்துக்குப் பிரதான காரணியாய் அமைகின்றன. (3) மண்ணரிப்பைத் தடுத்து மண்வளத்தை மிகுவிக்கின்றன. (4) பிற உயிரினங்கள் வாழ்வதற்குக் காரணமாய் அமைகின்றன. (5) சூழலை மாசுறாமற் காக்கின்றன. (40கட்டுரை மஞ்சரியில் உள்ள 'காடு செழித்தால் நாடு செழிக்கும்' என்னுங் கட்டுரையைத் துணைக் கொள்ளலாம்)

4. நான்கு வகைப்பட்ட நிலங்கள் உள்ள காரணத்தால் பூமி நானிலம் எனப்பட்டது. குறிஞ்சி மலையும் மலைசார்ந்த இடமுமாகும். நெய்தல்: கடலுங் கடல் சார்ந்த இடமுமாகும். மருதம்: வயலும் வயல் சார்ந்த இடமுமாகும்; முல்லை: காடும் காடு சார்ந்த இடமுமாகும்.

பகுதி III

1. (அ) குந்திதேவியால் [பாண்டவர்க்குக் கூறப்பட்டது. அருச்சுனன் மச்சயந்திரத்தை வீழ்த்தித் திரௌபதியை மணந்து, குந்தி யிருந்த குடிசைக்குச் சென்று, தான் அருங்கனி (திரௌபதி) கொண்டுவந்திருப்பதாகக் கூறினான். மறைவில் இருந்த குந்தி தேவி பாண்டவரையரையும் மனத்துட் கொண்டு மேற்கண்டவாறு கூறினாள்.]

(ஆ) இராமனால் கைகேயிக்குக் கூறப்பட்டது. இப்போது தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட வான்மீகி இராமாயணத்தில் வரும் இராமனுக்கு கைகேயி தான் பெற்ற வரத்தைக் கூறிக் காடேகு மாறு பணித்தாள். அப்போது அவள், தந்தையாகிய தசரதன் முன்னிலையில் மேற்கண்டவாறு கைகேயியை ஏசுகிறான்.

(இ) சுமித்திரையால் இலக்குமணனுக்குக் கூறப்பட்டது. கைகேயி பெற்ற வரத்தால், இராமன் பதினான்காண்டு காடாளச் சீதை யோடும் தம்பி இலக்குமணனோடும் புறப்பட்டுச் சுமித்திரையிடம் விடைபெறச் செல்கின்றனன். அப்போது சுமித்திரை தன் மக னான இலக்குமணனை நோக்கி மேற்கண்டவாறு கூறினாள்.

2. (அ) 'ஓசை பெற்றுயர்..... கதையரோ''

(i) பொருள்: அலைகளினாலே பெருமுழக்கமிடும் பாற் கடலை அடைந்த பூனை ஒன்று, அங்குள்ள பாலை ஆசையினால் முற் றாக நக்கிக் குடிக்க விரும்புகிறது. அதேபோல நான் (கம்பர்) குற்றமில்லாத வெற்றி பொருந்திய இராமன் கதையை ஆசை தூண்டுவதாற் சொல்லத் தொடங்கினேன்.

(ii) (1) உவமானம்: பாற் கடல்: உவமேயம்: இராமன்கதை: பொதுத்தன்மை: மிகுந்த சிறப்பு. (2) உவமானம்: பூனை; உவமேயம்: கம்பர்; பொதுத்தன்மை; தகுதியின்மை (3) உவ மானம்: பூனை பாற்கடலைக் குடிக்க விரும்பல்; உவமேயம்: கம்பர் இராமன் கதையைப் பாடவிரும்பல்; பொதுத்தன்மை- ஆசை

(ஆ) ''ஆளையா, வுனக்கமைந்தன .... வள்ளல்''

பொருள்: இளங்கமுகின்மீது வாளைமீன்கள் தாவிப்பாயும் நீர் வளங் கொண்ட கோசல நாட்டையுடைய வள்ளலாகிய இராமன், போர்க்களத்தில் இராவணனைப்பார்த்து, ''ஐயா, உனக்குத் துணையாக அமைந்த படைகள் யாவும் காற்றினால் அடித்துச் செல்லப்பட்ட பஞ்சுபோல் மறைந்தன. எனவே நிராயுதபாணி யாய் நிற்கின்றாய், அதனால் இன்று நீ உன் நகருக்குப் போய் நாளை, சகல ஆயத்தங்களோடும் போருக்குவா'', என்று விடை கொடுத்தான்.

(ii) இராவணன் நிராயுதபாணியாய், தலைகுனிந்து, நிலங்கிளைந்து நின்றமை. இக்கூற்றிலிருந்து பேராண்மையுடைய இராமன், இராவணனுக்கு உபகாரியாய் மாறி ஊராண்மை செய்தல், இரா மனின் அருங்குணம் புலப்படல்.

(iii) வள்ளல் - கொடையாளி: நல்குதல் - கொடுத்தல். போர்க்களத் திலே இராவணனை எளிதாகக் கொல்லக்கூடிய சந்தர்ப்பம் இரா

மனுக்கு இருந்தது. எனினும் ஊராண்மை செய்து, ''இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' என வரங் கொடுக்கிறான்; பெரிய வள்ளலாக மாறுகிறான்.

3. அவைக்கு அடங்கும் முகம் காட்டப்படும் விதம்:

(அ) பாற்கடலை முற்றுங் குடிக்க ஆசை கொண்ட பூனைபோல, சிறந்த, குற்றமற்ற இராம சரிதையைத் தகுதியற்ற தாம் (கம்பர்) பாடமுயன்றாரென்பது

(ஆ) வான்மீகி முனிவன் பொருள் பொதிந்த அழுத வாக்குக்களால் ராமகதையைப் பாடினான், பொருளையமோ சொன்னயமோ அற்ற வெள்ளைச்சொல்லால் தாம் பாடத் தொடங்கினார் எனக் கூறுவது.

(இ) தேவருஞ் சுவைக்கும் வண்ணம் வான்மீகி பாடிய பாட்டை ஊமையன் ஒருவன் பேசுவதுபோல அன்பினால தாம் பாடத் தொடங்கினார் எனக் கூறுவது.

இவை மூன்றானும் தம்மைத் தாழ்த்தி வாசகர் தம்நூலிலுள்ள குற்றங்களை மன்னிக்குமாறு அவைக்கு அடங்குகின்றனர்

4. இராமன் காட்டுக்குப் போவதுபற்றி இன்று தமிழில் வழங்கும் இராமாயணம் கூறுவது: தசரதன் மூன்விலையில் கைகேயி இராமனைக் காட்டுக்குப் போகும்படி ஏவ இராமன் கைகேயி சொல்லை மறுத்ததுமன்றி, அவளை அம்புபோன்ற கடுஞ் சொல்லால் ஏசுகிறான். கம்பராமாயணம் கூறுவது; கைகேயி அழைத்ததும் அங்கு வந்த இராமன், தாய் பெற்ற வரங்களைக் கேட்டு, அன்றலர்ந்த செந்தாமரையை வென்ற முகத்தினனாய் மகிழ்ந்தான். தன் தம்பி பெற்ற செல்வம், தான் பெற்ற செல்வமன்றோ எனக் கூறிக் குதூகலித்தான். தசரதன் கட்டளையன்றித் தாயின் கட்டளையாய் இருந்தாலும் தான் தலைமேற் கொண்டு நடப்பான் எனக் கூறுகிறான்.

இவற்றில் கம்பர் கூற்றுப் பொருத்தமானது. காரணம்: தசரதனின் கட்டளையைக் கைகேயி கூறியதும் அதனைச் சிரமேற் கொள்ளுகிறான்; மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுகிறான், தன் தம்பிமீது அணுவளவும் பொறாமை கொள்ளாது மகிழ்கிறான். இவை இராமனின் அருங்குணங்களை வெளிப்படுத்துகின்றன. வான்மீகி இராமாயணம் இராமனைத் தந்தை தாய் சொற் கேளாதவனாகக் காட்டுகிறது.

பகுதி I — செயல் 2

1.	(4)	2.	(3)	3.	(2)	4	(1)	5.	(3)	6.	(4)
7.	(2)	8.	(3)	9.	(1)	10.	(4)	11.	(4)	12.	(3)
13.	(2)	14.	(4)	15.	(2)	16.	(2)	17.	(3)	18.	(4)
19.	(3)	20.	(1)	21.	(4)	22.	(4)	23	(1)	24.	(4)
25.	(3)	26.	(1)	27.	(2)	28.	(1)	29.	(3)	30.	(3)
31.	(2)	32	(4)	33.	(4)	34.	(2)	35.	(3)	36.	(1)
37.	(2)	38.	(4)	39.	(4)	40.	(3)				

பகுதி III

1. அ. நீர் கண்ட தேர்த்திருவிழா பற்றிய வருணனை:

(அ) காலம், இடம், கோவில் பற்றிய விபரங்கள், (2) வெளிவீதியில் நின்ற மக்கள் கூட்டம், தோற்றம், செயல், மனநிலை (3) உள்வீதியில் நின்ற மக்கள் கூட்டம், தோற்றம் முதலியன (4) சுவாமி தேரில் எழுந்தருளும் காட்சி. 5. தேரின் தோற்றம், அமைப்பு, அழகு முதலியன (6) தேர் திருவீதிவலம் வரும் காட்சி: மேளக்கச்சேரி, பஜனை, காவடி, அங்கப் பிரதட்சணம் முதலியன.

(ஆ) "குருடனை ஒருவனுக்குக் கண்பார்வை கிடைத்தால்....." எனபது பற்றிய கற்பனை.

(1) கட்புலனற்ற குருடனின் நிலை: உளச் சார்பானது; உடற்சார்பானது (2) அவன் கண் பெற்றவிதம் பற்றிய கற்பனை (3) அவன் செயல்கள்; எதையும் நுணுகி நுணுகி ஆராய்தல்; எமக்கு நகை விளைவிக்கும் செயல்கள். (4) பல இடங்களையும் பொருள்களையும் காணவேண்டுமென்ற துடிப்பு; அறியும் ஆவலிற் கேட்கும் வினாக்கள் (5) கரை கடந்த மகிழ்ச்சி.

(இ) சூழல் மாசுபடும் முறையும் தடுக்கும் வழியும் என்பது பற்றிய விளக்கம்.

(1) நிலம், நீர், வளி என்னும் மூன்றின் தூய்மையும் உயிரின வாழ்வுக்குக் குறிப்பாக மனித வாழ்வுக்கு அவசியம் (3) விவசாய இரசாயனப் பொருளால் சூழல் மாசடைதல், வளமாக்கிகளும் பூச்சி கொல்லிகளும் மண்ணிற் கலந்து மழை நீரோடு கடலையடைதலும் அதன் விளைவும் (3) கைத்தொழில் கழிவுகள் வளிமண்டலத்தையும் நீரையும் மாசடையச் செய்தல் (4) கடலிற் கலக்கும் கழிவுகள் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஊறுவிளைத்தல் 5) போர் சம்பந்தமான ஆயுத ஆராய்ச்சிகளால் வெளியேறும் நச்சு வாயுக்கள், (6) தடுக்கும் வழிகள்: ஆயுத உற்பத்தியைக் குறைத்தல், வளமாக்கிகளை அளவறிந்து பயன்படுத்தல்; மரங்களை வளர்த்தல்; தொழிற்சாலைக் கழிவுகளை மாற்றுப் பொருளாக்கல்.

(ஈ) நியாயப்படுத்தும் காரணங்கள்: (1) தமிழ்ப் பிரதேசத்தில் நிலவும் யுத்த நிலைமை (2) கல்விக் கூடங்கள் இயங்காமை (3) மாணவர் அகதிகளாதல் (4) ஆசிரியர் பற்றாக்குறை (5) இலவச நூல் விநியோகச் சீர்கேடு (6) தரப்படுத்தல் முறையாலுண்டான விரக்தி மனப்பான்மை.

3. இவ்வினாவுக்குரிய விடைக்கு எவ்வகை உதவியும் தேவை இல்லை.

5. இவ்வினாவுக்குரிய விடையும் பிறர் துணையின்றி மாணவரால் அறியப்பட வேண்டியது.

4. செல்வஞ் சம்பாதித்தல்: கல்வி கற்பித்தல், வேளாண்மை, வணிகம், இராசசேவை முதலிய தருமவழிகளிற் பொருள் சம்பாதித்தல் (2) களவு, கைக்கூலி முதலிய பாவநெறிகளாற் சம்பாதிக்கும் பொருள் இம்மையிலும் மறுமையிலும் துன்பந்தரும்.

செலவழித்தல்: சம்பாதித்த பொருளை நான்கு கூறாக்கிச் செலவழித்தல். ஒரு கூறான ஆஸ்தியின் பொருட்டுச் சேமிக்காதவர் பிற்காலத்திலே பெருந்துன்பமடைவர்.

பகுதி III

(அ) இராமனாற் கைகேயிக்குக் கூறப்பட்டது. கைகேயி தசரதனிடம் பரதன் நாடாளவும் இராமன் பதினான்காண்டு காடாளவும் வரம்பெற்றாள். இராமனை அழைத்து, தசரதன் அவனுக்குப் பணித்ததாக அவ்வரங்களைக் கூறினாள். அவற்றைக் கேட்ட இராமன், மன்னன் பணித்தான் என்று கூறாமல் தாங்கள் பணித்தாலும் நான் மறுப்பேனா; தம்பி பெற்ற செல்வம் நான் பெற்றதாகுமன்றோ என்று கூறினான்.

(ஆ) வாலியால் இராமனுக்குக் கூறப்பட்டது. ஏழு மராமரங்களின்பின் மறைந்து நின்று இராமன் எய்த அம்பு வாலியின் மார்பை ஊடுருவியது. அந்த அம்பிலே இராமன் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்ட வாலி, அரக்கர் பிழைசெய்ய, பிழையேதுஞ் செய்யாத தன்னைக் கொல்வது மநுநீதியாகுமா என்று கேட்டு மேற்கண்டவாறு கூறினான்.

(இ) கோசலையால் இராமனுக்குக் கூறப்பட்டது. கைகேயி பெற்ற வரத்தினால் காடுசெல்லப் புறப்பட்டு சீதையோடும் இலக்குமணனோடும் கோசலையிடம் விடைபெற இராமன் சென்றான். அப்போது கோசலை இராமனையும் பரதனையும் ஒப்பிட்டு இராமனை விடப் பரதன் சிறந்தவன் என மேற்கண்டவாறு கூறினாள்.

8. (அ) "புரமெலாம்.....தருமமே"

(1) பொருள்: ஓ இராமா, மும்புரங்களை எரித்த சிவபெருமான் முதலியோர் தந்த வரங்களையும் உனது அம்பு உருவி அழித்தது;

எனது வலிமை மிக்க மார்பையுருவி வலிமையையும் யழித்தது; அன்றியும் எனது உயிரையும் குடிக்கிறது. இப்படியான உனது அம்பைத்தவிர, தீவினைகளை அழிக்கும் வேறு தருமமும் உண்டோ?

(2) சிறப்புக்கள்: தவவலிமையுடையவன்; ஏனவே மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றல் உடையவன்; மனவுறுதியோடு உடலுறுதி படைத்தவன். இராமபாணம் தருமத்தின் வடிவம். தவவலிமை, உடலுறுதி கொண்டோனாயினும் வாலி, தம்பியாகிய சுக்கிரீவன் மனைவியைத் தனதாக்கியவன்; பிறன்மனை நயந்தவன்; எனவே தீவினையாளன்; கொல்லப்பட வேண்டியவன், அதனை உணர்ந்த வாலி, இராமனின் அம்பு தருமவடிவம் என்கிறான்.

(ஆ) (1) பொருள்: வைரமான மனம் படைத்தவராய், அவனது பாதங்களை வணங்காதவர்களின் தலையைத் துண்டிக்கும் வண்ணம் அம்பு தொடுப்பவன் இராமன். அவனது கதையை மிகப் புதுமையான கவிபடைக்கும் ஆற்றல் கொண்ட கம்பன், இரவிலே வேதத்தில் வல்ல அந்தணருடன் வான்மீகி இராமாயணக் கதையை ஆராய்ந்தான்; பின்னர் ஒவ்வொரு தாளும் பகலில் எழுநூறு கவிதைகளாகப் பாடி முடித்தான்.

(2) கருத்து: வான்மீகி இராமாயணம் காலப்போக்கில் பிறழ்வுபட்டிருந்தது. உண்மைக்கதை எதுவெனத் தெரியாதிருந்தது. அந்நிலையில் உண்மைக் கதையை அறிய வேண்டியிருந்தது. வடமொழியிற் புலமை பெற்ற வேதியர் பலருடன் கூடி ஆராய்ந்தான். வான்மீகி காட்டிய உண்மைக் கதையைக் கண்டறிந்தான். இக்கருத்து இப்பாடலின் மூலம் உணர்த்தப்படுகிறது.

ஈ. பேராண்மை படைத்த இராமன், நிராயுத பாணியாய் நின்ற இராவணனைப் பார்த்து "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என ஊராண்மை செய்தான். "இன்று போயினி நாளைவா" என்ற தொடரைப் பாரதத்தில் வில்லிபுத்தூராழ்வாரும். எடுத்தாள்கிறார். அவர் ஆயுதபாணியாய்த் தலைநிமிர்ந்து நிற்கும் கன்னனைப் பார்த்து அருச்சுனன் ஊராண்மை செய்வதாகக் கூறுகிறார். பாரதத்தில் கன்னன், இராவணனைப் போலப் படையிழந்து நிராயுதபாணியாய் நிற்கவில்லை; அதனால் அருச்சுனன் ஊராண்மை செய்ய வாய்ப்பில்லை.

பகுதி I — செயல் 3.

1.	(2)	2.	(1)	3.	(2)	4.	(4)	5.	(3)	6.	(2)
7.	(3)	8.	(3)	9.	(4)	10.	(2)	11.	(4)	12.	(4)
13.	(2)	14.	(4)	15.	(3)	16.	(2)	17.	(1)	18.	(3)
19.	(2)	20.	(4)	21.	(2)	22.	(2)	23.	(3)	24.	(2)
25.	(3)	26.	(3)	27.	(3)	28.	(4)	29.	(1)	30.	(2)
31.	(2)	32.	(4)	33.	(2)	34.	(4)	35.	(1)	36.	(2)
37.	(4)	38.	(3)	39.	(5)	40.	(2)				

பகுதி II

1. இவ்வினாவின் விடைகளுக்குரிய வழிகாட்டற் குறிப்பு, வினாவிற் கொடுக்கப்பட்டுள்ளது.

2. (அ) விஞ்ஞானமும் வீட்டு வாழ்க்கையும் என்பது பற்றிய விளக்கக் கட்டுரை.

(1) வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் வியத்தகு வித்தை புரியும் விஞ்ஞானம்; அது வீட்டிலும் வாழ்க்கையோடு இணைந்துள்ளது, (2) விளக்கேற்றலும் வெப்பந்தணித்தலும், (3) வேலைக்காரனாய் வீடு கூட்டுதல், துணி துவைத்தல், உலர்த்தல் (4) சமையற்காரனாய் உதவல், சமையல் வேலைகளை இலகுவாக்கல், (5) குளிரூட்டுஞ் சாதனமாய்ப் பொருள்களைப் பழுதுபடாது காத்தல் (6) வானொலி, தொலைக் காட்சி மூலம் நல்லாசிரியனாய் அமைதல். (7) பிற.

(ஆ) "எனக்கும் பறக்குமாற்றல் கிடைத்தால் ..... கற்பனை:
(1) முதலில் மனம் போன போக்கிற் பறந்து பறக்குமாற்றலை உறுதிப்படுத்தல் (2) பந்தங்கள் எதுவுமற்ற சுதந்திர வாழ்வு (3) இயற்கையின் பல்வேறு எழிற் கோலங்களைக் கண்டு களித்தல் (4) பலபல நாடுகளையும் மக்களையும் வாழ்க்கை முறைகளையும் அறிதல் (5) நோய்நொடி கவலையற்ற சுகவாழ்வு.

(இ) தரப்படுத்தலும் தமிழ் மாணவரும் என்பதுபற்றிய வரலாறு:
(1) திறமையடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் தெரிவு செய்யப்பட்ட காலம்; தமிழ் மாணவர் காட்டிய திறமை, (2) தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்ட காரணம்; அரசின் சதிமுயற்சி (3) இன, பிரதேச வாரியான தரப்படுத்தல்கள் (4) திறமையான தமிழ் மாணவர்க்கு இடங்கிடையாமை. (5) அதனாலேற்பட்ட விரக்தியும் எதிர்ப்பியக்கமும்.

(ஈ) முழுமதி நாளிற் கண்ட காட்சிகள் பற்றிய வருணனை.
(1) முழுமதி உதித்தல் - உவமை, உருவங்களோடு வருணித்தல், (2) முழுமதியும் வானும் (3) முழுமதியும் முகிற்கூட்டமும் (4) மரஞ்செடி கொடிகளின் அழகு (5) நிலத்தழல் மாற்றும் பால் நிலவு (6) சிறுவர் பெரியோர் மகிழ்ச்சி [இக்கட்டுரைக்குப் பாரதியாரின் வெண்ணிலாப் பாட்டைத் துணைக்கொள்ளலாம்]

3. இதற்கு விடை எழுதுவதனால் அபிப்பிராயம் கணிக்கப்படும், எனவே குறிப்புக்களைக் கருத்திற் கொண்டு, ஆராயும் மனப்பான்மை முதலிய நிறைகளை மாணவர்கள் காணல் வேண்டும்.

4. (1) விழுமிய கருத்தைக் கொண்டிருப்பது (2) ஒருவர் இயற்றிய காலத்தில் மட்டுமன்றிப் பிற்காலத்திலும் பயன்படுவது (3) பாட்டி லாயினும் உரையிலாயினும் அமைந்திருப்பது (4) தழுவிச் செய்யப் படாதது (5) உணர்ச்சிகளைப் புலப்படுத்துவது.

பகுதி III

(அ) வாலியால் இராமனுக்குக் கூறப்பட்டது, ஏழு மராமரங்களின் பின்னால் மறைந்து நின்று இராமன் வாலிமீது அம்பு தொடுத்தான். அம்பு ஏழு மராமரங்களையும் தொளைத்து வாலியின் மார்பைப் பிளந்து நின்றது. அந்த அம்பை அவன் இழுத்துப் பார்த்தபோது அதில் ''ராம'' என்னும் பெயர் இருந்தது. அதைக் கண்ட வாலி, மனுநெறி தவறிவிட்டதாக இராமனை ஏசுகிறான். பின்னர் மெய் யுணர்வு பெற்று மேற்கண்டவாறு கூறினான்.

(ஆ) சிவபெருமானாகிய பிராமணரால் நம்பி ஆரூரருக்கு (சுந்தர மூர்த்திநாயனார்)க் கூறப்பட்டது. ஆரூரரின் திருமணத்தின் போது அவரைத் தடுத்தாட் கொள்ளச் சென்ற சிவபெருமான், அவர் தமக்கு அடிமை என ஓலை காட்டி வாதிட்ட போது, ஆரூரர் அவ் வோலையை வாங்கிக் கிழித்தெறிந்தார். அதனைக் கண்ட சிவபெரு மான் மேற்கண்டவாறு கூறினார்.

(இ) சுமந்தரனால் இராமனுக்குக் கூறப்பட்டது. தசரதனிடம் கைகேயி, பரதன் நாடாளவும் இராமன் காடேகவும் வரம்பெற்ற பின்னர், சுமந்திரனிடம் இராமனை அழைத்து வரும்படி கூறினாள். சுமந்திரன் அக்கட்டளைப்படி இராமனிடம் சென்று மேற்கண்டவாறு கூறினான்.

2. (அ) ''அருணவெங்கதிர் ..... போயினனே''

(1) பொருள்: செம்மையும் வெம்மையுங் கொண்ட ஒளிக்கதிர் கொண்டவன் சூரியன். அவனருளால் குந்தியிடம் பிறந்தவன் கன்னன். பதினாறாம்நாட் போரில் சேனாதிபதியாய்க் களத்தைச் சுற்றி வரும் போது, கரிய நிறத்தினரான கிருஷ்ணன், அருச்சுனன் என்போரைக் கண்டு, அவர்களை நோக்கிச் சில அம்புகளை விட்டான். இவர்கள் நிறத்தினாலும் பெயரினாலும் எண்ணத்தினாலும் ஒற்றுமையுடையவர் என எண்ணிச் சிரித்து அப்பாற் போனான்.

(2) மனநிலை; கன்னன், அருச்சுனனோடு போர் செய்யும் மனநிலை யில் அப்போது இல்லை. கிருஷ்ணனும் அருச்சுனனும் கரிய நிறமுடை யவர்; அதனால் கண்ணர். இருவரது எண்ணங்களும் ஒன்றே என வியப்புணர்வு பெற்ற மனநிலை கொண்டிருந்தான்.

(ஆ) (1) பொருள்: கரு நிறம் கொண்ட நீர் நிலைகளில் மலர்ந்த செங்கழுநீர் மலர்களைக் கவிழ்ந்து பார்த்து அவற்றை வளர்த்தது; சண்பகமரக் காடுகளை வளர்த்தது. மலர்த் தடாகங்களை நிரப்பியது; மணல் பரந்த இடங்

களைச் செழிக்கச் செய்தது; குருக்கத்தி, கமுகு என்பன நிறைந்த இடங்களைச் செழிக்கச் செய்தது: வயல்களில் நிறைந்தது. இவ்வாறு அது ஓவ்வோர் உடலையும் இயங்கச் செய்யும் உயிர்போல விளங்கியது.

(2) உவமை விளக்கம்: சரயு நதி, மலர்ச்சோலை, காடு, குளம், வயல் என்பவற்றைச் செழிக்கச் செய்தது; அவற்றோடு இணைந்த உயிரினங்களையும் அச்செழிப்பால் வாழச்செய்தது; இவற்றால் மக்கள் வாழ்வையும் வளமுறச் செய்தது. எனவே சரயு, உயிர்; ஏனையவை உடல்.

6. உதாரணச் செய்யுள்: "ஆளையா வுனக் கமைந்தன ..... வள்ளல்"

விளக்கம்: (1) பின்னனி எதுவென்பது (2) இராவணன்நிலை (3) இராமன் இராவணனைக் கொல்லாது ஊராண்மை செய்தல் (4) "பேராண்மை ..... எஃகு" என்னுந் திருக்குறளுக்கு இராமன் உதாரணமாய் அமைதல்.

பகுதி I — செயல்—4

1.	(4)	2.	(2)	3.	(3)	4.	(2)	5.	(4)	6.	(3)
7.	(4)	8.	(2)	9.	(3)	10.	(4)	11.	(4)	12.	(3)
13.	(2)	14.	(3)	15.	(1)	16.	(4)	17.	(2)	18.	(3)
19.	(4)	20.	(3)	21.	(2)	22.	(3)	23.	(4)	24.	(4)
25.	(3)	26.	(2)	27.	(1)	28.	(2)	29.	(3)	30.	(3)
31.	(2)	32.	(3)	33.	(2)	34.	(4)	35.	(2)	36.	(3)
37.	(2)	38.	(4)	39.	(3)	40.	(3)				

பகுதி II

1. (அ) வீட்டுத் தோட்டம் அமைத்தலும் அதனால் நாம் பெறும் பயன்களும்.

(1) அமைவிடமும் அமைப்பும்: அமைப்பில் வேலியமைத்தல் முக்கியமானது. வேலிக்கதிகால் முருங்கை, சண்டி, அகத்தி முதலியனவாய் அமையலாம். (2) பயிர்வகை: கொடிவகை வேலியோரத்தில்; ஏனையவை செடிகளாய் அமைத்தல். (3) நன்மைகள்: புதிய, சத்துள்ள காய்கறிவகை பெறுதல், (4) குடும்பப் பொருளாதாரம் மிகுதல், (5) வீட்டுக் கழிவுப் பொருள்கள் பசளையாதல். (6) சிறந்த பொழுது போக்கு.

(ஆ) குடையுஞ் செருப்புமின்றிக் கொழுத்தும் வெயிலில் வழிநடந்த போது.....

(1) மணற் பாங்கான வெளியிடத்தில் வழிநடத்தமை (2) வெயிற் கொடுமை, மணற்சூடு பற்றிய வருணனை (3) பட்டமாடு

கள்: நடனமாடல், தலைவெடிக்கும் போன்ற உணர்வு; வியர்வை ஆறாக ஓடுதல் முதலியன (4) நிழலருமை வெயிலிலே தெரியும் என்பதை உணர்தலும் பிற அனுபவங்களும்.

(இ) **வாழ்வாங்கு வாழ்ந்த எங்களூர்ப் பெரியார்.**

(1) பெரியார் யாரென்பதும் அவர் தோற்றமும் (2) கல்வியறிவும் அனுபவ அறிவும் (3) குணங்கள்: அன்பு, பணிவு, கண்ணோட்டம், நேர்மை முதலியன: (4) வாழ்க்கைமுறை; கடமையைக் கண்ணெனப் போற்றல், பிறருக்கு வேண்டிய வேளைகளில் உதவுதல், சிக்கனமான எளிமை வாழ்க்கை, இறைபக்தி.


(ஈ) இக்கட்டுரை, செயல் - 3 இல் உள்ள குறிப்பைத் தழுவி எழுதப் படலாம்.

2. (அ) கடிதத்தில் இடம் பெறத்தக்க முக்கியகருத்துக்கள்: (1) அகதிகளாய் இடம்பெயர்ந்து வந்தபோது இருந்த நிலை (2) உணவு, உடை, உறையுள், வழங்கிய மறக்கமுடியாத செயல் (3) சிறிதேனும் முகங்கோணாது தங்கள் குடும்ப அங்கத்தவராக மதித்த அன்புள்ளம் (4) இவற்றுக்காக நன்றி கூறல்.

(ஆ) (1) மக்கள்வாழ்க்கையில் எதிரபாராவகையில் விபத்துக்கள் நிகழ்வது, அங்கக்குறைபாடு உண்டாவது இயற்கை என்றும் இவற்றை இறைவன் ஏதோ நன்மை கருதியே செய்கிறான் என்றும் அவன் செயலால் ஒருகண் தப்பியது அதிட்டமென்றும் ஆறுதல் கூறுதல் (2) இருகண்களையும் இழந்தவர்கள் மனவலியாற் பல சாதனைகள் சாதித்திருக்கும் போது, ஒருகண்ணுடைய அவன், வாழ்க்கையில் முன்னேற முடியும் எனத் தேறுதல் கூறுதல்

3. உ, ஆ, அ, இ, ஊ, ஈ

4. **பின்வரும் அட்டவணையை விளக்கி எழுதுக.**



பகுதி III

1. (அ) நளனால் அன்னத்துக்குக் கூறப்பட்டது. சோலையை யடைந்த நளன் அங்குள்ள பொய்கையை வந்தடைந்த அழகிய அன்னத்தைக்கண்டு, அதனழகில் மயங்கினான். அதைப் பிடித்துத் தரும்படி தன்னுடன் வந்த ஏவற்பெண்களுக்குக் கூற, அவர்கள் அதனைப் பிடித்து நளனிடம் கொடுத்தனர். அன்னம் கலக்க மடைந்ததைக் கண்ட நளன், அதன் நடையையும் பெண்கள் நடையையும் ஒப்பிட்டுப் பார்க்கப் பிடித்ததாகக் கூறினான்.

(ஆ) அன்னத்தால் நளனுக்குக் கூறப்பட்டது, தமயந்தியின் பெண்மைப்பண்பையும் பேரழகையும் அன்னங்கூறக்கேட்ட நளன் தமயந்தி மீது பெருங்காதல் கொண்டான். அவனது விரகதாபத்தைக் கண்ட அன்னம், வீமன் மகளான தமயந்தியை நளன் மணக்குமாறு செய்வதாகக் கூறியது.

(இ) தமயந்தியால் அன்னத்துக்குக் கூறப்பட்டது - நளன்பால் விடை பெற்றுத் தமயந்தியிடஞ் சென்ற அன்னம், அவளிடம் நளனின் குணங்கள், அழகு, ஆட்சிச்சிறப்பு என்பவற்றைக் கூறுதலும் தமயந்தி நளன் மீது கழிபெருங்காதல் கொண்டாள். அவள் அன்னத்திடம் நளனைப்பற்றிக் கூறித்தன்னுயிரை மீளத் தந்ததாகக் கூறினாள்.

2. (அ) எழுவடுதோள் ..... கொம்பு

(1) பொருள்: கற்றூணையும் உடைக்கும் வலிபடைத்த தோள் களையுடைய அரசே, நான்சொன்ன அப்பெண் யார் தெரியுமா? உழவர் வயலை உழும்போது அங்குள்ள குவளை சாய்கிறது. அப்பொது அக்குவளைமலரிலிருந்து தேன் ஆறாகப் பாய்கிறது. அது வரப்பிலுள்ள மடையைகட்டும்போது உடைக்கிறது. இத்தகையவளம் மிக்க விதர்ப்பநாட்டு மன்னன் புதல்வியே அப்பெண்ணாவாள்.

(2) நீர்வளம்: வயலில் குவளை காடாக வளர்ந்திருக்க வேண்டுமானால், அம்மலர்களின் தேன் மடையுடைக்குமளவுக்குப் பெருகுமானால், அவ்வயல்களில் என்றுமே நீர் வற்றாதிருத்தல் வேண்டும். இங்குக் கூறப்பட்ட உயர்வுநவிற்சி அணி மூலம் நீர்வளம் காட்டப்படுகிறது.

(ஆ) ''அரும்பெறல் ..... உடம்பு''

(1) பொருள்: இனிய கருப்பஞ்சாறு ஆலையாற்பிழியப்பட்ட பின்னர் கரும்பங்கோது அழிந்துபோகியது. அதுபோல மறுமைப்பயனைத் தருதற்குரிய நல்வினையைச் செய்யும் ஆற்றல் படைத்த உடம்பும், அப்பயனைத் தந்தபின்னர் அழிந்துபோகும்

(2) உவமை: (1) உண்பதற்கினிய சாற்றினைக் கரும்பு கொண்டிருப்பதுபோல நல்வினை செய்யும் ஆற்றலையும் உடம்புகொண்

உள்ளது. ஆலையால் கரும்பின் சாறு வெளியாவதுபோல, நல் வினையால் மறுமைப்பயன் உண்டாகும். சாறுபிழிந்தபின் கரும்பு, சக்கையாவதுபோல, நல்வினை செய்தபின் உடம்பும் பயனற்றதாகும்.

3. சிலவகைத்தொழில்களும் பண்பும்.
(1) உலோகவேலை, மண்வேலை - சிமிழ், தட்டம், பேசின், கோப்பை என்பவற்றிலுள்ள அலங்கார வேலைப்பாடு (2) பட்டுத்துணி நெசவு - அவை நெசவு செய்யப்பட்ட இடங்களின் பெயர், பட்டுத்துணிக்குச் சூட்டப்பட்டமை (உ - ம்) பஸ்ரியன் தமஸ்க், மல்லின் முதலியன (3) கம்பளநெசவு - அழகில் ஈடிணை யற்ற கம்பளங்கள் (4) தந்தவேலை, கடதாசி செய்தல், புத்தகங்கட்டல்.

பகுதி I — செல் 5

1.	(2)	2.	(4)	3.	(3)	4.	(2)	5.	(1)	6.	(4)
7.	(2)	8.	(3)	9.	(4)	10.	(2)	11.	(3)	12.	(3)
13.	(1)	14.	(2)	15.	(3)	16.	(2)	17.	(4)	18.	(3)
19.	(1)	20.	(3)	21.	(3)	22.	(1)	23.	(3)	24.	(4)
25.	(2)	26.	(3)	27.	(2)	28.	(2)	29.	(4)	30.	(2)
31.	(4)	32.	(4)	33.	(1)	34.	(3)	35.	(3)	36.	(1)
37.	(3)	38.	(4)	39.	(3)	40.	(2)				

பகுதி II

1. (அ) ''நீரின்றமையாதுலகு'' (திருக்குறள், ''வான் சிறப்பு'' என்னும் அதிகாரத்தைத் துணைக்கொள்க) (1) நீரே உணவாதல், (2) தாவர வகையையுண்டாக்கி உயிரினங்களை வாழ வைத்தல் (3) கடல், ஆறு, ஏரி குளமாகத் தோன்றி ஒவ்வொன்றும் பயன் படுதல் (4) இலகுவாகக் கிடைக்கும் சுத்தஞ்செய்யும் பொருளா யமைதல் (5) செல்வம் மிக்கநாட்டை உருவாக்கும் முதற்காரணி (உ - ம்) ''நாகிளங்கமுகின் .... கோசலநாடு'' ''மேதிக்குல மேறி ..... கங்கைநீர் நாடன்''

(ஆ) வாழ்வின் இரு கண்கள். (40கட்டுரை மஞ்சரியிலுள்ள ''அறிவியலும் அழகியலும் வாழ்வின் இருகண்கள் ''என்னுங் கட்டுரையைத் துணைக்கொள்க] (1) விஞ்ஞானம் இயற்கையை, ஐம்பூதங்களை அடக்கியாண்டு, மனிதவாழ்வை வளமாக்குகிறது; (2) விஞ்ஞானம் விவசாயம், கைத்தொழில், மருத்துவம் முதலிய வாழ்வின் புறத்துறைகளில் நன்மை புரிகிறது. (3) இலக்கியம் மனத்தின் நல்லுணர்வுகளை வளர்த்து மனிதனைப்

பண்புள்ளவனாக்குகிறது (4) இலக்கியம், மனிதன் இடர்களை வென்று முன்னேறும் பாங்கைக் காட்டுகிறது. (5) அறநெறி, பத்திநெறி என்பவற்றைப் பரப்பி மனித நேய ஒருமைப் பாட்டுக்கு வழிகாட்டுகிறது.

(இ) ''இறைவனை நான் நேர் நேராகத் தரிசிக்க நேர்ந்தால்.....'' இக்கட்டுரை மாணவரின் கற்பனைத் திறத்தைப் பொறுத்துப் பலவேறுவகையில் அமையும். (உ-ம்) நாட்டுப்பற்று மிகுந்தவர்கள் நாட்டுநலன்பற்றி வேண்டுவர்.

(ஈ) ''அருணன் உதித்தனன்'' — இது காலைக்காட்சி பற்றியது.

(1) இழக்கு வெளுத்தலும் சூரியோதயக் காட்சியும். (2) பொன் னொளி மண்ணிலும் விண்ணிலும் பரவுதலும் இருள்நீங்குதலும். (3) பறவைகள், மிருகங்கள் மகிழ்ச்சி ஆரவாரம்; தாவரங்கள் வரவேற்றல் (4) நீர்நிலைகள், வயல் வெளிகள் முதலியவற்றிலே தோன்றுங் காட்சி. (5) மனிதர் புதியதொரு நாளை வரவேற்றலும் அவர்கள் செயலும்.

2. (அ) இடம்பெறத்தக்க கருத்துக்கள்: (1) பாடசாலை மட்டத்தில் அத்துறையில் அவன்காட்டிய திறமையையும் அதனைப் பாராட்டி நீர் உற்சாகமளித்ததையும் நினைவுபடுத்தல். (2) அத்துறையில் அவன் மிக வளர்ந்தமையால் அப்பரிசு கிடைத்ததெனப் பாராட்டல் (3) உன்னதமான பல படைப்புக்களைத் தந்து புகழ்பெற்ற எழுத்தாளனாக மிளிர வேண்டுமென வாழ்த்தல்

(ஆ) அறிக்கையில் இடம்பெற வேண்டிய குறிப்புக்கள் மூன்று, வினாவிலேயே இடம்பெறுகின்றன.

3. (அ) (1) சோலை (2) குளத்துநீரின் திரை (3) மயில் (4) தாமரை (5) முகில்கள் (6) வண்டுகள் (7) குவளை மலர்கள்

(ஆ) (1) மருதநிலக்காட்சி (2) அரங்கு போன்ற சோலையிலே, அரங்கின் திரைச்சீலைபோலக் குளத்து நீரின் அலை அசைய, விளக்குகள் போலத் தாமரை விளங்க, மத்தளம் போல மேகம் முழங்க, இசைவாணர் போல வண்டுகள் ஒலிசெய்ய, பார்வையாளர் போலக் குவளைமலர் விளங்க, நாட்டிய நங்கைபோல மயில் ஆடுகிறது.

(இ) மயில், தாமரை, முகில், குவளை, குளம் முதலியனவெல்லாம் மருத நிலத்துக்குரிய கருப் பொருள்கள்.

(ஈ) மருத நிலம் என்னும் அரசி கொலுவீற்றிருக்கிறாள். அவள் முன்னிலையில் ஒரு நடன நிகழ்ச்சி நடைபெறுகிறது. மருத நிலத்துக் குளிர்ந்த சோலை அரங்காக அமைகிறது ..... இதனைத் தொடர்ந்து எழுதுக.

4. (பின்வருங் குறிப்புக்களுக்கு உதாரணங்காட்டி விரித்தெழுதுக)

(1) தொன்மைச்சிறப்பு: (அ தமிழ் தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளில் ஆதியிலக்கியம் தோன்றியகாலம், தமிழில் ஆதியிலக்கியம் தோன்றியகாலம். (ஆ) தமிழிற் தோன்றிய ஆதியிலக்கியத்தின் பக்குவநிலையை ஆராயும்போது தமிழில் முதலாம் நூற்றாண்டுக்கு முன்னரே இலக்கிய வளர்ச்சி நிகழ்ந்துளது.

(2) பொருண்மை: தமிழ்தவிர்ந்த ஏனையதிராவிட மொழிகளின் ஆதியிலக்கியங்கள் வடமொழி நூல்களைத் தழுவி எழுந்தவை; ஆனால் தமிழ் ஆதியிலக்கியம் புலவர்களால் தாமே புனையப்பட்டமை.

(3) செய்யுள்மரபு: தமிழ்தவிர்ந்த ஏனைய திராவிடமொழி இலக்கியங்கள் வடமொழிச் செய்யுள் மரபைத்தழுவியவை. தமிழ் இலக்கியங்கள் தமிழுக்கேயுரிய அகவற்பா, வெண்பா, கலிப்பா என்னும் வகையைச் சார்ந்தவை.

பகுதி III

1. (அ) அன்னத்தால் தமயந்திக்குக் கூறப்பட்டது. நளனிடமிருந்து விடைபெற்றுத் தமயந்தியிடஞ் சென்ற அன்னம், நளனைத் திருமாலோடு ஒப்பிட்டு அவனது சிறப்பியல்புகளைக் கூறியபோது மேற்கண்டவாறு கூறியது.

(ஆ) அன்னத்தால் தமயந்திக்குக் கூறப்பட்டது. தமயந்தியிடந் தூது சென்ற அன்னம் நளனது குணம், அழகு, ஆட்சிச்சிறப்பு என்பவற்றை விளக்கி, அவனைக் காத்தற்கடவுளான திருமாலோடு ஒப்பிட்டது. அதனைக்கேட்ட தயமந்தி பெருங்காதல் கொண்ட போது அவனை அவளுக்கு மணம்முடித்துவைப்பதாக மேற்கண்டவாறு கூறியது.

(இ) நளனால் அன்னத்துக்குக் கூறப்பட்டது. அன்னம் தமயந்தியைப் பற்றிக் கூறியதும் நளன் அவள் மீது பெருங்காதல் கொண்டு, தனது விரகதாபத்தைக் கூறி, தன்னுடைய வாழ்வு அன்னத்தின் வாய்ச்சொல்லில் இருக்கிறதென மேற்கண்டவாறு கூறினான்.

2. (அ) "தேமதிக்குடைக் கீழ் ..... உலகு"

(1) பொருள்: சாதுவான கிளியும் வேட்டையாடும் பருந்தும் ஒரு கூட்டிலே ஒற்றுமையாக வாழுமாறு, தனது குளிர்ச்சியான வெண்கொற்றக்குடையின் நிழலில் அறநெறி தவறாது உலகினைத் தனக்கு ஒப்பாவாரில்லாது நளன் ஆட்சி செய்தான்.

)1) குறிப்புப் பொருள்: சிதமதிக்குடை என்பதனால் அவனது கருணையும் வெற்றியும் புலப்படுகின்றன. அறங்கிடந்தது என்பதனால் அறநெறிவழுவாத அவனது ஆட்சி தெரிகிறது. ''மரதர் ..... ஒரு கூட்டில்வாழ்'' என்பதனால் அவனது நாட்டில் பகைமை என்ற பண்புக்கு இடமில்லை என்பது தெளிவாகிறது. ''தனித்காத்தான்'' என்ற தொடரால் எந்தமன்னரையும் விட அவன் ஆட்சி சிறந்தது என்பது புலப்படுகிறது.

(ஆ) இலது கோல் ..... அதுவே''

(1) பொருள்: இயமன் உயிரைக்கவர இன்றோ நாளையோ, என்றோ வருவான் என்று நினையாது, எமக்குப் பின்னார் நிழல்போலத் தொடர்வான் என்று எண்ணித் தியவற்றை நீக்கி நல்லறங்களை இயன்றவரை செய்யுங்கள்.

(2) அறநெறி: இறப்பு எந்த நேரத்திலும் நிகழலாம், அதனால் காலதாமதஞ் செய்யாது அறஞ் செய்யுங்கள்.

3. (1) சீனா, இந்தியா, ஈழம், முதலிய நாடுகளுடன் கடல் வர்த்தகம் செய்தமை.

(2) பாரசீகக் கடலைச்சுற்றி இவர்களமைத்த போக்குவரத்துப் பாதையை மேனாட்டார் பின்பற்றியமை (3) கடலாதிக்கத்துக்குச் சான்றாக அமைந்த சொற்கள்: (உ-ம்) அட்மிறல், கேபிள், மொன்சூன் முதலியன. (4) பலபல நாடுகளிற் கண்டெடுக்கப்பட்ட இல்லாமிய நாணயங்கள்.

பகுதி I

செவ்வல் 6.

1.	(2)	2.	(4	3.	(2)	4.	(1)	5.	(3)	6.	(4)
7.	(4)	8.	(3)	9.	(1)	10.	(3	11.	(4)	12.	(1)
13.	(3)	14.	(2)	15.	(2)	16.	(1)	17.	(4)	18.	(1)
19.	(4)	20.	(4)	21.	(3)	22.	(4)	23.	(2)	24.	(1)
25.	(4)	26.	(2)	27.	(2)	28.	(3)	29	(3)	30.	(3)
31.	(3)	32.	(2)	33.	(3)	34.	(3)	35.	(4)	36.	(4)
37.	(1)	38.	(1)	39	(1)	40.	(3				

பகுதி II

1. (அ) பெரும்பான்மையான மூடநம்பிக்கைகளுக்கு அறியாமையே காரணம்: [40கூட்டுரை மஞ்சரி என்னும் நூலில் இடம்பெறும் ''சமூகத்தின் சாபக்கேடு மூட நம்பிக்கைகள்'' என்னும் கட்டுரையைத் துணைக் கொள்க]

1) அறிவுக்குப் பொருத்தமான நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும். (2) மூடநம்பிக்கைகள் தோன்றிய விதம். (3) நமது

மக்களிடையே காணப்படும் மூடநம்பிக்கைகளும் அவற்றின் பொய்ம்மையும் (4) மூடநம்பிக்கைகளைப் புறங்காண வேண்டிய அவசியம்.

(ஆ) "இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை - கற்பனைச் சிறுகதை. (வெளிநாட்டிற்குப் பெரும் பொருளீட்டச் சென்ற ஒருவர் பட்ட இடர்ப்பாடுகள். அனுபவங்கள் என்பனவற்றைக் கருவாகக் கொண்டு கதை அமையலாம். சம்பாஷணைகளோடு வருணனைகளும் இடம்பெறலாம்)

(1) ஆரம்பம் - வரலாற்று முறையிலும் அமையலாம்; இடையில் உள்ள ஒரு சம்பவத்தை உரையாடல் வடிவில் அமைத்து முன்னுள்ள, பின்னுள்ள நிகழ்ச்சிகளைத் தொடரலாம். (2) உணர்ச்சி முறையிலான அல்லது நிகழ்ச்சி முறையிலான ஒரு பிரச்சினை முடிச்சைக் காட்டல். (3) முடிவு: பிரச்சினை முடிச்சுப் படிப்படியாக அவிழ்க்கப்படல்.

(இ) மின்னாற்றலின் வியத்தகு விளைவுகள்:

(1) விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களிற் சிறப்பிடம் பெறுவது மின்னாற்றல்; இலகுவாகக் கிடைப்பது; மலிவானது. (2) வீடுகளில் அதன் உபயோகம். (3) விவசாயவிருத்தியில் அதன் பங்களிப்பு (4) கைத்தொழில் வளர்ச்சியில் அதன் சிறப்பிடம். (5) தொலைத் தொடர்புத் துறையில் அது ஆற்றும் பணி, (6) மருத்துவத்துறையில் செய்யுஞ் சாதனைகள்.

(ஈ) சூரியமண்டலத்தினுள்ள ஒருகோளின் வேடிக்கைச் செயல்கள் இரண்டு இக்கட்டுரை, வீட்டிலோ, வெளியிடத்திலோ, பாடசாலையிலோ மாணவர் கண்ட அல்லது கேட்ட நிகழ்ச்சிகள் நகைச் சுவையோடு வரலாற்றுப் பாங்கில் எழுதப்படல் வேண்டும் - குறிப்புக்கள் மாணவரின் கருத்தைத் தடைசெய்யுமாதலால் அவை தரப்படவில்லை.

2. (அ) வினாவிலேயே கடிதத்தில் இடம்பெறவேண்டிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை விளக்கி, "முறைப்பாட்டு கடிதம்" அமைப்பில் எழுதுக.

(ஆ) (1) இடமும் குளத்தின் நிலையும். (2) செய்யப்பட்ட வேலை விபரம். (3) அதில் ஈடுபட்டோர் விபரம். (4) முடிவுற்ற போதுள்ள நிலை - இவ்வம்சங்களைக் கருத்திற்கொண்டு தலையங்கமிட்டு அறிக்கையுருவில் எழுதுக.

3. இவ்வரைப்பகுதியை மாணவர் தாமாகவே வாசித்துக் கருத்தைத் கிரகித்து விடையெழுதுதல் வேண்டும். இப்பயிற்சி சுருக்கம் எழுதுவதற்கான படிமுறைகளில் ஒன்று.

4. மாமரங்கள் குறைந்த கிராமப்பகுதியில் அறிவுவளர்ச்சியற்ற ஏழையான பாம்பழவியாபாரி, மிகுதியாகக்காண்பது மாங்காய். அதுவே அவன் மனத்தில் ஆழப்பதிந்தது. வயிற்றுப்பிழைப்புக்காக மாம்பழம் விற்கும்போது, ஆழப்பதிந்த மாங்காயோடு பழத்தையும் சேர்த்து மாங்காய்ப்பழம் எனக் கூவிவிற்றான். தமிழ் நாட்டில் மாமரம் இல்லாத ஊர் இல்லை. அதனால் அவன் மாங்காயைக் கண்டு மரத்தைக்கண்டான் எனக் கூறமுடியாது. எனவே மாங்காய் மரம் என்று அவன் கூறுவதில்லை.

பகுதி II

1. (அ) நளனால் அன்னத்துக்குக் கூறப்பட்டது. அன்னம் தமயந்தியின் அழகையும் குணத்தையும் விளக்கமாகக் கூறியதும் நளன் அவளைக்காணாமலே காதல்கொண்டான். அவளை நினைக்க, காதலால் தன்னாவி சோருவதாகவும் அவளுக்கும் அன்னத்துக்கும் என்ன தொடர்பு என்றும் கேட்டு மேற்கண்டவாறு கூறினான்.

(ஆ) விதர்ப்பநாட்டு வேந்தனான வீமனால் முரசறைவோர்க்குக் கூறப்பட்டது. தமயந்தி, நளன் மேற்காதல்கொண்டு ஒளியிழந்த முகத்தளாய், விழிவை முத்துகள் நிறைந்த நெற்றியினளாய் இருப்பதைக்கண்டு, அவள் மனநிலையை யுணர்ந்தான் வீமன். அதனால் சுயம்பரத்துக்கு ஏற்பாடுசெய்து அதனை அறிவிக்கும் படி மேற்கண்டவாறு கூறினான்.

(இ) நளனால் அன்னத்துக்குக் கூறப்பட்டது. நளனிடமிருந்து தமயந்தியிடன் தூதுசென்று, மீண்டு வந்த அன்னத்தைக் கண்டான். நான் தமயந்தியைப்பற்றி அன்னம் உரைத்தவற்றைக் கேட்டான். கேட்டு, தமயந்தி தனனை விரும்புவதாக அறிந்து மேற்கண்டவாறு கூறினான்.

2. (அ) 'தேறிற்றுகளைப் ..... பொழில்''

(1) பொருள்: தேனின் ஓட்டத்தால் தூசு எழுகிறது, பெண்கள் அத்தேரைச் சூழ்ந்து செலுகிறார்கள். அவர்கள் கூந்தலிற் சூடிய மாலையிலிருந்து தேன் சொரிகிறது அந்தத் தேனாகிய நீர் தூசியை அடக்குகிறது; இவ்வாறு நிகழ, கரியவண்டுகள் கூட்டமாகவிருந்து சப்தம் செய்கின்ற சோலையை, நிறைந்த இருள் சூரியனுக்குப் பயந்து ஒளித்திருப்பது போன்ற சோலையை, நளன் அடைந்தான்.

(2) கற்பனை: தூசி அடக்கப்பட்ட முறையும் சோலையின் இயல்பு கூறிய முறையும் கவிஞனின் கற்பனைக்குச் சான்றுகளாகும். துகளைத்தேனாகிய நீர் அடக்கியது என்பது உயர்வுநவிற்சி. அதன்மூலப் பெண்களின் தொகைப்பெருமை தெரிகிறது. வண்டுக்

கூட்டத்தினைக் கொண்டு சோலைமணமலர் நிறைந்தது எனக் காட்டப்படுகிறது. இருள் சூரியனுக்குப்பயந்து ஒளித்திருப்பது என்பதன் மூலம் மரம்செறிந்த சோலை என்பது புலப்படுகிறது.

(ஆ) "கணைகடல் ..... தொடர்பு"

(1) பொருள்: ஒலியெழுப்புங்கடலின் குளிர்ச்சியான துறையையுடைய அரசனே, கல்வியறிவுடையோருடன் கொள்ளும் நட்பு, நுனியிலிருந்து அடிவரை கரும்பைத் தின்பதுபோல அமையும். கல்வியறிவும் அன்பும் இல்லாதவர்களுடன் கொள்ளும் நட்பு, அடியிலிருந்து நுனிநோக்கிக் கரும்புதின்பதைப் போன்றது.

(2) உவமைக் கருத்து: கற்றறிவுடையோருடன் கொள்ளும் நட்பு, ஆரம்பத்திற் கசப்பையுடையதாயும் பழகப்பழக அறிவுவளர்ந்து வளர்ந்து இனிமையுடையதாயும் இருக்கும். கல்லாதவருடன் கொள்ளும் நட்பு, ஆரம்பத்தில் இன்பமூட்டுவதாயும் காலஞ் செல்லச்செல்ல வெறுப்பூட்டுவதாயும் அமையும்.

(3) தனிப்பண்புகள்: (1) தனிமனிதவுரிமை இஸ்லாத்திலிருந்து கிடைப்பது (2) அல்லாஹ் ஒருவரே தெய்வம் (3) ஒருவருக்கு ஒருவர் உதவிபுரிந்து வாழ்தல் (4) இறைவனிடம் தன்னை ஒப்புவித்தல் (5) இறைவனின் சட்டம் சமத்துவத்தையும் நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டது.

பகுதி I — செயல் 7

1.	(2)	2.	(1)	3.	(4)	4	(3)	5.	(4)	6.	(4)
7.	(3)	8.	(2)	9.	(4)	10.	(3)	11.	(4)	12.	(1)
13.	(3)	14.	(2)	15.	(4)	16.	(4)	17	(3)	18.	(4)
19.	(1)	20.	(1)	21.	(3)	22.	(2)	23.	(1)	24.	(3)
25.	(4)	26	(3)	27	(2)	28.	(2)	29.	(2)	30.	(2)
31.	(3)	32	(4)	33.	(4)	34.	(3)	35.	(3)	36.	(2)
37.	(1)	38.	(1)	39.	(3)	40.	(2)				

பகுதி II

1. (அ) பூமியிலுள்ள சமுத்திரம் அனைத்தும் நிலமாக மாறினால் .....

கற்பனை

(1) மழை இல்லாமை (2) ஆறு, குளம், ஏரி முதலிய நீர் நிலைகள் வறண்டுவிடுதல். (3) தாவரங்கள் வளரமுடியாமை; விலங்குகள் வாழமுடியாமை (4) மனிதன் உணவும் நீருமின்றி வாழமுடியாமை. (5) விஞ்ஞானக் கண்டுபிடிப்பால் "நீர்ப் பற்றாக்குறை நீங்குமானால், மக்கள் தொகைப் பெருக்கம்பற்றி அஞ்சத் தேவையில்லை.

(ஆ) நான் சிரமதானப் பணியொன்றிற் பங்குபற்றினேன் - இக்கட்டுரைக்கான குறிப்புக்கள் வினாவிலேயே இடம்பெற்றுள்ளன.

(இ) இன்றைய மாணவர்க்கு ஆங்கிலக்கல்வி ஏன் அவசியம் - மேலைப் பேச்சு

(1) ஆங்கிலம் [உலகப் பொதுமொழியாய் விளங்குதல்; அதனால் உலகமக்களனைவரையும் இணைத்து ஒருகுலமாக்குத் தன்மை, (2) அரசியல், வாணிபம், வேலைவாய்ப்பு முதலிய பல துறைகளுக்கும் ஆங்கிலம் அவசியமாகும் முறை. (3) அறிவுத்துறை நூல்கள் ஆங்கிலமொழியில் இருப்பதால் எந்நாட்டவரும் அறிவியலில் முன்னேற ஆங்கிலம் அவசியம். (4) ஒருவன் விசாலமான பொதறிவு வளத்தையும் விசாலமனப்பான்மையும் பெற ஆங்கிலம் உதவுதல்.

(ஈ) சனநெருக்கடி மிகுந்த வீதியொன்றிற் கண்ட காட்சிகளும், பெற்ற அனுபவங்களும்.

(1) வீதி [எதுவென்பதும் அதன் தன்மையும்: சென்றநேரம். (2) நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா போன்ற மக்கள் கூட்டம்; கூட்டத்தின் தன்மை, [செயல் பற்றிய் வருணனை (3) வாகன நெருக்கடி (4) நடைபாதை வியாபாரிகள் கூட்டம் (5) புழுக்கமும் வியர்வையும் அருவருப் புணர்வும் (6) சிறிது தூரஞ்செல்லச் சிலமணி நேரம் எடுத்தல்.

2. இடம் பெறத்தக்க குறிப்புக்கள்:

(அ) (1) பிரயாண முகவர்களின் ஏமாற்று நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி எச்சரித்தல் (2) வெளிநாடு சென்றோர் பலர் அகதிகளாய் வாழும் நிலை; நிச்சயமான வேலை வாய்ப்போடு வெளிநாடு செல்வதே புத்திசாலித்தனம் எனக் கூறல்.

(ஆ) (1) உப்பளங்களின் அமைப்பு (2) கடல்நீரை அளவாக விடுதல்; உப்புவிதைத்தல் (3) சூரியனின் சூட்டினால் நீர் ஆவியாக உப்பு விளைதல், சேகரித்தல்.

3. இவ்வினாவின் (அ), (ஆ), (இ) பகுதிகளைச் சுருக்கி எழுதும் முறை அவ்வப் பகுதிகளுக்குக் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றுக.

(ஈ) இப்பகுதியிலுள்ள தடித்த எழுத்திலுள்ள தொடர்களுக்குரிய ஒருசொல்;

போரிலே தோற்று ..... வந்த—சரணாகதியடைந்த

அன்பு, நாண் ..... குணங்கள்—சால்பு

அரண்மனையிலே ..... தனியிடம்—அந்தப்புரம் அல்லது உளவகம்

கடவுள் ..... கொள்கை—நாத்திகன்

மனைவியை இழந்தவன் —தபுதாரன்

பகையுமின்றி ..... நிற்பவன்—நொதுமலாளன்

4. பௌத்தர் தமிழுக்குச் செய்த சேவை: (1) தமிழில் தமது சமய நூல்களையும் பிற நூல்களையும் இயற்றியமை: (2) சிறுவர்க்காகப் பள்ளிக்கூடம் அமைத்து நடத்தியமை (3) தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் இயற்றியமை.

பகுதி II

1. (அ) பொய்கையில் நீராடிய பெண்ணொருத்தியால் அன்னத்துக்குக் கூறப்பட்டது. தனது அன்புக்குரிய பஞ்சரக்கிளியைக் கரையில் விட்டு விட்டு பெண்ணொருத்தி பொய்கையில் நெடுநேரம் நீராடினாள். பசியால் துடித்த கிளி அவளைவெளியேற்ற 'பாம்பு பாம்பு' என்று பேசியது. அவள் பயந்து வெளியேறும்போது காதணி கழன்று நீருள்விழுந்தது. அதனை எடுத்துத்தருமாறு அன்னத்தை வேண்டியபோது கூறப்பட்டது.

(ஆ) தானே கடவுள் என்று தத்துவவெறி பிடித்த பாரசீகன் ஒருவனால் கலிபாவுக்குக் கூறப்பட்டது. இவனுக்குமுன், தன்னைத் தீர்க்கதரிசி எனக் கூறியமையால் தன்சபைக்குக் கொண்டுவரப்பட்ட ஒருவனுக்கு மரணதண்டனை விதித்ததாகக் கலிபா அவனுக்குக் கூறினார். அதனைக்கேட்ட அவன் மேற்கண்டவாறு கலிபாவுக்குச் சொன்னான்.

(இ) அப்பாஸியக் கலிபா அல்மன்ஸூரால், பாரசீகத்தைச் சார்ந்த காலித் என்பாருக்குக் கூறப்பட்டது. அல்மன்ஸூர், பாரசீகப் பேரரசனான நவுஷேர்வானை வென்று அவனது அழகிய மாளிகையை இடிக்க எண்ணினான். அதனை காலித் என்பார் தடுத்தார். அவர்வேண்டுகோளைக் கேளாது மாளிகையை இடித்தபோது அதனை இடிக்கமுடியாமை கண்டு மேற்கண்டவாறு கூறப்பட்டது.

2. (அ) "கற்றறிந்தவர் ..... வேண்டுமே"

(1) பொருள்: கல்லாதவர் கற்றவரிடஞ் சென்று கல்வி, கேள்விகளால் அறிவுபெறுதல் வேண்டும். கற்றறிந்தபின் கற்றவற்றின்படி நடத்தல் வேண்டும். தாம் கற்றவற்றைக் கல்வியறிவில்லாதவர்க்குக் கற்பித்தல் வேண்டும்.

(2) பொது நீதி: கல்விபற்றிய மூன்று நீதிகள் இப்பாடலிற் கூறப்படுகின்றன. கல்லாதவர் கற்றவரிடம் கல்வியைப்பெறுதல்; தாம் பெற்ற கல்வியின்படி ஒழுகல்; கல்லாதவர்க்குக் கல்விகற்பித்தல் என்பவை அவை. இவற்றைக் கல்விபற்றிய பொதுநீதிகள் எனக் கொள்ளலாம்.

(ஆ) "குஞ்சியழகும் ..... அழகு"

(1) பொருள்: ஒருவருக்கு அழகிய தலைமயிரோ, உயர்ந்த ஆடை உணவோ, மஞ்சள் முதலிய உடம்பிற் பூசும் பூச்சழகோ உண்

மையான அழகெனக் கருதப்படா. ஆண், பெண் என்னும் இரு பாலார்க்கும் நடுநிலையோடு, மனத்திலே நல்லொழுக்கம் உடையோம் எனக்கருதச் செய்யும் கல்வியாலுண்டாகும் அழகே சிறந்த அழகாகும்.

(3) கல்விக்கொள்கை- கல்வி அறிவைத் தருவது; ஆடையணிகளால் உண்டாகும் அழகினுஞ் சிறந்தது. அத்தகைய கல்வியால் மனத்தின்கண் நல்லொழுக்கப் பண்பு வளர்தல் வேண்டும்; அறநெறியில் வழுவாது நிற்கும் நடுநிலைமை - மனச்சான்று - தோன்றுதல் வேண்டும்.

6. நான்குகுதிரைகள்: (1) வெள்ளிக்கிழமை நிகழும் ஜூம்ஆ தொழுகைக்குப் புதன்கிழமை புறப்பட்ட வீரரின குதிரை (2) இரவிலே புறப்பட்டால் முன்சென்ற பகலைப் பிடித்துவிடும் எனப்புகழப்பட்ட குதிரை (3) அரசன் கொடுத்த பரிசாக அமைந்து அன்றிரவே இறந்த குதிரை (4) கவிஞர் ஸல்பானுக்குப் பரிசாகக் கிடைத்த கிழட்டுக்குதிரை.

பகுதி I

செயல் — 8

1.	(2)	2.	(4)	3.	(1)	4.	(3)	5.	(1)	6.	(2)
7.	(4)	8.	(4)	9.	(3)	10.	(3)	11.	(4)	12.	(3)
13.	(2)	14.	(3)	15.	(4)	16.	(3)	17.	(4)	18.	(1)
19.	(2)	20.	(4)	21.	(4)	22.	(3)	23.	(1)	24.	(4)
25.	(1)	26.	(3)	27.	(2)	28.	(3)	29.	(4)	30.	(2)
31.	(1)	32.	(4)	33.	(2)	34.	(1)	35.	(3)	36.	(2)
37.	(1)	38.	(2)	39.	(1)	40.	(3)				

பகுதி II

1. (அ) விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்கு நன்மை செய்துளதா? - அபிப்பிராயம்.

('40 கட்டுரை மஞ்சரி'யில் உள்ள விஞ்ஞானந் தந்த வாழ்க்கை வசதிகள்' என்னும் கட்டுரையைத் துணைக்கொள்க)

(1) நன்மைகள்: விவசாயம், கைத்தொழிற்றுறைகளின் முன்னேற்றம். (2) போக்குவரத்தும் தொலைத்தொடர்புச் சாதனங்களும். (3) வீட்டு வசதிகள். (4) மருத்துவத்துறையின் வியத்தகு மாற்றம். (5) தீமைகள்: பயங்கர ஆயுத உற்பத்தி (6) சூழல் மாசடைதல் (7) முடிவுரையாக அபிப்பிராயம்.

(ஆ) முற்றத்து வேப்ப மரம் கூறிய கதை (சுயசரிதை)

(மாணவர்கள் தத்தம் சொந்தக் கற்பனை வளத்தைக் கொண்டு எழுதப்பட வேண்டிய கட்டுரை இது. (40 கட்டுரை மஞ்சரியில் உள்ள 'அறுகம்புல்' (சுயசரிதை) என்பதை உதாரணமாகக் கொள்ளலாம்)

(இ) தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் குறை நிறை - விமர்சனம்;
('40 கட்டுரை மஞ்சரி'யில் இடம் பெறும் 'உயிர் வீடு - வானொலி நாடகம்' என்பதை உதாரணமாகக் கொள்ளலாம்)
(1) நிகழ்ச்சி இன்னதென்பதும் அதன் சுருக்கமான வரலாறும்; (2) நிகழ்ச்சியின சிறப்பமிசங்கள் (3) குறைபாடுகள் (4) தயாரிப்பாளரின் திறமை பற்றிய குறிப்பு (5) சுவையான சிலசம் பவங்கள் - இப்பொருட் கூறுகளின் அடிப்படையில் விமரிசனம் செயயலாம்.

(ஈ) மலைமீதொருநாள் - வருணனை:
(40 கட்டுரை மஞ்சரியிலுள்ள 'மலைமீதொரு நாள்' என்னுங் கட்டுரையைத் துணைக்கொள்க)
(1) அதிகாலையிலே மலையகத் [தோற்றம் (2) சூரியோதயமும் காலைக்காட்சியும் (3) நண்பகற் பொழுதுக் காட்சிகள் - முகில் திரளுதல்; மழை பொழிதல். (4) மாலையிற் கண்ட காட்சிகள்.

2. (அ) வினாவிலேயே அறிக்கையில் இடம்பெற வேண்டிய பொருட் கூறுகள் தரப்பட்டுள்ளன.

(ஆ) (1) அடையாள அட்டையின் முக்கியத்துவம்; அதில் லாமல் கடந்த சில நாட்களிற் பட்ட கஷ்டங்கள் (2) விளம்பரம் கண்டதும் அடைந்த மகிழ்ச்சி. (3) அவரது மனப்பான்மையைப் பாராட்டலும நன்றி தெரிவித்தலும்.

3. கருத்துக்களை குறிப்புக்களை ஒவ்வொரு உரைப்பகுதியின் கீழே தரப்பட்டுள்ளன.

4. சொற்பிறப்புக்கூட்டளை: பிறப்பொற்றுமை கொண்டு நிற்கும் சொற் கூட்டங்களை ஆராய்ந்து, ஒவ்வொரு கூட்டச் சொற்களுக்கும் பொதுப் பிறப்பிடமாயுள்ள அடியை அறிதல். (2) வட மொழியில் யாஸ்கர் ஆரம்பித்த சொற்பிறப்புக்கட்டளை, ஐரோப்பிய அறிஞர்களால் மேலும் வளர்ந்தது. ஓரடியில் அல்லது தாதுவில் தோன்றிய சொற்களின் பொருளை அறிவது இலகுவாக அமைத்தமை. (3) தமிழ்ச் சொற்கள் கொத்துக் கொத்தாகவும் நிரைப்பட்ட சொல்லொற்றுமையுடையவுமாயினும் ஓரடி அல்லது தாது ஆராய்ந்து தமிழ் அகராதிகளிற் சேர்க்கப்படாமை.

பகுதி III

1. (அ) கவிஞர் ஸல்மானால் மன்னனுக்குக் கூறப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் ஸல்மானுக்கு மன்னன் ஒரு கிழட்டுக் குதிரையைப் பரிசளித்தான். அதை மன்னனுக்கே திருப்பிக்கொடுத்து, குதிரையின் வயதையும், தன்வயதையும் ஒப்பிட்டு மேற்கண்டவாறு நயமாகக் கூறினார்.

(ஆ) பாரசீகக் கவிதைகளில் இடம்பெறும் ஓராந்தையால் மற்றோராந்தைக்குக் கூறப்பட்டது. ஓராந்தை இன்னோராந்தையின் புதல்வியைத் தன்மகனுக்கு மணம் செய்ய விரும்பியது. அதனையறிந்த புதல்வியைப் பெற்ற ஆந்தையின் தந்தை மேற்கண்டவாறு கேட்டது.

(இ) அன்னத்தால் நளனுக்குக் கூறப்பட்டது. தமயந்தியின் அழகையும் இயல்பையும்பற்றி அன்னம் கூறியதும் தனன் அவள்மீது தணியாத காதல் கொண்டு, அன்னத்தை நோக்கி அதற்கும் தமயந்திக்கு முள்ள தொடர்பு யாதென வினாவினான். அப்போது அன்னம், தாங்கள் தமயந்தியின் நடையழகைக் கற்பதற்காக அவளிடம் சேர்ந்ததாக, மேற்கண்டவாறு கூறியது.

2. (அ) "பால மீட்சி ..... சகாயனே"

(1) பொருள்; பாவநெறியிற் செல்லும் இளைஞர் கூரையில்லா வீடுபோன்றவர்கள். நீதி நெறியறியாத அரசர்கள் மேய்ப்பனில்லாத ஆடு போன்றவர்கள். பணிவெனும் பண்பற்ற, சமயப் பாடல்பாடி இரப்பவர், குடிப்பதற்கு நீரில்லாத நதி போன்றவர்கள்.

(2) உலமை வாயிலாகப் பெறப்படும் உண்மை: இளைஞர் தன்னைறியையைக் கடைப்பிடித் தொழுனால் சிறப்படைவர்; அரசர்கள் நீதி நெறியைப் போற்றி, அதன்வழி நடத்தல் வேண்டும்; பக்கிறுகள் பணிவுடன் நடத்தல் வேண்டும்.

(ஆ) "கரும்பாட்டி ..... பரிவதிலர்"

(1) பொருள்; கரும்பினை ஆலையிலாட்டி அதன் சாற்றிலிருந்து சருக்கரையைப் பதங்கெடுமுன் பெற்றவர்கள். அக்கரும்பின் சக்கை தீயால் எரியும்போது துயரம் அடையார். அதுபோல், உடம்பினாற் செய்யப்படும் தருமங்களைப் பிரயாசையோடு தேடிக்கொண்டவர்கள், உடம்பு அழியும்போது வருந்த மாட்டார்கள்.

(2) உலமை வாயிலாகப் பெறப்படும் அறநெறி: அறச் செயல்கள் செய்யத்தக்க உடம்பு கிடைத்த போதே, அறச் செயல்களை விடா முயற்சியோடு செய்தல் வேண்டும்.

3. (1) குந்திதேவி, கன்னன் தன் மூத்தமகன் என அவனது பிறப் புணர்த்திப் பாண்டவர் பக்கம் சேரும்படி கேட்டபோது கன்னன், துரியோதனன் தனக்குச் செய்த நன்றிகளைக் கூறி அவனுக்காகப் போரிலே உயிர் விடுதலே செஞ்சோற்றுக்கடன் கழிப்பதாகும் எனக் கூறினான். (2) இராமனிடம் அடைக்கலம் அடைந்த விபீடணன் தமையனான கும்பகர்ணனிடஞ் சென்று, இராமன் பக்கம் சேருமாறு கேட்டபோது, இராவணன்

செய்த செய்ந்நன்றிகளைக் கூறி இராவணனுக்காகப் போரில் உயிர் விடுதலே தக்கது என்றான்.

பகுதி I

செயல்-9.

1.	(4)	2.	(2)	3.	(4)	4.	(3)	5.	(2)	6.	(4)
7.	(3)	8.	(4)	9.	(2)	10.	(3)	11.	(1)	12.	(2)
13.	(3)	14.	(2)	15.	(4)	16.	(4)	17.	(4)	18.	(3)
19.	(4)	20.	(3)	21.	(4)	22.	(3)	23.	(1)	24.	(4)
25.	(3)	26.	(4)	27.	(2)	28.	(4)	29.	(1)	30.	(2)
31.	(4)	32.	(3)	33.	(3)	34.	(3)	35.	(3)	36.	(2)
37.	(4)	38.	(2)	39.	(2)	40.	(4)				

பகுதி II

1. (அ) கட்டுரைக் கூறிப்புக்கள் வினாவிலேயே தரப்பட்டுள்ளன.

(ஆ) நான் செய்த அந்த நற்செயலை..... ...பூரிக்கிறது.

(1) நற்செயல் செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தை வரலாற்று முறையில் விவரித்தல். (2) செய்த நற்செயல் பற்றிய விபரம். (3) நற்செயலைப் பெற்றவர் அடைந்த நன்மைகள் (4) அதனால் உள்ளத்திலே தோன்றிய உணர்வலைகள்.

(இ) உலகமெங்குமுள்ள அச்சியந்திரங்கள் .....

(1) இன்றைய கல்விமுறையில் அறிவு விருத்தியின் முதற்காரணி நூல்கள்; நூல்களின் பிற பயன்பாடு. (2) பத்திரிகை, சஞ்சிகை என்பனவற்றின் பயன்பாடு (3) அச்சியந்திரம் இல்லையானால் அவையெவையும் வெளிவரா; ஒளிமயமான அறிவுலகம் இருளடையும். (4) ஏடும் எழுத்தாணியும் (எழுதுகோலும் காகிதமும்) முக்கியத்துவம் பெறும்; அவற்றால் பூரணமான பயன்கொள்ள முடியாமை. (5) இந்நிலையில் ஞாபகசத்தி கூர்மையடையும்.

(ஈ) (1) ஊர்வலத்தின் தன்மை: அரசியற் கட்சியா, தொழிற் சங்கமா? எங்கிருந்து எங்கே முதலியன. (2) ஊர்வலக் காட்சி: அதன் நீளம்; மக்கள் தொகை; உடை; கொடிகள்; முன்னின்று நடத்தியோர். (3) வாத்தியங்கள்: ஆட்டம்; பாட்டு; கலோகங்கள். (4) ஊர்வலக் கூட்டம் மைதானத்தை அடைந்தமை.

2. (அ) இடம்பெறவேண்டிய அம்சங்கள் வினாவிலேயே அமைந்துள்ளன.

(ஆ) (1) கடிதவறுப்புக்கள் (2) நன்மை: குறித்த நேரத்தில் குறித்த வேலை செய்யும் ஒழுங்குமுறை; காலையிலும் இரவிலும் குறிப்பிட்ட நேரம் வரை படிக்கவேண்டிய கட்டாயம்; மாலையில் தேகப்பயிற்சிக்குரிய விளையாட்டு; நூல்நிலையத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு: சத்தேகங்களைச் சகமாணவரிடமோ

உயர்வகுப்பு மாணவரிடமோ கேட்டுத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு. குறைபாடு; சிறைவாழ்வு போன்ற உணர்வு; உணவுக் குறைபாடு.

3. ஜாக்கம் எழுதுவதற்கான குறிப்புக்கள்: (இக்குறிப்புக்கள் விரித் தெழுதப்படல் வேண்டும்) (1) மொழியின் செல்வாக்கு: அறிவை வளர்ப்பது; சருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுவது; சுடுகாடுவரை தொடர்வது. (2) தொழில், பழக்கவழக்கம் முதலியன மாறினாலும் தாய்மொழித் தொடர்பு மாறாது. (3) உலக ஒற்றுமையை விரும் புவோரும் தாய்மொழிப் பற்றை விடுவதில்லை. (4) தமிழராலும் தாய்மொழிப்பற்றை விடமுடியாது.

4. சிவகாமி கூறிய கதை: (1) பிறப்பு வரலாறு; சிதம்பரன் யாரென் பது; இருவரும் ஒருவரையொருவர் காதலித்தமை (2) மலடி தந்த செல்வத்தின் செருக்கால் சிவகாமி சிதம்பரனை அலட்சியம் செய்தல் (3) அதனை அவன் குறிப்பாலுணர்த்தியும் அவள் உணரா மையால் அவன் வெளியேறல் (4) காலஞ்செல்ல சிவகாமி தவறை உணர்ந்து காத்திருத்தல் (5) பொறுக்க முடியாமல் அவனைத்தேடி அவள் புறப்பட்டமை.

பகுதி III

1. (அ) பாரசீகப் பெரும்புலவர் ஸஅதியால் அவரது நண்பர் ஒருவருக் குக் கூறப்பட்டது. புலவர் ஸஅதி, இளமையில் எழிலுடன் விளங்கிய ஒரு நண்பரைச் சந்தித்தார். நண்பரது முகம் முன் னைய அழகின்றித் தாடி முளைத்துக் கறுத்திருந்தது. அதனை மேற்கண்டவாறு கூறினார்.

(ஆ) சிரிசத் தெரிந்த பாரசீகர் என்னுங் கட்டுரையில் வரும் ஒரு ரோம் புருத்துவர் ஒருவருக்கு அவரது மருத்துவத் திறமையைக் கேலிசெய்யும வகையில் மேற்கண்டவாறு கூறப்பட்டது.

(இ) அன்னத்தால் நளனுக்குக் கூறப்பட்டது பெண்கள் அன்னத்தைப் பிடித்து நளனிடம கொடுத்தலும் அன்னம் கலங்கிற்று. பின், நளன வார்த்தைகளால் கலக்கம் நீங்கி, தமயந்தி, பெண்மை என்னும் அரசை ஆளும் முறையைச் சொல்லி, அவளது இடை யின் மெலிமைத் தன்மையைக் காட்டி, அவள் அழகை மேற் கண்டவாறு கூறியது.

2. (அ) ஏந்துவாட்கொலை ..... சகாயனே.

(1) பொருள்: கொலைத் தொழில் செய்யும் வீரரை நம்பினாலும் கல்வரை நம்பினாலும் கரடி, சிங்கம், யானை, யாளி முதலி யவற்றை நம்பினாலும் வெளியே நட்பும் மனத்திலே பகைமை யும் கொண்ட உடன்பகைவரை நம்பக்கூடாது.

(2) எண்ணம்: வீரர், கள்வர், கொடிய மிருகங்கள் என்பன நேருக்கு நேர் எதிர்ப்பன. உட்பகைவர் நுனிநாவில் அமர்தமும் அடிநாவில் நஞ்சும் உடையவர்கள். அவர்களின் எண்ணத்தை அறிய முடியாது. எந்தவேளையில் எது செய்வர் என அனுமானிக்க இயலாது. அதனால் அவரை நம்பலாகாது.

(ஆ) 'வழிமேல் விழிவைத்து ..... அன்னவர்'

(1) பொருள்: அன்னம் நளனிடமிருந்து தமயந்தியிடஞ் சென்றதும் அவன் காதலால் ஏக்கமுற்று, அன்னஞ் சென்றவழியைப் பார்த்துக் கொண்டிருந்தான்; ஒலி பொருந்திய நெற்றியையுடைய தமயந்தி என்னும் பெயரைக் கேட்கும் ஆவலோடு காதை வைத்துக் கொண்டிருந்தான்; காதல் மயக்கம் என்னும் சுழற்சியில் மனத்தை விட்டுச் சோர்ந்திருந்தான். அப்போது வானிலே வெண் முகிற் கூட்டம் ஓட, அதனோடு அன்னம் வருவதைக் கண்டான்.

(2) எண்ணம்: நளன் தமயந்திமேற் கொண்ட எல்லையற்ற பெருங் காதலைக் காட்டுவதே புலவனது எண்ணம். அதனை 'விழி வைத்தல்', 'செவிவைத்தல்' 'அயர்தல்' என்னும் மெய்ப்பாடுகளைக் காட்டுவதன்மூலம் புலப்படுத்துகிறார்.

3. (1) பொய்கையில் அன்னம்: தாய் தொடையில் மெல்லத் தட்டத் துயிலும் குழந்தைபோல, தாமரை மலரிலிருந்த அன்னம் அலைகள் மெல்ல அசைக்கத் துயின்றது.

(2) அன்னத்தின் மயக்கம்: பெண் ஒருத்தி உடுத்திருந்த நீலத்துகிலிற் பதித்த இரத்தினக் கற்களின் நிழல் குளத்தில் தோன்றல். அதனை அன்னம் செந்தாமரை என எண்ணிக் கௌவுதல்; ஏமாறுதல்.

பகுதி I — செயல் 10.

1.	(3)	2.	(4)	3.	(2)	4.	(4)	5.	(1)	6.	(2)
7.	(4)	8.	(3)	9.	(1)	10.	(4)	11.	(2)	12.	(3)
13.	(4)	14.	(4)	15.	(2)	16.	(2)	17.	(1)	18.	(3)
19.	(2)	20.	(2)	21.	(2)	22.	(2)	23.	(2)	24.	(3)
25.	(2)	26.	(3)	27.	(1)	28.	(4)	29.	(1)	30.	(4)
31.	(4)	32.	(2)	33.	(3)	34.	(3)	35.	(1)	36.	(2)
37.	(3)	38.	(1)	39.	(3)	40.	(3)				

பகுதி II

1. (அ) பெருஞனத் தொடர்புச் சாதனங்களில் .....

(1) பங்கு: நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் இந்த போதும் செல்வாக்கு இழக்காமை; ஏழை பணக்காரன் என்னும் வேறுபாடின்றி மக்கள் வாழ்வோடு இணைந்தமை. (2) பலன்:

செய்திகளை விரிவாகத் தருதல்; கவிதை, கதை முதலியன வாயிலாக மனத்தை வளம்படுத்தல்; விளம்பரங்களைத் தாங்கிப் பயன்படுதல் (3) பண்பு: ஒரு நாட்டின் அரசியல், பொருளாதாரம் முதலியவற்றை மாற்றும் வல்லமை; பேணிக்காத்து வேண்டிய நேரத்திற் பயன்படுதல்.

(ஆ) வினாவிலேயே குறிப்புக்களும் அமைந்துள்ளன.

(இ) இது மாணவரின் ஆக்க முயற்சி; குறிப்புக்கள் அவர்கள் கற்பனைக்கு இடையூறாகும்.

(ஈ) செழிப்பு நிறைந்த கிராமம் ஒன்றில் நீர் கண்ட காட்சிகள்.
(''40 கட்டுரை மஞ்சரி'' யிலுள்ள ''எனது மனங்கவர்ந்த ஒரு கிராமம்'' என்னும் கட்டுரையைத் துணைக்கொள்க)
(1) கிராமம் இன்னதென்பதும் எல்லையிலுள்ள காட்சிகளும்,
(2) மருதநிலச் சோலை, வயல், தோட்டம் முதலியன.
(3) மக்கள் வாழுமிடம், எளிமையான வாழ்க்கை முறை,
(4) கலைவளர்ச்சி; சமயநம்பிக்கை

2. (அ), (ஆ) இவ்விரு வினாக்களின் விடைகளில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் வினாவிலே தரப்பட்டுள்ளன.

3. கருக்கம் எழுதுவதற்கான குறிப்புக்கள்
(1) ஆயனரின் சிற்பவேலைக்கு இடையூறு விளைவித்தவை.
(2) அதனால் அவர் எடுத்த முடிவு. (3) அம்முடிவுக்குரிய பிறிதொரு காரணம்.

4. தாள் + தலை = தாடலை. இதில் நிலைமொழியீறு 'ள'; வருமொழி முதல் 'த்'; ள் + த் = ட்; ள் - பரமான்மா (பதி, த் - சீவான்மா (பசு); ள் + த் = ட்; இஃது ஒன்று மன்று, இரண்டுமல்ல, ஏகம் அல்லது அத்துவிதம். ஆன்மாவும் பரமான்மாவும் கூடும் கூட்டம், தாடலை போற் கடியவை. இவ்வாறு ஒன்றுமின்றி, இரண்டுமின்றிக் கூடும் இப்பக்கூடலை நீ ஏகமெனக்கொள்க.

சிதம்பரன் – பரமான்மா (பதி): சிவகாமி - சீவான்மா (பசு), சீவான்மா பரமான்மாவைப் பிரித்திருப்பதில்லை. பந்தபாச நிலையில் ஆன்மா தடுமாறும்; பின் மெய்யுணர்வு பெற்றுத் தன்னை நடத்துபவன் பதியே என உணரும். அக்கணமே இரண்டும் ஒன்றாய் விடும். சிவகாமியும் மலடி தந்த சொத்தால் மயங்கித் தடுமாறிப் பின்னர். சிதம்பரனே தன்னை நடத்துபவன் என உணர்ந்தாள். அப்போது இருவரும் பிரிவறியாதவர்களாய் ஒன்றாயினர்.

பகுதி III

1. (அ) அன்னத்தால் தமயந்திக்குக் கூறப்பட்டது. நளனிடமிருந்து தூதாகச் சென்ற அன்னம் தமயந்தியைடைந்து, நளனது

கருணை, செங்கோன்மை அழகு என்பவற்றை விபரித்து இறுதியில் அவனே அவளுக்கு ஏற்ற நாயகன் என மேற்கண்டவாறு கூறியது.

(ஆ) தப்ரீஸ் நகரத்தவர் ஒருவரால் பாரசீகப் பெரும்புலவர் ஸஅதி என்பவருக்குக் கூறப்பட்டது. ஒருமுறை ஷிராஸ் நகரைச் சேர்ந்த புலவர் ஸஅதி என்பார் தப்ரீஸ் நகருக்குச் சென்றார். அப்போது அவரைக் கண்ட அந்நகரத்தவர் ஒருவர் அவர் ஊரை விசாரித்தறிந்த பின் ஏளனமாக மேற்கண்டவாறு கூறினார்.

(இ) பாரசீகத்தைச் சார்ந்த காலித் என்பவரால் அராபிய மன்னனான அப்பாஸியக் கலிபா அல்மன்ஸூருக்குக் கூறப்பட்டது. அல்மன்ஸூர் பாரசீகத்தின் மீதுபடையெடுத்து அந்நாட்டரசான நஹ்வர் ஷேர்வானை வென்றான். பின்னர் அவனது அழகிய அரமனையை இடித்துப் பாக்தாத்தில் தனது புதுத்தலைநகரை அமைக்கத் தீர்மானித்தான். அதனை அறிந்த காலித் என்பார் மேற்கண்டவாறு கூறினார்.

2: ''வாழும் செல்வமும்.....மின்னலைப் போலுமே''

(1) பொருள்: செல்வமும் வறுமையும் சக்கரம் போன்றன. இன்பதுன்பமும் இராட்டினம் போன்றன. வாழ்நாளும் உடம்பும் மின்னலைப் போன்றன.

(2) உவமை கூடும் பொருள்: செல்வமும் வறுமையும்; இன்பமும் துன்பமும் ஒருவரிடத்து நிலைத்து நிற்பனவல்ல; மாறிமாறிச் சுழன்றுவருந் தன்மையன. வாழ்நாளும் தேகமும் மின்னல் தோன்றியவுடன் மறைவது போன்று நிலையற்றன.

(ஆ) ''இம்மை பயக்குமால் ..... மருந்து''

(1) பொருள்; கல்வியானது இப்பிறவி எடுத்தமையாற் பெறும்பயனைத் தரும்; பிறர்க்குக் கொடுக்குந்தோறும் குறையாதது; பலரும் பாராட்டும் புகழைத் தரும்; வாழும்நாள் வரை தீமை தராது. ஆகவே, எந்த உலகத்திலும் கல்வியைப்போல அறியாமைநோயை நீக்கவல்ல மருந்து இல்லை.

2. நயம்: தம்மை விளக்கல்: கல்வியறிவுடையாரைப் பலரும் புகழ்வர். அப்புகழே நிலையானது. அவர் பெயரை என்றும் அழியாமற் காப்பது. காமுளராக் கேடின்று: கல்வியால் ஒருவருக்கு ஆக்கமேயன்றிக் கேடில்லை. தாம் வாழும் நாள்வரைக்கும் உறுதுணையாய் அமையும். மம்மர் அறுக்கும் மருந்து — உருவக அணி. மருந்து எனக்கல்வி உரு

வகிக்கப்பட்டமையால் மம்மர் - அறியாமை - நோயென உருவகிக்கப் பட்டது. அறியாமைநோயை நீக்கும் மருந்துகல்வி என்றவாறு.

(இ) முகம்பார்த்து .....விருந்திட்டமன்.

(1) பொருள்: பகைவரை அழித்துக் கழுகு முதலியவற்றுக்கு விருந்தாகக் கொடுத்த நளன், வறியவர் செல்வரின் முகத்தைப் பார்த்து, அவர்கள் கருணையை - மனநெகிழ்வை - எதிர்நோக்கி இருப்பதைப் போல, அன்னம் தமயந்தியின் மிகுந்த காதலைக் கூறும் வார்த்தைகளைக் கேட்டு இருந்தான்

(2) நயம்: முகம் .... போல: இஃது உவமையணி, வறியவர் செல்வரையடைந்து பொருள்பெற அவர்கள் கருணையை எதிர்பார்த் திருப்பது போன்று, நளனும் அன்னத்தின் வார்த்தைகளைக் கேட்டான். இதிலிருந்து நளன் தமயந்திமேற் கொண்ட காதலையும், அவள்தன் மீது காதல் கொண்டுள்ளாளா என்னும் எதிர்பார்ப்பையும் உணரலாம் கேளா இருந்திட்டான் அன்னம் கூறும் வார்த்தைகளைக் கேட்பதே அவனது பெருவிருப்பு; அதனால் எந்தக் குறுக்கீடுமின்றிக் கேட்டுக் கொண்டிருந்தான். கேளாரை வாளால் விருந்திட மன் - நளனது வீரத்தை இத் தொடர் காட்டுகிறது. இத்தகைய வீரன் அன்னங் கூறும் வார்த்தைகளைக் கேட்கத் தவிக்கிறான் என்றால், அவன் கொண்டகாதல், வீரத்தைப் புறங் கண்ட பெருங்காதல் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது.

3. சிரிப்பின் சிறப்பு: (1) ஏனைய உயிரினத்துக்கில்லாத தனிப்பண்பு, (2) துன்பத்தை வெற்றி கொள்ளப் பயன்படுவது சிரிப்பு.
நன்மை; (1) உடம்பில் குருதியோட்டம் கூடும் (2) மனத்திற் புத் துணர்ச்சி உண்டாகும்.



துரித விற்பனையாகின்றன!

இந்நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

செயல்நூல் – ஆண்டு 3
செயல்நூல் – ஆண்டு 4
செயல்நூல் – ஆண்டு 5
செயல்நூல் – ஆண்டு 6
செயல்நூல் – ஆண்டு 7
செயல்நூல் – ஆண்டு 8
செயல்நூல் – ஆண்டு 9
செயல்நூல் – ஆண்டு 10
செயல்நூல் – ஆண்டு 11
30 கட்டுரை மஞ்சரி – ஆண்டு 7
40 கட்டுரை மஞ்சரி – (ஆண்டு 10, 11
கட்டுரை மஞ்சரி பகுதி II (100 சொற் கட்டுரைகள்
ஆண்டு 10, 11)

அடிப்படை இலக்கணம்

ஆண்டு 10, 11.

1987-ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அடிப்படை இலக்கணப் பொருட் கூறுகளை மாணவர் சுயமாக விளங்கிக்கொள்ளும் வகையில் அமைத்தது.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.